
# அன்பின் அலைவரிசை



கௌதம நீலாம்பரன்

கங்கை புத்தக நிலையம்

# அன்பின் அலைவரிசை

கௌதம நீலாம்பரன்

கங்கை புத்தகநிலையம்

23 (பழைய எண். 13), தீனதயாளு தெரு,
தியாகராய நகர், சென்னை - 600 017.

## நூல் குறிப்பு


முதற்பதிப்பு - டிசம்பர் 2002

| | | |
|---|---|---|
| விலை | : | ரூ. 45.00 |
| Title | | Anbin Alaivarisai |
| Author | | Gowthama Neelambaran |
| Language | | Tamil |
| Subject | | Novel |
| Edition | | First Edition<br>December 2002 |
| Pages | | 190 |
| Published By | | Gangai Puthaka Nilayam<br>23 (Old No. 3), Deenadayalu Street,<br>Thyagaraya Nagar,<br>Chennai - 600 017. |
| Price | | Rs. 45.00 |

Laser Typeset at : Sri Krishna Graphics, Chennai - 24. Ph: 24847191

Printed at Malar Printers 044-8224803

# குறிஞ்சிப் பூ!

தமிழ்த் திரையுலகின் விபரீத போக்கை எள்ளி நகையாடி துள்ளலுடன் ஆரம்பிக்கிறது அன்பின் அலை வரிசை. வில்லனை ஹீரோவாக்கி காட்டும் இயக்குநர்களைச் சாடுகிறது, வீரியத்துடன்.

பொய்கலப்பில்லாமல் அன்பின் எல்லைத் தாண்டி பயணப்படும் அன்பின் அலைவரிசை நாவல் சமுதாயப் போக்கு, மனிதர்களின் மனங்களை அபகரித்தது.

அன்பின் எல்லையில் கிடைப்பது பேரானந்தம் அல்லவா?

இந்த நாவலில் கிடைப்பது இதுதான்.

மலையோரம் வீசும்காற்று மற்றுமொரு சுகமானத் தென்றல்.

சரித்திர நாவல்களைப் படைத்து வந்த சீனியர் ரைட்டர் கௌதம நீலாம்பரன் சமூக நாவல்களிலும் அரசாட்சி செய்திருக்கிறார்.

குடும்ப நாவல் என்ற பெயரில் குப்பை நாவல்களை கடைப்பரப்பும் சிலர் நடுவே சுலபநடை; சரித்திர சமூகப் பார்வையான ஒரு குறிஞ்சிப் பூவாய் அன்பின் அலைவரிசை!

படித்துப் பாருங்கள். கோமேதங்களை நீங்களும் அடையாளம் காணுங்கள்.

*பிரியமுடன்,*

**சுப்ரஜா**

*சென்னை - 600 017.*

# என்னுரை...

அன்பின் அலைவரிசை - மனோ எழுச்சியின் தீவிரத்தால், எண்ண அலைகளைப் பீறிட்டு எழச்செய்து, உத்வேகத்துடன் ஓர் உணர்வுப் போராட்டம் நிகழ்த்தி, காலத்தின் கரத்தால் விலக்கப்பட்டிருந்த ஓர் உறவின் இழையைத் தேடிப்பிடித்துப் பற்றிக் கொள்ளும் இளம் பெண்ணின் கதை.

மனம் எனும் மாய இழை தானே மனித குலத்தையே இணைத்து வைக்கிறது. அந்த இழை சற்று நைந்து விலகி விடுவதால்தானே உறவுகளில் விரிசல்கள் விழுகின்றன. அதை மீண்டும் சரி செய்ய வேண்டுமெனில், மனோ சக்தியைத் தானே பயன்படுத்த வேண்டும். மனத்தின் ஆற்றலைச் சரியாகப் புரிந்து கொள்பவர்கள் பிறரை எளிதாக வசீகரித்து விடுகிறார்கள். அதனால் அன்பு மலர்கின்றது. உள்ளம் பூந்தோட்டமாகிறது!

அப்படியொரு அற்புத வித்தையைத்தான் ரஞ்சனி இக்கதையில் நிகழ்த்திக் காட்டுகிறாள்.

உள் உலகில் தேடத் தெரிந்தவர்களால், வெளியுலக வெற்றிகளை எளிதாக்கிக் கொள்ள முடிகிறது.

பாம்பு போன்ற சில உயிரினங்கள் தன் இரையை வசிய வலை வீசிப் பிடிப்பதாக உயிரியல் வல்லுநர்கள் கூறுகிறார்கள். வசியக் கலை ஒன்றும் மோடி வித்தைக்காரர்களுக்கு மட்டுமே உரியதல்ல. அது வாழ விரும்புவோர் அறிய வேண்டிய ஓர் உன்னதமான வாழ்க்கைக் கலை.

'மலையோரம் வீசும் காற்று' கதையிலும் இதே போன்றதொரு விஷயம் மறுஜென்மப் பின்னணியில் பேசப்படுகிறது. சுவாரஸ்யமாகப் படிக்க மட்டுமல்ல; சிந்திக்கவும் வைக்கிற கதைகள் இவை.

முன்னுரை வழங்கிய இனிய எழுத்தாள நண்பர் சுப்ரஜாவுக்கும், வானதி பதிப்பகத்தாருக்கும் என் இனிய நன்றிகள்.

**- கௌதம நீலாம்பரன்**

# 1

அந்தச் சம்பவத்தை ரஞ்சிதாவால் மறக்க முடிய வில்லை. அந்தக் காட்சி அவள் கண்களைவிட்டு அகல மறுத்து, உறுத்திய படியே இருந்தது. விழிகளை மூடினால் போதும், சின்னத்திரை சுவிட்சை ஆன் செய்ததுபோல், அந்தக் காட்சி விரிந்து கொண்டே இருக்கிறது.

'என்ன செய்து அதை மறப்பது?

எப்படி அந்த ஆபத்திலிருந்து தப்புவது?'

ஒன்றும் புரியவில்லை. ஒரு வழியும் புலப்பட வில்லை.

ஈவ் டீஸிங் பிரச்சினைதான். வேறு ஒன்றுமில்லை.

வழக்கமாக அவள் பள்ளி செல்கையில் ஒருவன் பின்தொடர்கிறான். நாளுக்கு நாள் அவன் தொல்லை அதிகமாகிறது.

ரஞ்சிதா, கிராமத்திலிருந்து மூன்று மைல் தொலை விலுள்ள பக்கத்து டவுனில் சென்று ப்ளஸ் ஒன் படித்து வருகிறாள். போய் வருவதெல்லாம் சைக்கிளில்தான். வழியில்தான் இந்தத் தொல்லை.

அவன் ஒரு பாலத்தின் மீது உட்கார்ந்திருப்பான். கூடவே இரண்டு மூன்று தடியன்கள். பெண்களைக் கண்டால் இளிப்பது, வழிவது, விசிலடிப்பது, ஊளை யிடுவது... சரியான ஜொள்ளன்கள்.

'சே...' என்றிருக்கும். அந்த இடத்தைத் தாண்டும் வரை ரஞ்சிதா மனசுக்குள் கந்தர்சஷ்டிக் கவச வரிகளை வேகம் வேகமாக உச்சரிப்பாள். ஏதோ பைசாசங்களைப் பார்த்துவிட்ட அச்ச உணர்வு அவளை ஆக்கிரமிக்கும்.

'ஜொள்' விடுபவனையெல்லாம் நேசித்துதான் ஆக வேண்டுமென்றால், பெண்களின் கதி என்னவாகும்? இதை ஏன் இவர்கள் நினைத்துப் பார்ப்பதில்லை?

போகிற வழியில் இந்த ஒரு பாலம்தானா இருக்கிறது? டவுனில் கடைத்தெரு, பாலக்கரை, முச்சந்திகள், பள்ளி அருகில் என்று குரூப் குரூப்பாக இப்படி எத்தனையோ ஜொள்ளுக் கேஸ்கள் உண்டு. ஒரு பெண் இத்தனையும் தாண்டித்தான் பள்ளிக்கூடம் சென்று வர வேண்டியிருக்கிறது. எத்தனை அசடு வழிஞ்சான்களைக் கண்டும் காணாமலும் தினமும் கண்ணையும், கவனத்தையும் இறுக்கியபடி போய்வர வேண்டியிருக்கிறது. எங்கேயாவது ஓரிடத்தில் நின்று, எவனிடமாவது, எதற்காகவாவது ஒரு வார்த்தை பேசத்தான் முடியுமா?

ஒரு பார்வை, ஒரு புன்னகை போதும் இவர்களுக்கு. அதைப் பிடித்துக் கொண்டு மளமளவென்று முன்னேறத் துடித்து விடுவார்கள். முன்னேறுவது என்ன... எல்லாம் பின்னலைச்சல்தான்.

கண்ணலைச்சலைத் தவிர வேறெங்கும் லாயக்கற்ற காளையர் கூட்டம் தரும் காதல் தொல்லைக்கு இணையாக கார்கில் பார்டரில் தீவிரவாதிகள் அளிக்கும் தொல்லைகூட பெரிதாக இருக்க முடியாது. அங்கேயாவது அவர்கள் வாலாட்டினால் பதிலடி கொடுக்க இந்திய ராணுவம் இருக்கிறது. இங்கே இதுபோன்ற பாலக்கரைகளிலும், பஸ் நிறுத்தத்திலும் நின்று இளம்

பெண்களை ஈவ்டீஸ் செய்யும் ரோடுசைடு ரோமியோக் களைத் தரையில்போட்டு, நாலு மிதி மிதித்து நசுக்கித் தரதரவென்று இழுத்துச் செல்ல யார் இருக்கிறார்கள்?

ரஞ்சிதாவின் மனக்குமுறலையெல்லாம் வார்த்தை களில் வடித்தால், இளைஞர் உலகம் தாங்காது. அத்தனை வெறுத்தாள் அவள். தோழிகளோடு அவள் இத்தகைய ஜொள் ஆசாமிகள் பற்றிப் பேசிச் செல்வதையெல்லாம் நீங்கள் கேட்க நேர்ந்தால், மிரண்டு போவீர்கள்.

“டீ பானு, உன்னை சைட் அடிக்க நிக்கறான்னு சொன்னியே, அவனை அடையாளம் காட்டுடி.. நீ அடிக்கலேன்னா, நான் செருப்பைக் கழட்டிப் பிச்சு உதறிடறேன்” என்பாள்.

“ஏண்டி சுலோ, உன் மேல வேணும்னே. வந்து வந்து இடிக்கறான்னியே, ‘அவனைக் கன்னத்துல அறைஞ்சு, மூஞ்சில காறித்துப்பிட்டு வாடி’ன்னு சொன் னேனே... செஞ்சியா, இல்லியா?” என்று விசாரிப்பாள்.

ஒரு சமயம் ரஞ்சிதா, டவுன் தியேட்டரில் தோழி களோடு மேட்னி ஷோ பார்க்கச் சென்றாள். அன்று பள்ளியில் எதற்காகவோ திடீரென்று அரைநாள் லீவு விட்டிருந்தார்கள். தோழிகளின் கட்டாய அழைப்பால் அவளும் மேட்னி ஷோ பார்க்கச் சம்மதித்தாள். அந்தப் படத்தின் நாயகன், இளம் பெண்களின் இதயத்தில் இடம் பிடித்தவன். நாலு மாணவிகள் கூடி நின்று ஐந்து நிமிடம் பேசிக் கொண்டிருந்தால் அதில் நான்கு நிமிடம் அவனைப் பற்றி பேச்சுதான் இருக்கும். ‘சரி... நாமும்தான் அவன் படம் ஒன்றைப் பார்த்து வைப்போமே’ என்று எண்ணித்தான் அன்று ரஞ்சிதா அந்த சினிமாவுக்குப் போனாள்.

படம் ஆரம்பித்ததே ஒரு கல்லூரி வளாகத்தில். அதில் பள்ளிக் கல்வியைக் கூட ஒழுங்காக முடித்திராத நாலைந்து தடியன்கள் கல்லூரி மாணவர்களாகத் தோன்றினர். ஆபாசப் பேச்சு, அருவருப்பான ஆட்டம் பாட்டம், சிகரெட் புகை தண்ணியடித்தல் என்று ஏகப் பட்ட இலக்கணங்களோடு அந்த மாணவப் பிரகிருதிகள் கதாநாயகனோடு சூழ்ந்து நின்று கும்மாளமடித்தனர். ஒரு புதிய பெண் வந்து சேருகிறாள். அவளைக் கலாய்க்கிறது இந்தக் கும்பல். அவள் மீது ஹீரோ காதல் கொள்கிறான். விலகி விலகிச் செல்லும் அந்தப் பெண்ணை விட்டேனா பார் என்று துரத்துகிறான் அந்த ஹீரோ.

பொறுத்துப் பொறுத்துப் பார்த்த அந்தப் பெண் ஒருநாள் அவனிடம், 'உன் செயல் தகாத செயல், உன் முயற்சி வீண். எனக்கு ஒரு முறைப் பையன் உண்டு. நான் அவனைத்தான் மணக்கப் போகிறேன். ஒழுங்காக என்னைப் படிக்கவிடு' என்று இதம்பதமாக எடுத்துக் கூறினாள். ஊகூம். அவன் கேட்பதாக இல்லை. அந்தப் பெண்ணை மோட்டார் சைக்கிளில் உட்காரவைத்து அழைத்து வந்த அவளின் முறைப் பையனிடமே ஒருநாள் சென்று, 'டேய்... நீ என் வழியில் குறுக்கிடாதே. இனி அவளை உன் பின்னால் உட்கார வைத்து அழைத்து வரக்கூடாது. மீறி வந்தால், உன் உயிருக்கு உலை வைத்து விடுவேன்' என்று மிரட்டுகிறான். அந்த பயந்தாங் கொள்ளி முறைப் பையனும் ஒதுங்கிக் கொள்கிறான். அந்தப் பெண் அப்படியும் அந்த ஹீரோவைத் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. அவன் ஒருநாள் அவளை வழி மறித்து, 'என்னிடம் என்ன இல்லை... என்னை ஏன் வெறுக்கிறாய்?' என்று கேட்டு மிரட்டுகிறான். அவளைப் பிடித்து உலுக்குகிறான். 'உனக்கு நான்தாண்டி பொருத்

தம்... அந்த முறைப்பையன் அலி மாதிரி இருக்கிறான். அவனோடு உன்னை ஜோடி சேர்த்து என்னால் நினைத்தும் பார்க்க முடியவில்லை. நீ அவனை மற... இல்லாவிட்டால் தொலைத்து விடுவேன்' என்று கூறி அச்சுறுத்துகிறான்.

ரஞ்சிதா, 'அடி செருப்பால நாயே...' என்று சத்த மாக கூறிவிட்டு, தியேட்டரைவிட்டு எழுந்து வெளியே வந்துவிட்டாள். அவளால் அங்கே ஒரு கணம் கூட உட்கார்ந்திருக்க முடியவில்லை. என்னவோ, ஏதோ என்று அவள் தோழிகளும் சட்டென்று எழுந்து அவளைப் பின்தொடர்ந்து வந்தனர்.

தியேட்டரில் ஒரு கணம் பரபரப்பு அலை பரவியது. ஆனால், யாரோ ஒருவன், 'அட விடுங்கப்பா... ஸ்கூலை 'கட்' அடிச்சுட்டு வர்ற கேஸுங்க. கூட வந்த எவனாவது கடலை போட்டிருப்பான். இவளுக பெரிய பத்தினியாட்டம் எழுந்துட்டாளுக. போனால் போவட்டும்... பின்னாலேயே நாலு பசங்க எழுந்து போவானுக பாரு... இதுங்கல்லாம் படிச்சுதான் நாடு உருப்படப் போவுதாக்கும்' என்று கத்தினான். தியேட்டரில் சில மாணவர்களும் படம் பார்த்துக் கொண்டிருந்தது உண்மைதான். அடுத்த கணம் படம் பார்க்கிற ஜோரில் எல்லோர் கவனமும் திரும்பியது. சலசலப்பும் அடங்கிவிட்டது.

வெளியே வந்த மாணவிகள் ரஞ்சிதாவிடம் "என்னடி ரஞ்சி, இப்படிப் பண்ணிட்டே...?" என்று கேட்டனர்.

"அடி போங்கடி. இதெல்லாம் என்ன படம்னுடி உட்கார்ந்து பார்க்கறது? அந்த ஹீரோ ரவுடித்தனம்

பண்றான். இதுக்குப் பேர் காதலா? இதே வேலையை சினிமாவுக்கு வெளியே எவனாவது செய்தா ஜெயிலுக்குத்தான் போக வேண்டியிருக்கும். வரவர சினிமா ஹீரோல்லாம் ரவுடிகளாகத்தான் காட்டப்படறாங்க. இதையெல்லாம் பார்த்து நீங்க வேணும்னா ஈன்னு இளிச்சுகிட்டு உட்கார்ந்து என்ஜாய் பண்ணுங்க. என்னால முடியாதுப்பா. நான் புறப்படறேன்..."

"ஏய்... மழை வர்ற மாதிரி இருக்குடி. பேசாம உள்ளே வா. படம்தானேடி... இதையெல்லாம் சீரியஸா எடுத்துக்கறதா? இது அவார்டு வாங்கின படம்டி..."

"அவார்டு இப்ப யாருதான் வாங்கலே... இதுமாதிரி பெண்களை இழிவுபடுத்தற படத்துக்கெல்லாம் அவார்டு கொடுக்கறவனை இழுத்து வச்சு உதைக்கணும். சரிகாஷாவோட கையைப் புடிச்சு இழுத்தவன் இன்னிக்கு கம்பி எண்ணுறான். அவனைவிடக் கேவலமா ஒரு ஹீரோ. அந்த சம்பவத்தை விட மோசமா ஒரு கதை. அதுக்கு ஒரு சினிமா, அதுக்கு ஒரு அவார்டா?

ஏன்டி, தெரியாமத் தான் கேட்கறேன். அந்தப் பொறுக்கி அந்தப் பெண்ணைப் பிடிச்சு அத்தனை மிரட்டிட்டு, ரொம்பக் கரிசனமா, 'உன்னோட முறைப்பையன் அலி மாதிரி இருக்கான். அவனோட உன்னை இணைச்சுப் பார்க்கவே எனக்கு ஓமட்டுது'ன்னு டயலாக் அடிச்சானே... அதே பொறுக்கி, அந்தப் பொண்ணு கன்னங்கரேல்னு இருந்தா இதே டயலாக் பேசுவானா? ஒரு மாடு மேய்க்கறவன், பன்னி மேய்க்கிறவன் வீட்டுப் பொண்ணு மேலே இந்த அக்கறை அவனுக்கு வருமா? அவளே 'என் முறைப் பையனைத்தான் நான் மணப்பேன்'னு சொன்னப்புறம் இவன் யாருடி அதை எதிர்த்துப் பேச?

அப்பாவியா ஒருத்தன் இருந்தா அலின்னுடறதா? அப்பாவியா, சாதுவா இருக்கற ஒருத்தன் கல்யாணம் காட்சின்னு சந்தோஷப்படக் கூடாதா? அந்த ஹீரோ பேசற ஒவ்வொரு பேச்சும் பச்சைப் பொறுக்கித்தனமா இருக்கு. இதையெல்லாம் ரசிக்கணும்னு நமக்கு என்னடி தலையெழுத்து...?" என்று பொரிந்து தள்ளினான் ரஞ்சிதா.

அவளைச் சமாதானப்படுத்தவும் முடியாமல், அவளை விட்டுவிட்டு அன்று தனியே தாங்கள் மட்டும் படம் பார்க்க விரும்பாமலும் அந்தத் தோழிகள் "சரிடி... இன்னொருநாள் நாங்க வந்து தனியா பார்த்துக்கறோம்" என்று கூறிவிட்டுப் புறப்பட்டனர்.

அவர்கள் அப்படி அந்தப் படத்தை மீண்டும் பார்த்தார்களோ? என்னவோ? தெரியாது. ஆனால், ரஞ்சிதா அதன்பிறகு அந்த ஹீரோ நடித்த படம் எது வந்தாலும் பார்ப்பதே இல்லை.

ரஞ்சிதா காதலை வெறுக்கிறாளா?

காதலர்களை வெறுக்கிறாளா?

யாரும் காதலிப்பதே கூடாது என்பது தான் அவள் கட்சியா?

இதற்கெல்லாம் நீங்கள் பதில் தெரிந்து கொள்ள நினைத்தால், அதற்கு முன் வேறு ஒரு சம்பவத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும். அது...

# 2

ஜோடிக் கிளிகள் மாதிரி இரண்டு சிறுமிகள் ரோடு ஓரமாக நடந்து வருவார்கள். ரொம்ப அழகு. நடந்து வருகிற தங்கக் குத்து விளக்குகள் மாதிரி இருக் கும். கன்னத்தைப் பிடித்து இழைக்கலாம் போலிருக்கும் ரஞ்சிதாவுக்கு. ஏதாவது பேச்சுக் கொடுக்கலாமா? என்று நினைப்பாள். ‘சைக்கிளை நிறுத்தி என்ன பேச்சு வேண்டிக் கிடக்கு’ என்று நினைத்தபடி போய்விடுவாள். ஒருத்தி என்றால் நிச்சயம் பின்னால் கேரியரில் உட்காரச் சொல்லிக்கூட அழைத்துச் செல்லலாம். இரண்டு பேராக இருக்கிறார்கள். பாவம், எதற்காகப் பிரிக்க வேண்டும்? சகோதரிகளா? தோழிகளா? ஒரே வகுப்பில் பயில்பவர்களா?

அந்தப் பெண்களைப் பார்த்தவுடன் தினமும் இப்படி ஏதாவது நினைக்காமல் போக முடியாது ரஞ்சிதாவுக்கு. ரயில்வே கேட்டைத் தாண்டியதும் எங் கிருந்தோ ஒரு செம்மண் ரஸ்தா வந்து மெயின் ரோடில் தொடும். ஒரு பெரிய சரிவில் இறங்கிச் செல்லும் அந்தச் சிறிய சாலை ஆற்றங்கரையை ஒட்டினாற்போல் தோப்பு துரவுகள் நடுவே சென்று, டவுனைச் சுற்றியுள்ள சிறிய கிராமம் ஒன்றை இணைக்கும் போல. ரஞ்சிதா வருகிற நேரம் பார்த்து மிகச் சரியாக அந்தப் பெண்கள் இரண்டும் அந்தப் பாதையில் நடந்து வந்து, மெயின் ரோடில் ஏறும்.

பள்ளி வளாகத்திலும் ரஞ்சிதா அவர்களைத் தினமும் பார்ப்பதுண்டு. பேசத்தான் நேர்ந்ததில்லை. ஏழு அல்லது எட்டாம் வகுப்பு மாணவிகளாக இருக்கும்.

அந்த வகுப்புகள் உள்ள கட்டடம் சற்று பின்னால் தள்ளி ஒதுங்கினாற் போலிருந்தது. கிரவுண்டுக்கு அந்தப் பக்கம் ஒரு சந்தில் நுழைந்து செல்ல வேண்டிருக்கும்.

அந்த இரண்டு பெண்களின் படங்களும் ஒருநாள் நாளிதழ்கள் எல்லாவற்றிலும் இடம் பெற்றன. பத்தி பத்தியாகச் செய்திகள் வெளியாயின. பள்ளிக் கூடமே பரபரப்பாயிற்று. அந்த டவுன் முழுக்க எல்லார் கைகளிலும் அன்றைய செய்தித்தாள்கள் படபடத்தன. கலங்காத உள்ளங்களில்லை. ஈரம் கசியாத கண்கள் இல்லை.

செய்தித் தாள்களில் அன்று அந்தச் சிறுமிகளின் அழகான படங்களும் இடம் பெற்றிருந்தன. அக்கினி அமிலத்தால் சிதைந்து போன முகங்களும் காட்சி அளித்தன.

அந்த கிராமத்தைச் சேர்ந்த ஒரு பையன்தான் அந்த வேலையைச் செய்திருந்தான். அந்த இரட்டைக் கிளிகளில் ஒன்றின் மீது அவனுக்குக் கண். இத்தனைக்கும் அந்தச் சிறுமியை விட ஒன்றரைக் கழுதை வயது அவன் பெரியவன். நல்ல படிப்புமில்லை. நல்ல வேலையும் கிடையாது. டவுனில் எங்கோ ஒரு மூலையில், ஏதோ ஒரு பட்டறையில் வேலை. முரட்டுப் பயல். பட்டணம் போய், ஒன்றிரண்டு வருடம் திரிந்து திரும்பியவன். நல்ல தோற்றமும் கிடையாது. ஆனால் ரோட்டில் போகிற பள்ளி மாணவியின் மீது காதல்.

காதலுக்குதான் 'ஆசை... அதுவும் வெறித்தனமான ஆசை மட்டும் இருந்தால்போதும்; வேறு எவ்விதத் தகுதியும் தேவையில்லை' என்று சினிமா சாத்தான் போதிக்கிறதே! அத்தனை குணக்கேடுகளும் அதில் உசத்தியாகவல்லவா காண்பிக்கப்படுகிறது. ஒவ்வொரு

மூர்க்கனும் தன்னை ஒரு ஹீரோ என்று தான் நினைத்துக் கொள்வான்.

சிவப்பாக இருந்தால், கமல் - அஜீத் - மாதவன் - அப்பாஸ்...

கருப்பாக இருந்தால், கேட்கவே வேண்டாம்... எத்தனை காந்த நடிகர்கள். அப்புறம் கறுப்புதான் எனக்குப் பிடிச்ச கலரு என்று பாடல் வேதவரிகள் வேறு உண்டே.

விடலைகளுக்கு எத்தனையோ இளைய தளபதிகள். ஆக, ஒவ்வொரு பயலும் தன்னை ஒரு ஹீரோவாகத்தான் நினைத்துத் திரிகிறான்... காதல் விஷயத்தில் மட்டும்!

**'இங்கே**
**ஹீரோவாகும்**
**முயற்சியில் -**
**ஒவ்வொருவரும்**
**வில்லனாகிறார்கள்!'**

என்று புதுக்கவிதை எழுதிய கவிஞனைப் பாராட்டத் தான் வேண்டும்.

அந்தப் பையன் தினமும் அந்தப் பெண்ணைப் பின்தொடர்ந்து காதல் வசனம் பேசியிருக்கிறான். சினிமாவில் காண்பிப்பது போன்ற காதல் குறும்புகளும் செய்திருக்கிறான். அவள் அவனைப் பலமுறை 'சீ... போடா' என்றிருக்கிறாள்.

வழிமறித்து, கையைப் பிடித்து இழுத்து வம்பு செய்யவே, அந்த பெண் வீட்டில் சொல்லியிருக்கிறது. தந்தை ஏழைத் தொழிலாளி. அவரும் அந்தப் பையன் வீட்டில் சொல்லி, 'இதெல்லாம் நல்லா இல்லீங்க. பாப்பா

ரொம்ப பயப்படுது. சின்னஞ்சிறிசுகிட்ட போய் எப்படிங்க பேசக்கூடாத விஷயம்லாம் தம்பி பேசுது? கண்டிச்சு வைங்க' என்று முறையிட்டிருக்கிறான்.

அவனோ வீட்டுக்கு அடங்காத பிள்ளை. அவன் பெற்றோர் இதைச் சீரியஸ் விஷயமாக எடுத்துக் கொள்ளவே இல்லை. விளைவு, அவன் மறுபடி வழிமறித்து, 'ஏண்டி வீட்ல போய்ச் சொன்ன? என்னை யாரும் எதுவும் செய்ய முடியாது. உன்னை ஒருநாள் தூக்கிட்டுப் போய் கரும்புத் தோட்டத்துல வச்சு... எல்லாம் முடிச்சுடுவேன். மரியாதையா என்னை லவ் பண்ணு. ராஜாத்தி மாதிரி வச்சுக்கறேன். தாலி வேணும்னாலும் கட்டிடறேன்' என்று கூறியிருக்கிறான். அதற்கும் அவள் பணியாத நிலையில் தான் இந்த திராவக வீச்சு நிகழ்ந்திருக்கிறது.

பத்திரிகைகள் அந்தக் கொடூரனின் வாக்கு மூலத்தையும் பிரசுரித்திருந்தன.

அவ ரொம்ப அழகுன்னு திமிர்ல பேசினாங்க. என்னை வச்சுக் காப்பாத்த உனக்கு என்ன யோக்கியதை இருக்குன்னு கேட்டாங்க. காதல்னா காசு பணமாங்க முக்கியம்? அவ என் அன்பைப் புரிஞ்சுக்கலை. வேற ஒரு பணக்காரப் பையன்கிட்ட போய் முறையிட்டா. அவன் ரெண்டு மூணு நாள் சைக்கிள்ல முன்னால ஒண்ணு, பின்னால ஒண்ணுன்னு அந்தக் குட்டிகளை உட்கார வச்சு ஓட்டிகிட்டு வந்து டவுன்ல விட்டான். பார்த்த என் வயிறு பத்தி எரிஞ்சுச்சு. அவன் வந்து எனக்கு அட்வைஸ் பேற பண்ணிட்டுப் போனான். "நான் கண்ணு வச்ச பொருள் கைமாறினா... வேற ஒருத்தன் ஆசை வச்சா என்னால எப்படிங்க தாங்கிக்க முடியும்? அதான் எனக்குக் கிடைக்காதது வேற எவனுக்கும்

கிடைக்கக் கூடாதுன்னு அவ அழகைச் சிதைச்சேன். குறுக்க வந்து விழுந்ததால அவ கூட வந்த பொண்ணும் பாதிச்சுடுச்சு. அதுக்கு நான் பொறுப்பில்ல...''

இந்த ரீதியில் இருந்தது அவன் வாக்குமூலம். அவனுடைய காதல் தீயில் அந்த இளங்கொடி அடுத்த இரண்டு நாட்களில் முற்றாகப் பொசுங்கிப் போயிற்று. அவளோடு துணை சேர்ந்து நடந்த பாவத்திற்காய் அந்த மற்றொரு பெண் பூமுகம் கருகிக் கொடூரமாகி... உயிர் பிழைத்தாலும் இனி நடைப்பிணமாய்...

ஏன் இந்த விபரீதம்?

இப்படியொரு காதல் எப்படி சாத்தியம்?

'உன்னைப் பிடிக்கவில்லை... போ' என்று ஒருத்தி புறக்கணித்த பின்பும் விடாது துரத்தும் கயமைக்குப் பெயர் 'காதல்' என்று எப்படி இருக்க முடியும்? காட்டு மிராண்டித் தனமல்லவா அது?

இந்த வன்முறைக் காதலை போதிக்கும் சினிமா, சமூகத்தில் வக்கிரத்தன்ம் வளரத்தானே துணை போகிறது!

ரஞ்சிதா இந்தச் சம்பவத்திற்குப் பிறகுதான் சுத்தமாக மாறிப் போனாள். அவளுக்குக் காதல் எனும் சொல்லே கசந்தது. வெறுத்தது. அதைக் கொடுமையிலும் கொடுமை என்றே அவள் எண்ணினாள்.

அந்தச் சிறுமிகளின் பால் வடியும் வதனம் இன்ன மும் அவள் கண் முன்னே காட்சியளித்தன. அந்தச் சாலை ஓரம் இன்னமும் அவர்கள் ஒல்கி ஒசிந்து நடப் பது போல் அவளுக்குப் பிரமை தட்டுகிறது. தினமும், ரயில்வே கேட் டைத் தாண்டியதும் அவள் மனத்தை

நசுக்கிப் பிழிவதுபோல் இருக்கிறது. 'சே... எத்தனை அழகான பெண்கள். அவர்கள் கதி இப்படி ஆகிவிட்டதே' என அவள் எண்ணாத நாளில்லை.

இந்த நிலையில்தான் அவளே அப்படியொரு அச்சுறுத்தலுக்கு உள்ளானாள்.

அந்த பயங்கரத்தை இப்போது நினைத்தாலும் அவள் உடல் நடுங்குகிறது. உள்ளம் பதைக்கிறது.

என்ன நிகழ்ந்தது என்றுதானே கேட்கிறீர்கள்?

# 3

அரங்கநாதன்

இருபத்திரண்டு வயதுக் காளை. கொஞ்சம் வசதியான குடும்பத்து வாலிபனும் கூட. கீமாத்தூர் பண்ணையார் குடும்பத்தின் வாரிசு. மச்சு வீட்டுக்காரங்க என்னும் அடைமொழியால்தான் ஊரார் குறிப்பிடுவர்.

'மச்சுவீட்டுக்காரர் மவனே' என்று ஊர்ப்பெரிசுகள் அழைத்தாலும், வாலிப சகாக்கள் அவனை ரங்கு என்றோ, ரங்கப்பா என்றோதான் அழைப்பர். எப்போதும் அவன் பின்னால் திரிய ஒரு பட்டாளம் இருக்கும். ஆற்றங்கரை, குளக்கரைகளில் பெண்கள் குளிக்கும் துறைப்பக்கமா நோட்டம் விட்டுத் திரிவதுதான் வேலை. வயல்களில் நாற்று நடும், களைபிடுங்கும் பெண்களிடம் போய் ஏதாவது வம்பளப்பது, சினிமாப் பாடல் பாடுவது, சீட்டியடிப்பது, தோப்பு துரவுகளில் சுற்றுவது என்று தண்ணிதெளித்து விடப்பட்ட கேஸ்கள் இதுகள்.

படிச்ச பசங்க என்கிற வெட்டிப் பெருமையில் குழாய் போட்ட பசங்க போக்கு அப்படித்தான் இருக்கும். குனிஞ்சு நிமிந்து வேலை செய்ய உடம்பு வணங்காது. 'உம்... பார்க்கலாம்... இவனுவளுக்கும் ஒரு நல்ல வேலை கிடைச்சு முன்னுக்கு வராமலா போயிடுவா'னுக என்று அதீத நம்பிக்கையில் லைஸன்ஸ் வழங்கப்பட்ட, ஓரளவு வசதியான வீட்டுப் பிள்ளைகள். அதிலும் ரங்குவின் பெருமை சொல்லிமாளாது.

டவுன் ஹைஸ்கூலில் எட்டாவதில் இருந்தே ஒவ்வொரு வகுப்பிலும் இரண்டிரண்டு வருடம் அமர்ந்து, ஸ்டாங்கான அடித்தளத்தில் கல்வி பயின்றவன். நோஞ்சான் பிள்ளைகள் நடுவே ஓங்கோல் காளைமாதிரி இருந்த அவன்தான் எப்போதும் லீடர். பையன்களை 'டேய் இங்க வாடா' என்று அழைத்து, எதற்காகவாவது பளார் என்று அறைந்து விடுவான். ஆசிரியர்களையும் மதிக்கமாட்டான். 'ரங்குவோட பேர் முன்னால ஒரு கு சேர்த்துட்டா ரொம்ப பொருத்தமா இருக்கும்' என்று எல்லோருமே அவன் தலைக்குப் பின்னால் கேலிபேசி சிரிப்பர்.

இந்தப் பெருமையெல்லாம் இரண்டு வருடங்கள் முன்புதான். இப்போது அவன் பள்ளி மாணவனல்ல.

பள்ளி இறுதியில், கோட்டடித்து, இரண்டு முறை தனியாகத் தேர்வெழுதி ஒன்றும் ஒத்துவராமல் படிப்புக்கு டாட்டா காட்டி விட்டவன். இப்போதைய பணி, ஒரு கிலோ மீட்டர் ரோடு பக்கம் வந்து, பாலச் சுவரில் உட்கார்ந்து, பள்ளி செல்லும் மாணவிகளுக்கு டாட்டா காட்டுவதுதான்.

அந்த ரங்கப்பன்தான் ரஞ்சிதாவின் மீது கண் வைத்தான். ரஞ்சிதா முதலில் பஸ்ஸில்தான் பள்ளி சென்று வந்தாள். மேலமங்கலம் கிராமத்திலிருந்து அரைமைல் நடந்து வந்து, மெயின் ரோட்டில் பஸ் ஏறி டவுனுக்குச் செல்ல வேண்டும். வெகுதூரத்தில் அவள் ஓட்டமும், நடையுமாய் வரும்போதே பஸ் வருவது தெரியும். என்ன தான் மூச்சு வாங்க ஓடி வந்தாலும். கணப்பொழுதில் மிஸ்ஸாகிவிடும். பிறகு நெடுநேரம் காத்துக்கிடக்க வேண்டும். அப்படியே பஸ் வந்தாலும் அடைசல், நெரிசல்,

தொங்கல் என்று கூட்டம் திணிந்து கிடக்கும். அதனுள் ஏறி, நசுங்காமல் பயணிக்க முடியாது. அதிலும் இடி மன்னர்களின் வழிசல், வருடல் என்று ஆயிரம் தொல் லைகள். ஆறுமாதம் இந்த அவதிக்குப் பின் ஒருநாள்,

"அம்மா, என்னால பஸ்ஸில் போக முடியாது. சைக்கிள் வாங்கிக் கொடு. இல்லேன்னா நடந்தே போய் வருகிறேன்" என்று தாயிடம் கண்டிப்பாக கூறிவிட்டாள்.

சைக்கிள் வாங்கப்பட்டது. கிராமத்திலிருந்து செம் மண் சாலை மெயின்ரோடு போகும்வரை கொஞ்சம் சிரமம். பிறகு டவுன் வரை சைக்கிள் சவாரி ஜாலிதான். இடையில் அக்கம் பக்கத்து சிற்றூர்களிலிருந்து வரும் இரண்டொரு சைக்கிள் மாணவிகள் அவளுக்காகக் காத்திருந்து சேர்ந்து கொள்வார்கள். பேச்சு, அரட்டை, சிரிப்பு என்று அந்தப் பயணத்தில் கலகலப்புக்குப் பஞ்சமே இராது. சேலம், கள்ளக்குறிச்சி பஸ்கள் அவ்வப் போது தலை தெறிக்கிற வேகத்தில் தாண்டிச் செல்லும். மற்றபடி பெரும்பாலும் மாட்டு வண்டிகள் தான் அதிகம். எப்போதாவது ஒன்றிரண்டு லாரி கடந்து செல்லும்.

அவற்றுக்கு வழிவிட்டு ஒதுங்கிவிட்டால் போதும். பிறகு அந்தப் பட்டாம் பூச்சிகள் ஒன்றாகக் கைகோர்த்த படி கூட வரிசையாகச் சாலையை அடைத்தபடி சைக்கிள் ஓட்டலாம். கேட்க ஆளில்லை.

ரஞ்சிதாவுக்கு ஆரம்பத்தில் ஒரு சில மாதங்கள் எந்தப் பிரச்சினையும் எழவில்லை. அவள் சைக்கிள் பயணத்தை மிகவும் ரசித்தாள். சாலையோரம் நடந்து செல்லும் கிராமத்து ஆசாமிகள் சிலர், அழகான பெண்ணை எதிரே கண்டதும் ஏதாவது பேச வேண்டுமே என்கிற எண்ணத்தில் 'ஏம் பாப்பா, மணி என்ன ஆச்சு?'

என்று கேட்பர். அவளும் ஒரு கணம் சைக்கிளை நிறுத்தி, கையை உயர்த்தி மணி பார்த்துச் சொல்லிச் செல்வாள். இளம் சிறுமிகள் சிலர் பள்ளி செல்கிற வயதில், அதற்கு வாய்ப்பில்லாத சூழலில், வயல் வேலைகளுக்குச் செல்வர், பசிக்குப் பனங்கிழங்கை வாங்கித் தின்றபடி நடந்து செல்லும் அது போன்ற சிறுமிகளைப் பார்க்கும்போது ரஞ்சிதாவின் மனம் சங்கடப்படும். அவர்களும் இவளை ஏக்கத்தோடு பார்த்துச் செல்வர். நாமும் இப்படி நல்ல துணிமணிகள் அணிந்து, புத்தகம் ஏந்திப் பள்ளிக்கூடம் செல்ல இயலாமல் போய்விட்டதே என்கிற ஆதங்கம் அவர்கள் கண்களில் புலப்படும்.

ரஞ்சிதா எப்போதும் ஒரு நல்ல காரியம் செய்வாள். வழியில் யாராவது ஏழைச் சிறுமி நடந்து சென்றால், தன் சைக்கிளில் உட்கார வைத்துக் கொண்டு செல்வாள். அது பள்ளிக்கூடம் செல்கிற பெண்ணா, வேலைக்குச் செல்கிற பெண்ணா என்று பார்ப்பதில்லை. போகிற வழியில் நடந்து சென்றால் போதும். 'எங்கே போற, வா... என் சைக்கிளில் ஏறிக்கொள். இடம் வந்ததும் இறங்கிக் கொள்' என்று அழைப்பு விடுப்பாள்.

காலாண்டுத் தேர்வு முடிந்து, லீவுக்குப் பின் பள்ளி திறந்ததும் ஒருநாள் அவள் வழக்கம்போல் சைக்கிளில் வந்து கொண்டிருந்தாள். இன்னும் பாடங்கள் சரிவர நடத்த ஆரம்பிக்கப் படவில்லை என்பதால், அவள் ஒரே யொரு நோட்டுப்புக்கை மட்டும் பின்னால் கேரியரில் வைத்து எடுத்து வந்தாள். பாலத்து மேட்டில் ஏறி இறங் கும்போது அது எப்படியோ நழுவிக் கீழே விழுந்திருந்தது. எதிரே வருகிற பஸ்ஸுக்கு வழிவிட்டு ஒதுங்கிய கவனத் தில் அவள் இதைக் கவனிக்கவில்லை.

பின்னாலிருந்து யாரோ கைதட்டுவது கேட்டது. அவள் சைக்கிளை நிறுத்திக் காலூன்றித் திரும்பிப் பார்த்தாள். ரங்கப்பன்தான் கீழே விழுந்த நோட்டை எடுத்துக் கொண்டு ஓடிவந்து கொடுத்தான்.

"தேங்க்ஸ்'... என்று கூறி, நோட்டை வாங்கியவள்,

"நீங்க எதுக்கு ஓடிவந்தீங்க. குரல் கொடுத்தா நானே திரும்பி வந்து எடுத்துக்கிட்டிருப்பேன்ல..." என்றாள்.

"அதனால என்னங்க... நானும் நீங்க படிக்கிற ஸ்கூல்ல படிச்ச ஓல்டு ஸ்டூடண்ட்தான். ஓ.கே நீங்க போங்க..." என்றான்.

ஒரு சாதாரண நிகழ்ச்சி, இதை வைத்துக் கொண்டு அவன் பிறகு அத்தனை தொல்லைகளை அளிப்பான் என்று அவள் எண்ணவே இல்லை.

ஒரு நூலைப் பிடித்துக் கொண்டு மலையேற முடியுமா?

சிறு துரும்பைப் பிடித்துக் கொண்டு கடலில் நீந்த முடியுமா?

ரங்குவின் முயற்சி அப்படித்தான் இருந்தது. காதல் என்பதன் இலக்கணமே இதுதானோ? ஆனால் அது ஒருதலைக் காதலாக இருந்தால்?

அந்தப் பாலத்தின் மீது எப்போதும் சிலர் உட்கார்ந்திருப்பதை ரஞ்சிதா கவனித்திருந்தாள். அந்த இடம் வந்ததும் சைக்கிளை வேகமாக மிதித்துச் செல்வது அவள் வழக்கம். பொதுவாக அவள் ஆண்கள் மீது எப்போதுமே பார்வை பதிக்காமல் செல்வாள். அம்மாவின் கட்டளை அது. அதிலும் விடலைப் பசங்கள் என்றால், மூச்...

கண்ணை மூடிக் கொண்டு தாண்டிச் சென்றுவிட வேண்டும். அவர்களாக வந்து பேச்சுக் கொடுத்தாலும் நின்று பேசக் கூடாது.

'உதறு,,, ஒதுங்கு... ஓடிப்போ. எந்த வம்பிலும் மாட்டிக் கொள்ளாதே. ஆண்கள் உலகம் பொல்லாதது. உன் கண்பார்வை ஒன்று போதும் அவர்களுக்கு. உடனே உன்னைக் கரம் பற்றி இழுக்கத் துணிந்து விடுவார்கள்.'

இந்த ரீதியில் அம்மா நிறையவே சொல்லி வைத்திருந்தாள்.

பாவம், அவள் பட்ட வேதனைகள் அப்படி. தனக்கு நேர்ந்த கதி தன் மகளுக்கும் நேர்ந்துவிடக் கூடாது என்று அவள் தவிக்கிற தவிப்பு ரஞ்சிதாவுக்கு நன்றாகவே தெரியும்.

'கணவனை இழந்தவள்... வயது வந்த பெண்ணுடன் தனித்து வாழ்பவள். அம்மாவின் பயங்கள் அர்த்த முள்ளவை' என்று சிந்திக்கிற அளவு ரஞ்சிதாவுக்குத் தெளிவு இருந்தது. எனவே தேவையற்ற பிரச்சனைகளில் மாட்டிக் கொண்டுவிடக் கூடாது என்கிற எச்சரிக்கை உணர்வு எப்போதும் அவளுக்கு உண்டு.

ஆனால், விபத்து எப்படி நாம் எச்சரிக்கையாக இருந்தாலும், எதிராளியின் எச்சரிக்கை இன்மையால் நிகழ்ந்துவிடுகிறதோ அதுபோல் ரஞ்சிதாவையும் பிரச்னை எதிர்கொண்டது... அதுவும் காதல் பிரச்னை.

அந்தப் பாலத்தின் மீது தினமும் இளங்காலைப் பொழுதில் 'ரங்கு' வந்து உட்கார்ந்திருந்தான். எப்போதும் போல் ரஞ்சிதா அந்த இடம் வந்ததும் கவனம் திருப்பி, சைக்கிளை விரைவாக மிதித்துச் சென்று கொண்டிருந்

தாள். அவள் பார்வை அந்தப் பக்கமே திரும்ப வில்லை.

இது அவனுக்கு மிகுந்த ஏமாற்றம் தந்தது.

ரங்கு என்ன எதிர்பார்க்கிறான்?

ரஞ்சிதா எதற்காக அவனைப் பார்க்க வேண்டும்?

கீழே விழுந்த அவளுடைய நோட்புக்கை எடுத்துக் கொடுத்தானே, அந்த உலகமகா உபகாரத்திற்குப் பிரதி பலனாக அவள் தினமும் அவனைப் பார்த்து ஒரு புன்னகை வீச வேண்டாமோ... அப்படி நாலைந்து முறை கண்களால் பேசியபின் திடீரென ஒருநாள் 'ஐ லவ்யூ' சொல்லக் கூடாதா என்ன...?

இதுதான் அவன் எதிர்பார்ப்பு!

ஒன்றும் நடக்கவில்லையென்றதும் அவனுக்கு ஏமாற்றமாய், எரிச்சலாய் இருந்தது.

"என்னடா மச்சான். உன் ஆளு உன்னைத் திரும்பிக்கூட பார்க்காம போறா...?" என்று அவன் நண்பர்கள் அவனை உசுப்பேற்றினர்.

"இருங்கடா, அவளைப் பார்க்க வைக்கிறேன், பேச வைக்கிறேன், என் பின்னால சுத்தவைக்கிறேன்..." என்று அவர்களுக்கு ஆறுதல் சொன்னான் அவன்.

"அப்ப இது வெறும் 'சைட்' அடிக்கிற விஷயம்னு எனக்குத் தோணலை. ரங்கு காதல் டயலாக் பேசறமாதிரி எனக்குத் தோணுது" என்றான் ஒருவன்,

"அதில என்னடா சந்தேகம். நான் ரஞ்சிதாவை என் உயிரா நினைக்கிறேண்டா. அவ ஒண்ணும்

பத்தோட பதினொண்ணு இல்லை. அவதான் என் காதலி... என் எதிர்கால மனைவின்னே தீர்மானம் பண்ணிட் டேன்."

"அப்படிப்போடு. அண்ணிபேரு ரஞ்சிதாவா... அதைக்கூட தெரிஞ்சு வச்சுகிட்டியா. நீ பலே ஆளுப்பா..."

"இது என்னடா பிரமாதம்... அன்னிக்கு அவநோட் டுக்கை எடுத்துக் கொடுக்கறப்ப அதுல இருந்த அவ பெயரைப் பார்த்தேன். ஆனா, அதுக்கப்புறம் உங்க யாருக்கும் தெரியாம, ஏன் அவளுக்கே தெரியாம அவ சாயங்காலம் ஊருக்குத் திரும்பறப்ப பின் தொடர்ந்து போய், அவ யாரு என்னங்கறதைத் தெரிஞ்சு கிட்டு வந்துட்டேன்..."

"அட... இதப் பாருடா, நீ சிங்கம்டா மாப்பிளே. அப்புறம் என்ன... அந்தப் பொண்ணு கையைப்பிடிச்சுட வேண்டியதுதானே... அதுவும் நீ சாதி கீதி பார்க்கறவன் இல்லே. பிடிச்சிருந்தா வீட்ல பேசிக் கல்யாணமே முடிச்சிடலாமே..."

"அது ஒண்ணும் பெரிய விஷயமில்லேடா. அவ என்னை நேசிக்கணும். நாங்க காதலிச்சு, அப்புறம் கல்யாணம் கட்டணும்... இதுதான் என்னோட ஆசை. ஒண்ணு செய்யுங்கடா... நீங்க இப்படி கும்பலா இருந்தா அவ என்னைப் பார்க்க மாட்டா. பேசமாட்டா. நாளைலேருந்து என்னைத் தனியா விடுங்க. பாலத்துல வந்து உட்காராதீங்க. நான் அவ மனசுல இடம் பிடிச்சுக் காட்டறேன்..."

ரங்குவின் கட்டளையை ஏற்ற நண்பர்கள் ஒதுங்கி, ஓரம் கட்டினர். பாலத்துக்குதான் வருவதில்லையே தவிர,

அங்கேதான் எங்காவது வாய்க்கால் வரப்புகளில் திரிந்து கொண்டிருப்பர்.

அவன் அப்படித் தனியே வந்து அமர்ந்த பிறகும் ரஞ்சிதா அந்தப் பக்கம் பார்வையைத் திருப்பாமல்தான் சென்றாள். அவனால் அந்த ஏமாற்றத்தைத் தாங்கிக் கொள்ளவே முடியல்லை. நண்பர்கள் வேறு ஏளனமாகப் பார்த்தனர்.

இதே ரங்கு டவுனில் படித்துக் கொண்டிருந்த போது எப்படியெல்லாம் பெண்களிடம் ரகளை செய் வான் தெரியுமா? அவனுடைய முக்கியமான உத்திகளில் ஒன்று, டைம் கேட்பது. ஏதோ அவசரமாக நடப்பவன் போன்று எதிர் வந்து, மணி கேட்பான். அவள் சொன்ன தும் 'தேங்க்ஸ்' கூறி, பின்னால் இரண்டடி நடந்ததும் பழிப்புக் காட்டியபடி நண்பர்களிடம் போய்ச் சேர்ந்து கொள்வான். இது அவன் வாடிக்கை. கண்ணில் அழ காகத் தென்படுகிற எந்தப் பெண்ணிடமும் பேசியாக வேண்டும் அவனுக்கு.

வேர்க்கடலையைத் தின்று, காதோரம் துப்பிவிட்டு, 'மேடம் காதோரம் காக்காய் எச்சம்' என்று கூறி, அவள் துடைத்தும் போகவில்லை என்று இவனே பரோபகாரி மாதிரி போய்த் துடைத்து விடுவான்.

பள்ளி மாணவன்தானே, என்று யாரும் இதை சீரியஸாய் எடுத்துக் கொள்வதில்லை. அவர்கள் நிற்பது, பேசுவது, நன்றி கூறுவது... இதிலெல்லாம் அவனுக்கு ஒரு ரகசிய மகிழ்ச்சி கிட்டிற்று. ஓர் அழகிய பெண்ணின் அருகாமையும், ஸ்பரிஸமும் இத்தனை வசீகரிப்புடையதா என்று பலமுறை அதைச் செய்து பார்த்து வியந்திருக்கி றான் அவன்.

ஒருமுறை ஓர் அழகிய யுவதி நடந்து வருவதைப் பார்த்து, "இப்ப நான் அவளோட மேலாக்கை விலக்கிக் காட்டுகிறேன் பார்..." என்று நண்பர்களிடம் சவால் விட்டான்.

"டேய் ரங்கு, வேணாம்டா, விளையாட்டு வினை ஆயிடப்போவுது" என்றனர் நண்பர்கள்.

"அதெல்லாம் ஒண்ணும் ஆவாது, பயப்படாதீங்கடா..." என்ற ரங்கு, அந்த சாகசத்தைச் செய்து காட்டினான். அவள் அழகான ஒரு பூங்குடையைப் பிடித்தபடி ஒல்கி ஒசிந்து நடந்து வந்து கொண்டிருந்தாள். இவன் அருகில் போய் நின்று ஏதோ பேசியதும், அவள் தன் கையிலிருந்த குடையை அவனிடம் கொடுத்து விட்டுத் தன் மேலாக்கை விலக்கினாள்.

அதன் பிறகு அங்கே ஒரு பரபரப்பு சூழ்ந்தது. அவளை ஆசுவாசப்படுத்தி, குடையையும் கொடுத்தான். அந்தப் பெண் அவனைப் பார்த்துச் சிரித்தபடி நன்றி சொல்லிப் போனாள்.

திரும்பி வந்த ரங்குவிடம் நண்பர்கள் "தர்ம தரிசனம் சூப்பர்டா மச்சான், என்ன மாயம்டா செஞ்சே.. எங்களுக்கு சொல்லக் கூடாதா?" என்று கெஞ்சினர்.

அவனும் அந்த மகாவித்தையை விளக்கினான்.

குடை பிடித்து வந்த குமரியின் எதிரே இயல்பாக நடந்து சென்ற ரங்கு அவளருகில் வந்ததும் எதையோ உற்றுப்பார்த்தபடி "மேடம்... ப்ளீஸ் அப்படியே நில்லுங்க" என்றான்.

திகைத்து நின்ற அவன் "என்னப்பா?" என்றாள்.

அவன் அவளுடைய தோள் பகுதியை சுட்டிக் காட்டி "மேடம்... அதைப்பாருங்க, உங்க தோள்ல தேள். சின்னதா அழகா இருந்ததும் நான் கூட ஏதோ 'புரூச்' குத்திருக்கீங்கன்னு நினைச்சேன். ஆனா அது அசையுது. பயப்படாதீங்க. குடையை என்கிட்ட கொடுத்துட்டு மேலாக்கை அப்படியே உதறுங்க..."

அவள் பதறிப்போனாலும், அவன் சொன்னபடி செய்தாள். குடையை அவனிடம் தந்ததும் அவள் பார்வை தோள்மீது படிய, அங்கு சிறிய தேள் புலப் பட்டதும் பயப்பதற்றம் பரவ, அவள் நடுங்கியபடி மேலாக்கை அவிழ்த்து உதறினாள், கொப்பும் குழைவு மான அவளின் அங்க லாவண்யம் குலுங்கியது. அதைக் கண்டும் காணாததுபோல் நடித்த ரங்கு, வண்ணக் குடை யால் அவள் மானம் காப்பதுபோல் மறைப்பு காட்டிய படி "ப்ளீஸ் மேடம்... நாலுபேர் பார்க்கற இடம், நீங்க புடவைத் தலைப்பை சரி பண்ணுங்க. தேள் இதோ விழுந் துடிச்சி, இதை நான் பார்த்துக்கறேன்..." என்று கூறி, அதை செறுப்புக் காலால் நசுக்கி, அப்படியே மண் ணோடு சேர்த்து அள்ளி அவளிடம் காட்டிவிட்டு ஒரே கணத்தில் சாலையோர சாக்கடை நீரில் வீசியெறிந்தான். குடையை அவளிடம் கொடுக்கும்போது,

"இதுலேருந்துதான் அது உங்க மேல விழுந்திருக் கும். நல்லவேளை, ஜாக்கெட்டுக்குள் அது நுழையறதுக் குள்ர நான் எதேச்சையா பார்த்துட்டேன். இனிமே வீட்ல குடையை எடுக்கறப்ப பிரிச்சு உதறிட்டுப் பிடிங்க மேடம்..." என்று அன்பாக ஆலோசனை வேறு கூறினான்.

அது அவன் லாகவமாக வீசிய ரப்பர் தேள் என்பது புரியாமல், அந்தப் பெண்ணும் நன்றி கூறி விட்டுப் போனாள்.

அதையெல்லாம் இப்போது நினைத்த அவன் அது போன்ற உத்திகளை மறுபடியும் கையாண்டு ரஞ்சிதாவை மடக்க முடியுமா என்று யோசித்தான். அதற்கு அவசிய மில்லாமலே ஒரு நல்வாய்ப்பு அவனுக்கு வந்து அமைந்தது!

# 4

ரஞ்சிதா வந்த சைக்கிள் டயர் அந்த இடம் வந்ததும்தானா பஞ்சர் ஆகவேண்டும்?

ஆயிற்று,

அவள் என்ன செய்வது என்று புரியாமல் இறங்கி, சாலையோரம் சென்று நின்றாள். கை பிசைந்தாள். அக்கம் பக்கம் பார்த்தாள். பாலம் ஏறி இறங்கியதும்தான் அது நிகழ்ந்தது.

'பாலத்தில் ஒருவன் உட்கார்ந்திருக்கிறான். அவனிடம் போய் விசாரித்தால்தான் ஏதாவது வழிபிறக்கும். சுற்றிலும் வெகுதூரத்திற்கு பஞ்சர் ஒட்டுகிற ஆள் யாரும் இருப்பதாகத் தெரியவில்லை. ஒரு மைல் போனால், ரயில்வே கேட் வரும். அதனருகில் ஆள் உண்டு. அது வரை சைக்கிளை உருட்டிக்கொண்டே போக வேண்டியதுதானா....?'

அவளின் தவிப்பை உணர்ந்த ரங்கு, பாலத்திலிருந்து எழுந்து வந்தான்.

"என்னங்க, பஞ்சராயிடிச்சா...?"

"ஆமாங்க, என்ன பண்றதுன்னே தெரியலை. ரொம்ப தூரம் போனாத்தான் பஞ்சர் ஒட்டற கடை

வரும். இங்க பக்கத்துல வேற ஏதாச்சும் இருக்கான்னு தெரியல... அதான்..."

"கவலைப்படாதீங்க. இதுக்கு நான் ஒருவழி பண்றேன்..." என்றவன், "டேய் சோமு... இங்க வாடா..." என்று உரத்துக் குரல் கொடுத்தான். உடனே ஒருவன் எங்கிருந்தோ ஓடிவந்து ஆஜரானான்.

"என்னண்ணே... கூப்பிட்டீங்களா...?"

"ஆமாடா சோமு... நீ என்ன பண்றே, உடனே இந்த சைக்கிளை எடுத்துகிட்டுப் போய் நம்ம காதர் பாய் கடை இருக்குல்லே... அங்க பஞ்சர் ஒட்டி எடுத்தாறே... ஓடு... இவங்க ஸ்கூலுக்கு லேட்டாயிடும். பத்தே நிமிஷத்துல ஓடியா பார்ப்போம்..."

சோமு புளியமரத்தில் சார்த்தியிருந்த ஒரு சைக்கிளில் ஏறிக்கொண்டு வந்து "கொடும்மா உன் சைக்கிளை" என்று அந்த லேடீஸ் சைக்கிளை ஒரு கையில் பிடித்துக் கொண்டு, லாகவமாகத் திரும்பி, பாலத்துக்கு அப்பால் கீமாத்தூர் செல்லும் கப்பி மண்சாலையில் நொடியில் விரைந்து மறைந்தான்.

"வாங்க ரஞ்சிதா. இப்படி ஒரு பத்து நிமிஷம் உட்காருங்க. நொடில வந்துருவான் சோமு..." என்று பாலச் சுவரைக் காட்டி, அவளை அழைத்தான் ரங்கு.

வேறு வழியில்லாத நிலையில், அவனைப் பின் தொடர்ந்து சென்ற அவள் பாலச்சுவரில் உட்கார மனமின்றி, அந்தப் பக்கம் இருந்த புளிய மரத்தினடியில் சென்று நின்று, "இங்கேயே இருக்கேன்...." என்றாள். அவனும் வந்து, "எவ்வளவு நேரங்க நிற்பீங்க... உட்காரலாம்லே..." என்றான்.

"பரவாயில்லீங்க. நான் நிற்கறேன். பத்து நிமிஷம் தானே... பஸ்ஸுக்கு நிக்கற மாதிரிதானே... நீங்க போய் உட்காருங்க..." என்றாள்.

"பரவாயில்லை ரஞ்சிதா... நானும் நிற்கறேன். இது நம்ம ரெண்டாவது சந்திப்பு. உங்களுக்கு உதவற சந்தர்ப் பத்தைக் கடவுள் ரெண்டு முறை எனக்குக் கொடுத்த துக்கு ரொம்ப நன்றி சொல்லணும்..." என்றான் அவன்.

"என்ன சொல்றீங்க... என் பேர் உங்களுக்கு எப்படித் தெரியும்...?"

"அன்னிக்கு உங்க நோட்புக் கீழ விழுந்தப்ப அதை எடுத்து வந்து கொடுத்தது நான்தான் ரஞ்சிதா. அதுல தான் உங்க பேரைப் பார்த்தேன். நீங்க அதுக்கப்புறம் ஒரு தடவைகூட என் பக்கம் பார்வை திருப்பாமலேயே போறீங்க. மனசுக்கு ரொம்ப சங்கடமா இருக்கு. நன்றி யோட ஒரு பார்வை வீசக்கூடாதா? அதுக்கு எனக்குத் தகுதி இல்லையா? என்னைப் பார்த்தா உங்களுக்குப் பிடிக்கலியா...?"

"என்னங்க நீங்க... என்னென்னவோ பேசறீங்க. அதுக்கு அன்னிக்கே நன்றி சொல்லியாச்சு. அது ஒரு சின்ன விஷயம். அதுக்காக நான் தினமும் போறப்ப வர்றப்ப உங்களைப் பார்த்து இளிக்கணுமா? இதெல்லாம் நல்லா இல்லை. சனியன் பிடிச்ச சைக்கிள் வேற இன்னிக்கு இங்க வச்சுக் கழுத்தறுத்துடுச்சி. நீங்க இத வச்சுகிட்டு இன்னும் என்னல்லாம் கற்பனை பண் ணுவீங்களோ தெரியலை. ரொம்ப தொந்தரவுல மாட்டிக் கிட்டேனோன்னு பயமா இருக்கு..."

"பயப்படாதீங்க ரஞ்சிதா..."

"ப்ளீஸ்... என் பேரை மறுபடி மறுபடி சொல்லா தீங்க. ச்சே... இது என்ன வம்பு..."

"ரஞ்சிதா, நீங்க அந்த நோட்டைப் பிரிச்சுப் பார்த் தீங்களா இல்லையா....?"

"இல்லே.. அது சாதாரண ரஃப் நோட்புக். அதுல பாடம் எதுவும் எழுதலே. அன்னிக்கே தொலைஞ்சிருந் தாலும் பெரிய இழப்பு ஒண்ணுமில்ல. அதை வீட்ல எங்க தூக்கிப்போட்டேன்னு கூட இப்ப நினைப்புல இல்லே. ஏன் அதுல என்ன இருக்கு...?"

"என்னோட மனசு இருக்கு ரஞ்சிதா? ப்ளீஸ். அதை இன்னிக்கு அவசியம் பிரிச்சுப் பாருங்க. அப்புறம் இவ்வளவு கோபம் உங்களுக்கு வராது..."

சோமு சைக்கிளுடன் வந்து சேர்ந்தான். ரஞ்சிதா அதை வெடுக்கென்று பிடுங்கிக் கொண்டு, "ரொம்ப தேங்க்ஸ்" என்று கூறி, சிட்டாகப் பறந்து விட்டாள் அந்த இடத்திலிருந்து.

அன்று மாலை வீடு திரும்பியதும் முதல் வேலை யாக அந்த ரஃப் நோட் புக்கைத் தேடியெடுத்துப் பிரித்துப் பார்த்தாள். அதில் ஒரு கடிதம் செருகப்பட்டி ருந்தது. அதைப் பிரித்துப் பார்த்தாள். என்னென்னவோ கிறுக்கியிருந்தான்.

கண்ணே, மணியே என்று வழக்கமான வர்ணிப்பு. உன்னை நான் தினமும் பார்க்கிறேன். வழி மீது விழி வைத்து உன் வருகைக்காகத் தினமும் தவம் கிடக்கிறேன். நீயின்றி இனி எனக்கு வாழ்வில்லை என்றெல்லாம் பிதற்றியிருந்தான். அந்த கடிதத்திலிருந்து அவள் தெரிந்து கொண்ட விஷயம் இரண்டு. ஒன்று அவன் பெயர்

ரங்கநாதன் என்கிற ரங்கு என்பது. மற்றொன்று, அவன் அவளை ரொம்ப நாளாகவே கவனித்து வருகிறான், மனசுக்குள் காதலித்து வருகிறான் என்பது.

இரண்டுமே அவளுக்குத் தேவையில்லாத விஷயம் தான். அவள் அந்தக் கடிதத்தைக் கிழித்தெறிந்தாள்.

ஆனால், காகிதத்தைக் கிழித்தெறிவதுபோல் பிரச்சினையைக் கிழித்தெறிந்து விட முடிவதில்லையே...

"ஹலோ... என்ன ஒண்ணும் சொல்லாம போறீங்க?" என்று மறுநாள் வழி மறித்தான் ரங்கு.

"என்ன சொல்லணும்...?"

"என்ன ரஞ்சிதா இப்படிக் கேட்கறே. நீ அந்த நோட்டைப் பிரிச்சுப் பார்த்தியா? இல்லியா...? நான் ஒண்ணும் உன்னை நேசிக்கிறேன். நீலத்தாவணி காற்றில் படபடக்க நீ சைக்கிளில் வரும் கோலம் பார்க்கறவரை தினமும் என் நெஞ்சு படக் படக்குனு அடிச்சுக்கும். உன் முக தரிசனம் கண்டப்புறம் தான் என் பதற்றம் குறைந்து நிம்மதி மூச்சே வரும். நீ அந்த லெட்டரைப் படிச்சதும் என்னோட டீப் லவ்வைப் புரிஞ்சுக்கிட்டு இருப்பேன்னு நினைக்கிறேன்..."

"மண்ணாங்கட்டி. தள்ளிப்போய்யா... இனிமே இது மாதிரி என் சைக்கிளைப் பிடிச்சு வழிமறிச்சே, நடக் கறதே வேற... நீ நினைக்கிற ஆளு இல்ல இந்த ரஞ்சிதா. பார்த்தா சாதுதான். ஆனா நெருங்கினா நெருப்பு. சுட்டுப் பொசுக்கிடுவேன் ரொம்ப துணிச்சல்காரின்னு பேர் எடுத்தவ நான். என்கிட்ட இந்த வாலாட்டம்லாம் வேணாம். தெரிஞ்சுதா, ஒழுங்கா வீடு போய்ச்சேர்..." என்று கூறி, அவனை உதறித் தள்ளி, சைக்கிளை வேக மாக மிதித்தாள் அவள்.

ரங்கு மறுநாளும் வழி மறித்தான். ரஞ்சிதா பயப்பட வில்லை. "இதோபார் லெட்டர். இது ஒண்ணும் லவ் லெட்டர் இல்லே. போலீஸ்ல நான் உன்னைப்பத்தி தரப்போற கம்ப்ளைண்ட் லெட்டர். போனாப் போவுதுன்னு பார்த்தா நீ ரொம்ப துள்றே. இன்னிக்கு இதை நிஜமாவே கொடுத்துட வேண்டியதுதான். போலீஸ் வந்து உன்னைப் பிடிச்சுகிட்டுப் போய் முட்டிக்கு முட்டி தட்டினாதான் நீ அடங்குவேன்னு நினைக்கிறேன்," என்று ஒரு கடிதத்தை எடுத்துக் காட்டியபடியே அவள் சைக்கிளை ஒதுக்கி ஓட்டினாள்.

அவனும் ஒரு கணம் வெலவெலத்தாற்போல் ஒதுங்கி நின்றான். அதன்பிறகு இரண்டொருநாள் அவனைக் காணவில்லை. 'சரி, பயலுக்கு புத்தி வந்திருக்கும்' என்று நினைத்தாள் ரஞ்சிதா.

ஆனால் வெள்ளிக்கிழமையன்று அவன் அதே பாலத்தில் ஆஜராகியிருந்தான். ரஞ்சிதா வழக்கம்போல் அந்த இடம் வந்ததும் சைக்கிளை வேகமாக மிதித்தாள். எதிரே எங்கிருந்தோ வேகமாக சைக்கிளில் வந்த சோமு, வேண்டுமென்றே அவள் மீது வந்து மோதினான். ரஞ்சிதா நிலை தடுமாறிக் கீழே விழுந்ததும் ரங்கு சர்வ நிதானமாக நடந்து வந்து, "என்னம்மா கண்ணு... அடி பலமா?..." என்று கேட்டபடி அவளைத் தூக்கி நிறுத்தினான்.

அதே சமயம் சோமு அவளுடைய ஸ்போர்ட்ஸ் மாடல் சைக்கிளைத் தூக்கித் தலைக்குமேல் உயர்த்தி, இரண்டு மூன்று முறை சுற்றித் தொபீரென வீசியெறிந் தான். பிறகு மறுபடியும் அவ்வாறே செய்து, உடைந்து

நசுங்கிய வீலில் ஏறி மிதித்தான். முரட்டுப் பயல். அந்த அழகிய சைக்கிள் ஒன்றுக்கும் உதவாத நிலையை அடைந்தது. அப்படியும் விடாமல், அதைத் தூக்கிச் சென்று பாலத்தின் மீதிருந்து ஓடைக்குள் வீசினான். பிறகு அண்ணே... அப்ப நான் வர்றேன். பாப்பா விஷயத்தை நீயே பார்த்துக்க..." என்று கூலாகக் கூறிவிட்டு விரைந்தான்.

ரஞ்சிதா அச்சத்தால் உறைந்து நின்றாள். கோபத்தை வெளிப்படுத்த அவளிடம் எந்த வார்த்தையும் எழவில்லை.

"ஏண்டி, நீ போலீஸ்ல அந்தக் கடிதத்தைக் கொடுக்கலியா...?" என்று கேட்டான் ரங்கு.

"இல்ல. சும்மா உன்னை மிரட்டத்தான் அப்படிச் சொன்னேன். அது வெற்றுக் காகிதம். நீ நல்லவன்னு நினைச்சேன். இப்படில்லாம் பண்ணுறியே. இதுக்குப் பேர்தான் காதலா?"

"அடி என் ராஜாத்தி. அப்படிக் கேளு சொல்றேன். நீ என்னை சும்மானாச்சுக்கும் மிரட்டின மாதிரி இப்ப நானும் உன்னை பதிலுக்கு தமாஷ் பண்ணினேன். அவ்ளோதான். ஐ லவ் யூன்னு சொல்லு. நான் உன்மேல எவ்வளவு அன்பு வச்சிருக்கேன்னு காட்டறேன்..."

"இல்ல... அது என்னால முடியாது... நீ ரவுடித்தனம் பண்றே... இது நல்லதில்ல..."

'அந்தப் பக்கமாக யாராவது வரமாட்டார்களா? ஏதாவது ஒரு பஸ் வந்தால் கூடப் போதுமே... கத்தி யாரையாவது உதவிக்கு அழைக்கலாமே' என எண்ணித்

தவித்தாள் ரஞ்சிதா. ஒருவரும் காணோம். ஜனசஞ்சார மற்ற பகுதி போலிருந்தது அந்த இடம். வழக்கமாக அவளோடு சாலையில் வந்து சேருகிற சைக்கிள் சிநேகிதிகள் இன்னும் இரண்டு பர்லாங் தூரம் போனதும் தான் காத்திருப்பார்கள். 'இப்படி இவனிடம் மாட்டிக் கொண்டு விட்டோமே' என்று கலங்கினாள் அவள்.

"ரஞ்சிதா, நீ அறிவில்லாம பேசறே... நான் ரொம்ப நல்லவன்தான். ஆனா, ஆசைப்பட்டது கிடைக்கலேன்னா மிருகமா ஆயிடுவேன். போலீஸை நம்பாதே. அதுக்கெல்லாம் பயப்படற ஆள் நான் இல்லை. டவுன்ல பாதிபேரு எங்க ஆளுங்க. கடைவீதியில வச்சு உன்னை துகிலுரிஞ்சால்கூட என்னைத் தட்டிக் கேட்க அங்க எவனும் வரமாட்டான். அவ்வளவு ஏன், உங்க ஸ்கூல் உள்ர வந்து உன்னைப் பட்ட பகல்ல தூக்கிட்டு வந்துர என்னால முடியும். மயில் தோகைய பிடுங்கற டைப் ஆசாமி இல்ல நான். அதை ஆடவிட்டு ரசிக்கறவன் நான். கீமாத்தூர் பண்ணையார் மகன்னா சுத்துவட்டு கிராமத்துல எல்லாரும் பொத்திகிட்டுப் போயிடுவாங்க. நான் உன்னை என் இதயராணியா ஆக்கி, வாழ்நாள் பூரா வச்சுக் காப்பாத்தணும்னு ஆசைப்படறேன். புரிஞ்சிக்க. என்னை எதுக்க நினைக்காதே."

"சரி ரங்கநாதா... உன்னோட வாழ விரும்பலையே நான். உன் காதலை ஏற்காத ஒருத்திகிட்ட இவ்வளவு வீரம் பேசி என்ன பயன்? மிரட்டினா பயம் வரும்... காதல் வரும்னா நினைக்கிற? என்னால உன்னை ஒரு நாளும் காதலிக்க முடியாது."

"நான் உன்னை இப்பவே காதலின்னு சொல்லலே, வா, என்னோட மோட்டர் பைக்குல உன்னை ஏத்திக் கிட்டுப் போய் டவுன் ஸ்கூல்ல விடறேன். மாலையில் நீ ஸ்கூலை விட்டு வெளியே வர்றப்ப புது ஹீரோ ஸ்போர்ட்ஸ் மாடல் சைக்கிளோட வாசல்ல நிற்பேன். நீ சந்தோஷமா வீடு திரும்பலாம். யோசி, இன்னிக்கு, நாளைக்கு இன்னும் ஒருவாரம் யோசி. ஆனா ஒரு நல்ல முடிவை நீ எனக்கு சொல்லலேன்னு வை, நான் பொல்லாதவனா ஆயிடுவேன்..."

"என்ன பண்ணுவே..."

ரஞ்சிதாவின் புத்திசாலித்தனமற்ற கேள்வியாக இது அமைந்தது. அவன் அருகில் கொண்டுவந்த பைக்கில் கூட அவள் ஏற மறுத்திருக்கலாம். நடந்தே கூட ஸ்கூல் போயிருக்கலாம். இந்த கேள்விதான் அவனை முழுதாகச் சீண்டி வெடிக்க வைத்தது.

"ஏறுடி பைக்குல... கேள்வியா கேட்கற கேள்வி. காதலிக்க முடியலன்னா உன்னை கசக்கி முகருவேன். எங்க வயக்காட்டுல இருக்குற ஒவ்வொரு பம்பு செட் ரூமும் எனக்கு ஒவ்வொரு நாள் படுக்கையறையா முறை வச்சு ரூட்டி பார்க்கும். அதுல ஒண்ணுல உனக்கு பாய் விரிச்சிட வேண்டியதுதான். உங்க ஆத்தா ஒருத்தனோட ஒழுங்கா குடும்பம் நடத்தியிருந்தால்ல உனக்கு காதல், குடும்பம், வாழ்க்கையெல்லாம் புரியும். சாமியார் வேஷம் போட்டுக்கிட்டு அவ அடிச்ச கூத்து, அடிக்கற கூத்து எல்லாமே எனக்குத் தெரியும்டி. என்னை ரொம்ப சீண் டாதே. அழிச்சுருவேன். ஆசிட் முட்டை அடிச்சேன்னு வச்சுக்க, மூஞ்சி வெந்து நடைப்பிணமா ஆயிடுவே. அடுத்

தது உங்க ஆத்தாளை ஊரைவிட்டு விரட்டறதுதான். காதல் நான் உனக்கு அளிக்கிற கவுரவப்பிச்சை. ஏற்க மறுத்தே... கதை கந்தலாயிடும்..."

ரங்கு அவள் கையைப் பிடித்து பலவந்தமாக இழுக்கவும் அவள் திமிறி ஓடவும், ரங்கு மோட்டார் சைக்கிளில் துரத்தவும் துவங்கிய அந்தக்கணப் பொழுதில் தான் .அங்கு ஒரு கார் வந்து சடன் பிரேக் போட்டு நின்றது.

# 5

அந்த அம்பாசிடர் கார் சேலத்திலிருந்து வந்து கொண்டிருந்தது. அதில் டிரைவருக்குப் பக்கத்தில் முன் சீட்டில் அமர்ந்திருந்த இளைஞன் தொலைவில் வரும் போதே இந்தக் காட்சியைப் பார்த்துவிட்டான். சாலை யோரம் ஒரு பள்ளி மாணவியின் கரம் பற்றியிழுத்து ஒரு மோட்டார் சைக்கிள் வாலிபன் தகராறு செய்வது நன்கு புலப்பட்டது. அவள் திமிறுவதிலிருந்தே அது ஈவ் டீஸிங் தொல்லை என்பது நன்கு புரிந்தது.

'அட... இந்தக் கொடுமை நகர்ப்புறங்களில்தான் அதிகம் என்று நினைத்தால், கிராமப்புறங்களிலும் நிலைமை இப்படித்தான் இருக்கிறது போலிருக்கே' என்று நினைத்த அவன் "பாலு காரை வேகமா ஓட்டு. அதோ... பாலம் தாண்டி அந்தப் பொண்ணுகிட்ட ஒருத்தன் வம்பு பண்றானே, அங்க சடார்னு ஓரம்கட்டி நிறுத்து..." என்றான்.

காரை ஓட்டி வந்த நண்பன் பாலு, "வேண்டாம் மோகன்... நமக்கு எதுக்கு வம்பு. முன்பின் தெரியாத கிராமப்புறத்துல வந்து நாம வீண் தகராறுல மாட்டிக் கணுமா?" என்றான்.

"ஏய்... என்னப்பா நீ, கண் எதிரே ஒரு பெண் அதுவும் பள்ளிக்கூட மாணவி கையைப் பிடிச்சு ஒருத்தன் வம்பு பண்றான். கண்டுக்காம போயிடறதா, நீ நிறுத்து. எதுவந்தாலும் நான் பார்த்துக்கறேன்."

அதற்குள் அந்த இடம் வந்துவிடவே கார் கிரீச் சிட்டு நின்றது. மோகன் கையில் கிடைத்த சிறு குடையை எடுத்துக்கொண்டு, காரின் கதவு திறந்து வேகமாக இறங்கி ஓடிவந்தான், "டேய் விடுடா அந்தப் பெண் கையை..." என்றபடியே.

பாலு காரைச்சற்று முன்னால் ஓட்டிவந்து ரங்கு வின் மோட்டார் சைக்கிளை வழிமறிப்பதுபோல் நிறுத் தவே, அவனும் நின்றான்.

"டேய் யாருடா நீ? காருல போறவன் அப்படியே ரோட்டுமேல போகவேண்டியதுதானே... பெரிய ஹீரோ மாதிரி இறங்கி வந்துட்டே. எங்க ஊரு பொண்ணு கையை நான் புடிச்சா உனக்கென்னடா வந்துச்சு. நீ என்ன புடுங்கிடுவியா. போடா உன் வேலையைப் பார்த்துக்கிட்டு..."

"ஐயா போயிராதீங்கய்யா. ஸ்கூல் போற வழியில இவன் என்னை வழி மறிச்சு கலாட்டா பண்றான். சைக் கிளை வேற புடுங்கி உடைச்சுப் போட்டுட்டான். நான் ஒண்ணும் இவங்க ஊரு இல்லே, ரவுடித்தனம் பண் றான்யா..." என்று அலறினாள் ரஞ்சிதா.

'டேய்... நான் குரல் கொடுத்தா எத்தினி பேரு அருவா, வேல்கம்பு, சுளுக்கினு ஆயுதங்களோட ஓடியாரு வாங்க தெரியுமா? ஒரு குடையை வச்சுக்கிட்டு என்ன... சிலம்பாட்டம் ஆடப்போறியா... போடா" என்று அதைத் தட்டிவிட்டான் ரங்கு.

"தம்பி இது சாதாரண குடையில்லை... இப்ப பாரு உன்னோட சுளுக்கை நான் எடுக்கிறேன்..." என்ற மோகன், குடையின் பட்டனை அழுத்தியபடி மறுபடி

அவன் தோளில் இடித்தான். குடை விரியவில்லை. ஆனால் குடையின் முனையிலிருந்து புறப்பட்ட சிறிய அளவிலான மின் அலைகளால் தாக்குண்ட ரங்கு 'ஷாக்' அடித்த உணர்வுடன் துள்ளித்துடித்தபடி "ஏய்... ஏய்... என்னடா பன்றே..." என்று கேட்டு மோட்டார் சைக்கிளையும் போட்டுக் கொண்டு கீழே விழுந்தான்.

அவன் பிடியிலிருந்து விடுபட்ட ரஞ்சிதா அங்கு, நடக்கும் அதிசயம் கண்டு வியந்தபடி கார் ஓரம் ஒண்டி நின்றாள்.

"ரவுடித் தம்பி, இதுவெறும் குடை இல்லே. ஷாக் அடிக்கும் குடை. போனாப் போவுதுன்னு இத்தோட விடறேன். இன்னும் ஒரு அழுத்து அழுத்தினேன்... மவனே இரும்பு வேலில பாயற மின்சாரத்துல மாட்டிக் கிட்டு சாகற பன்னி, நரி மாதிரி நீயும் ரோட்டுல மல்லாந் துடுவே. சாகமாட்டே. கை, கால் மட்டும் இழுத்துக்கும். அப்புறம் ஆயுசுக்கும் காக்கா வலிப்பு வந்தவனாட்டம் கிடக்க வேண்டியதுதான். ஊளையிட்டு ஊரைக் கூட்டி னேன்னு வச்சுக்க... வேல்கம்பு, அருவால்லாம் எங்கிட்ட எடுபடாது. கார்ல பிஸ்டல் வச்சுருக்கேன். எடுத்து டப்.. டப்னு சுட்டுத் தள்ளிட்டுப் போயிடுவேன். 'திருட்டுப் பசங்க வழி மறிச்சாங்க.... தற்காப்புக்கு சுட்டேன்'னு நானே போலீஸ்ல கம்ப்ளெய்ண்டும் குடுத்துடுவேன்... ஜாக்கிரதை..." என்ற மோகன், "பாப்பா, நீ ஏறும்மா கார்ல..." என்று குரல் கொடுத்தான்.

தூரத்தில் ஒரு மரத்தின் மறைவில் நின்று இதை யெல்லாம் பார்த்த சோமு, ரங்கு கீழே விழுந்ததும் தன் ஆட்களுக்குக் குரல் கொடுத்தான். அவர்கள் ஒன்று

சேர்ந்து ஓடிவரத் துவங்குவதற்குள் மோகன், ரஞ்சிதாவைக் காரில் ஏற்றிக்கொண்டு விரைந்தான்.

அவள், மோகனுக்கு நன்றி கூறி, வழியில் நடந்த சம்பவங்களை விவரித்தாள். "போலீஸில் சொல்லலாம்" என்று அவன் கூற, ரஞ்சிதா,

"வேணாம். அவன் பண்ணையார் மகன். செல்வாக்கு அதிகம். நான் ஊருக்குப் போய் அம்மாகிட்ட சொல்லி, அடுத்து என்ன செய்யலாம்னு யோசிக்கிறேன்..." என்றாள்.

"சரி... ஒண்ணும் பயம் இல்லேல்ல. பார்த்து ஜாக்கிரதையா வீடு போய்ச் சேர்ந்துடுவேல்ல. சைக்கிள் வேற இல்லேன்னியேம்மா. நான் எதாச்சும் ஏற்பாடு பண்ணட்டுமா...?"

"வேணாம் சார். ஊருக்கு பஸ்ல போய்டுவேன். ஆனா, ஸ்கூல் முடிஞ்சு நான் திரும்புவேன்னு அவன் வழியில நின்னாலும் நிற்பான். இன்னிக்கு ஸ்கூல் முடிஞ்சு என் தோழி வீட்ல போய் தங்கிடுவேன். அம்மாவுக்கும் தெரிஞ்சவங்க வீடு அது. டவுனுக்கு வந்தா அம்மா அங்கதான் தங்குவாங்க..."

"மாலையில் நீ வீட்டுக்குத் திரும்பலேன்னு அம்மா பாவம் கவலைப்படுவாங்கல்ல..."

"கவலைப்படுவாங்க. ஆனா, உடனே ஆள் அனுப்பி என் தோழி வீட்ல நான் இருக்கேனான்னு விசாரிப்பாங்க. எப்பவாச்சும் மழை அதிகமா பிடிச்சாலோ, ஸ்கூல்ல ஸ்பெஷல் கிளாஸ்னு லேட்டாயிட்டாலோ நான் அப்படி அந்தத் தோழி வீட்ல தங்கிடறது உண்டுதான்..."

"ஓ.கே. அப்ப என் கவலை விட்டுது. இல்லேன்னா அந்தப் பொண்ணுக்கு என்ன ஆச்சோ.. ஏதாச்சோன்னு நான் கிடந்து வேதனைப்படுவேன். சென்னைலபோய் இங்க நடந்ததை எங்க அம்மாகிட்ட சொன்னேன்னா அவங்க வேற, 'எப்படிடா அந்தப் பொண்ணை அப்படி நடுத்தெருவுல இறக்கி விட்டுட்டு வந்தே. கூடவே போய் வீட்டுல விட்டுட்டு வந்திருக்கலாம்லே'ன்னு திட்டுவாங்க. நல்லவேளை, நீயும் துணிச்சலான பொண்ணா இருக்கே... அதோட உனக்கு இங்க வேண்டியவங்களும் இருக்காங்க. அதுவே எனக்குப் பெரிய நிம்மதி. சரி டவுன் வந்தாச்சு. உன்னை எங்கே இறக்கி விடணும்.... ஸ்கூல் எங்கே இருக்கு?"

"ஸ்கூல் கடலூர் ரோட்ல பஸ் ஸ்டாண்ட் பக்கமா இருக்கு. பாலக்கரை தாண்டிப் போகணும். அங்க போய் கார்ல இறங்கினா நல்லா இருக்காது. நான் இங்கயே இறங்கிடறேன்..."

"ரைட்... ஓ.கே. டேக் கேர்... ஸீயூ... பை..."

கார் நின்றது. அவன் கதவு திறந்து விட்டவாறே சொன்னான். அவளும் "தேங்க்யூ சார்" என்றவாறே இறங்கினாள். 'பட்' என்று கதவை மூடி, அவன் டாட்டா காட்டியபடி காரில் விரைந்தான்.

இறங்கிய மறுகணம், 'அட... அவர் யார்? அவரோட பேர் என்ன? எதுவும் விசாரிக்காம விட்டுட்டமே?' என்று எண்ணினாள் ரஞ்சிதா.

**அ**ன்று பள்ளியில் சற்று பதற்றத்தோடுதான் இருந்தாள் ரஞ்சிதா. தோழிகள், "என்னடி... என்ன ஆச்சு?" என்று துளைத்தனர்.

"ஒன்றுமில்லை..." என்றே அவள் திரும்பத் திரும்ப சொன்னாள். அதை யாரும் நம்பவில்லை.

"என்ன ரஞ்சிதா... உடம்பு சரியில்லையா?" என்றாள் பானு.

"இல்லடி... இன்னிக்கு உன் வீட்லதான் தங்கப் போறேன். ஸ்கூல் முடிஞ்சி போறப்ப எல்லாம் சொல்றேன். இப்ப ஆளை விடு..." என்றாள் ரஞ்சிதா.

ஒரு நோட்டோ, புத்தகமோ இல்லாமல் அவள் பள்ளிக்கு வந்திருப்பது சக மாணவிகளுக்கு வியப்பாக இருந்தது. முகம் இறுகிக் கிடக்கிறது. எது கேட்டாலும் பதில் சரியாக வரவில்லை. 'சரியான கல்லுளி மங்கியாக இருக்கிறாளே' என நினைத்தனர். பானு மட்டும், 'சரி... ஏதோ பெரிய விவகாரம் நடந்திருக்கிறது' என்பது புரிந்து, 'அவளே வாய் திறக்கும் வரை அவசரம் காட்ட வேண்டாம்' என்று அமைதியானாள்.

மாலையில் இருவரும் ஒன்றாக வீடு திரும்பினர். நடந்த சம்பவங்களை ஒன்று விடாமல் பானுவிடம் விவரித்தாள் ரஞ்சிதா.

அதைக்கேட்டு அதிர்ந்து போன பானு, "ஐயோ... அவன் பெரிய ரவுடிப் பயலாச்சே... நம்ம ஸ்கூல்ல அவனைப் பற்றிப் பேசாதவங்களே இல்லடி. அவன் கிட்ட போயா மாட்டினே..." என்றாள்.

"போடி இவளே... வழி மறிச்சு வம்பு பண்ணி னான்னு சொல்றேன். போய் மாட்டினேங்கறியே. அந்த லூஸுக் குரங்குகிட்ட நின்னு பேசறதையே அருவருப்பா நினைக்கிறவடி நான்..."

"சரிடி... எதுக்கும் போலீஸ்ல சொல்லிடுவமா...?"

"வேணாம்டி போலீஸ்ல்லாம் சரிப்படாது. அவன் எமகாதகப் பய. செல்வாக்கு வேற அதிகம். பார்க்கலாம். என்ன செய்யலாம்னு. முதல்ல இன்னிக்கு ராத்திரி உன் வீட்ல தங்கற விவரத்தை அம்மாவுக்கு சொல்லிடணும். வீணா பயப்படுவாங்க. வா, ஒரு போன் பண்ணிட்டுப் போயிடலாம்..."

"போனா... இருக்கா?"

"இருக்குடி. பஞ்சாயத்து போர்டு பிரஸிடெண்ட் வீட்ல இருக்கு. சொல்லிட்டா. அவங்க ஒரு ஆளனுப்பி, தகவல் தெரிவிச்சுடுவாங்க. அதுபோதும்..."

இருவரும் ஒரு எஸ். டி. டி. பூத்துக்குச் சென்றனர். ரஞ்சிதா போனில் தகவல் தெரிவித்தாள்... "நான் இன்னிக்கு டவுன்ல பானு வீட்ல தங்கிட்டேன்னு எங்க அம்மாவுக்கு சொல்லி அனுப்பிச்சிருங்க ப்ளீஸ்...."

மறுமுனையில் பிரஸிடெண்ட் மனைவி, "சரிம்மா ரஞ்சிதா. நான் உங்கம்மாவுக்குத் தகவல் அனுப்பிடறேன்" என்றாள்.

ரஞ்சிதா நிம்மதியாக பானுவின் வீட்டிற்குச் சென்றாள். லட்சுமிபுரத்திலிருந்தது அந்த வீடு. பின்னா லேயே மணிமுத்தாறு சலசலவென்று ஓடிக்கொண் டிருந்தது. மறுகரையில் பிரம்மாண்டமான பழமலைநாதர் கோவில் பஞ்ச கோபுரங்கள் காட்சியளித்தன.

மேற்குவானில் யாரோ செம்பட்டுத் திரை விரித்து வைத்திருந்தார்கள். அதில் வியந்து வியந்து விவரிக்கத் தக்க சித்திர வேலைப்பாடுகள் காட்சியளித்தன. சிறுசிறு

மேகத்துணுக்குகள் மெல்ல அசைவதாலும், வெள்ளை நாரைகள் வரிசை வரிசையாகப் பறப்பதாலும் அந்திச் செவ்வானம் நிஜ நாடக மேடைத் திரையாகவே அசைவு காட்டியது. எங்கிருந்தோ லவுட் ஸ்பீக்கர் அலறிக் கொண்டிருந்தது.

"என்னடி பானு! ஏதாவது கோவில் திருவிழாவா? ஆடி மாசம் பொறந்துடிச்சா என்ன? அப்பத்தானே கூழு காய்ச்சி ஊத்தறது, கூத்து கட்டறதுன்னு அம்மன் கோவில்கள்ல அமர்க்களப்படும். மேடைக்கு மேடை மெல்லிசைக் கச்சேரிகள்லாம் வேற நடக்கும்..."

"இல்லடி... இது கல்யாண சீசன். அந்த பஸ் ஓனர் பங்களா வடக்கு ராஜ வீதில இருக்கும்லே. அங்க ஒரு கல்யாணம். ஏழு மணிக்கு ரிசப்ஷன்... சென்னையி லேருந்து ஒரு பிரபல இசைக்குழு வந்து கச்சேரி பண்றாங்க. போவோம் வர்றியா...?"

"வேணாம்டி பானு. இன்னிக்கு எனக்கு அதையெல் லாம் ரசிக்கிற மனநிலை இல்லே. சினிமாகூட போக வேணாம். படிக்கலாம்னா புஸ்தகமும் இல்லே. பையோட தூக்கி சைக்கிளை ஓடையில எறிஞ்சுட்டான் அந்தப் படுபாவி..."

"சே... அதையே ஏண்டி நினைச்சுகிட்டிருக்கே. நடந்ததை மற. நானிருக்கேன்ல உனக்கு... என் புஸ்தகம் போதும்டி நாம ரெண்டுபேரும் இதைப் படிக்கலாம். நோட்புக்ஸ் மட்டும் வேற புதுசா வாங்கிடலாம். நோ ப்ராப்ளம்."

"நீ சொல்றதைக் கேட்க சந்தோஷமா இருக்குடி பானு. ஆனா, எனக்கென்னவோ பயமா இருக்கு.

அவன் ரொம்ப மோசமானவன். மூஞ்சில ஆசிட் ஊத்தினாலும் ஊத்திடுவான். பள்ளிக்கூடம் வரவே பயமா இருக்குடி..."

"என்னடி ரஞ்சிதா, நீயா இப்படிப் பேசறே. ரொம்ப துணிச்சல்காரியாச்சே நீ."

"உண்மைதான். ஆனா, இதுமாதிரி காலித்தனம், கயமைத்தனம் நம்மை நேரடியா வந்து தாக்கறவரைக்கும் தான் அந்தத் துணிச்சல்லாம் பயன்படும். பிரச்னைங்கற வலைல நாமே சிக்கிடறப்ப மனசுல எல்லாத் துணிச் சலும் பலமிழந்து போயிடுது. நடந்த அக்கிரமம் தெரிஞ் சதும் எங்கம்மாவும் பயந்துடுவாங்க. அநேகமா என்னைப் 'பள்ளிக்கூடம் போகவேணாம்'னுடுவாங்க அதான் கவலையா இருக்கு..."

"அப்படியெல்லாம் ஒண்ணும் ஆகாதுடி.... பயப் படாதே. அப்படி உங்கம்மா சொன்னா, பேசாம நீ இங்க வந்துடு. எங்க வீட்ல தங்கிப்படி..."

தோழியின் ஆறுதல் இதமாக இருந்தது ரஞ்சிதா வுக்கு. 'ஆயினும் ரங்கு டவுன் வீதிகளில் வந்து கலாட்டா பண்ணமாட்டான் என்பதற்கு என்ன உத்தரவாதம் இருக்கிறது? பானுவின் வீடு ஒரு நிரந்தரப் பாதுகாப்பாக எப்படி இருக்க முடியும்' என்கிற எண்ணங்களும் அவள் மனசில் எழாமலில்லை.'

"ஏண்டி, ஸ்கூல்லேருந்து வந்ததும் வராததுமா அப்படியே மொட்டை மாடில ஓடிவந்து என்ன அரட்டை அடிக்கறீங்க ரெண்டு பேரும்...?" என்று கேட்ட படியே மாடிப்படிகளில் ஏறிவந்தாள் பானுவின் தாய். குரலில் கோப வீச்சு படிந்திருந்தது.

“ஒண்ணுமில்லேம்மா, இதோ வந்துடறோம். நீ போ” என்ற பானுவின் குரலைச் செவி மடுக்காதவள் போல, பருத்த சரீரம் குலுக்க மேலேறிவந்த அவள்,

“ஏண்டி, எங்கேயாச்சும் ஓடிப்போகலாம்னு திட்டமா... காலை முறிச்சுப் போட்டுருவேன். கழுதை, கீழே இறங்கி வாடி...” என்றாள்.

அந்தப் பேச்சுக் கேட்டு ரஞ்சிதா துணுக்குற்றாள்.

‘என்ன இது, நாராசமான குற்றச்சாட்டு. ஒரு தாய் இப்படியா மகளிடம் பேசுவாள்...?’

பானு அதைக் காதில் போட்டுக் கொள்ளவே இல்லை. “போம்மா... லொடலொடன்னு கத்திகிட்டு வந்துருவே. ரஞ்சிதா முன்னால இப்படித்தான் பேசறதா... முதல்ல நீ கீழே இறங்கிப்போ... நான் எங்கேயும் ஓடிப் போக மாட்டேன்... எவனோடவும் ஓடிப்போக மாட்டேன். போதுமா?” என்றாள்.

“என்னடி நீ... அம்மாகிட்ட இப்படித்தான் பேசறதா?” என்றாள் ரஞ்சிதா.

“அப்படிக் கேளு ரஞ்சிதா. நான் தப்பான அர்த்தத்துல எதுவும் சொல்லலேடியம்மா. இந்தக் கழுதை ஒரு நாள் பார்த்தாப்புல வீடு தங்கறதில்லே. இந்த சிநேகிதி, அந்த சிநேகிதின்னு எவளோடவாவது டவுனை சுத்திக்கிட்டிருக்கா. அப்புறம் இவளே வந்து, எவனோ பின்னால வந்து சுத்தறான்னும் சொல்றா. வயசுப் பொண்ணை வச்சுக்கிட்டு வயித்துல நெருப்பைக் கட்டின மாதிரி இருக்கு. சாயங்காலம் ஏதோ பாட்டுக் கச்சேரிக்குப் போகப் போறேன்னு சொன்னாளா இல்லியா... கேளு. அதுக்குதாண்டி திட்டினேன்...” என்று இரக்கம் ததும்பப் பேசினாள் அந்தம்மாள்.

“அட போம்மா நீ. நான் எங்கேயும் போகப்போற தில்லே. ரஞ்சிதா ஏதோ மனசு சரியில்லேன்னு வந்துருக்கா. அவளோட கொஞ்ச நேரம் நிம்மதியா பேச விடறியா நீ? போ... போய் டிபன் எடுத்துவை. நாங்க வர்றோம்.”

“இந்தக் காலத்துப் பசங்க ஆயி அப்பனை எதுத்துப் பேசற துணிச்சல் இருக்கே? அடேங்கப்பா...” என்று நீட்டி முழக்கியபடி அந்த அம்மாள் படிகளில் இறங்கினாள்.

“ஏண்டி பானு, உன் பின்னால சுத்தின ‘அந்த ராஸ்கல்கிட்ட செருப்பைத் தூக்கி காட்டிட்டேன்... அவன் இப்ப வாலாட்டறதில்லேன்’னியே, அவன் இன்னுமா சுத்தறான்... உங்கம்மா ரொம்ப கவலைப் படறாங்களே...”

“அதை விடுடி ரஞ்சிதா. உன் கதைக்கு வா. நான் செருப்பைக் காட்டினதும் அவன் இப்ப வேற ஒருத்தி பின்னால சுத்த ஆரம்பிச்சாச்சு. அம்மாகிட்ட எப்பவோ சொன்னது தப்பாப் போச்சு. அவங்க வீணா எதுக்கெல்லாமோ பயப்படுவாங்க. இதையெல்லாம் மறைக்கக்கூடாதுன்னு நாம வீட்ல சொல்லிடறோம் பார். அதுல வர்ற வினை இது. எவனோட நான் மனசுமாறி ஓடப்போறேனோன்னு கண்கலங்கி எதையாச்சும் உளறிக்கிட்டே இருப்பாங்க. நீ வா, முகம், கை, கால் கழுவி, டிபன் சாப்பிடலாம். பிறகு பேசலாம்...”

பானுவோடு மவுனமாகப் படி இறங்கத் துவங்கிய ரஞ்சிதாவின் மனத்தில் ஏதேதோ கவலைகள் கனத்த இருளாய்ப் படரத் துவங்கியது.

வெளியேவும் இரவின் இருள் படலம் கருந்திரை விரித்தது...

# 6

'தோம்... கருவிலிருந்தோம்...
கவலையின்றி கண்மூடி இருந்தோம்...
தோம்... தரையில் விழுந்தோம்
விழுந்தவுடன் கண் தூக்கம் தொலைத்தோம்
அப்போது அப்போது போன தூக்கம் நம்
கண்களிலேயே
எப்போது எப்போது வந்து சேரும்...
விடை தோணலியே ஏய்... ஏய்...'

காற்றில் மிதந்து வந்த இந்த கீதம் ரஞ்சிதாவின் உள்ளத்தை உருக்கியது. உயிரை உலுக்கியது. அவள், மாடியில் பானுவின் அறையில் இருந்தாள். பானு ஏதோ பேசிக்கொண்டிருக்க, அதற்கு 'உம்' கொட்டியபடியே உட்கார்ந்திருந்தாலும், ரஞ்சிதாவின் காதுகளை இந்தப் பாடல் வரிகளே ஆக்கிரமித்திருந்தன.

'எத்தனை உண்மையான கருத்து! நம் வாழ்வை இப்போதைய மனநிலையை இதைவிடச் சிறப்பாக எந்த வார்த்தைகளால் சொல்ல இயலும்?' என்ற நினைவுகள் ஓடின அவள் மனசில்.

"என்னடி எங்கே கவனம்... நான் பேசறது காதுல விழுதா... சும்மா பெருமாள் மாடு மாதிரி தலையாட்டறியே..." என்று அவளைப் பிடித்து உலுக்கினாள் பானு.

"இல்லடி... அந்தப் பாட்டு என் மனசை உலுக்குதுடி. கொஞ்சம் கேளேன்..."

***'தண்ணீரில் வாழ்கின்றேன்***
***நான் கூட மச்சாவதாரம்தான்***
***தோம்... கருவிலிருந்தோம்.***
***கவலையின்றி கண்மூடி இருந்தோம்.***
***அலைகளை அலைகளை பிடித்துக்கொண்டு***
***கரைகளை அடைந்தவர் யாருமில்லை***
***தனிமையில் தனிமையில் தவித்துக்கொண்டு***
***சௌக்கியம் அடைவது நியாயமில்லை'***

"கேட்டுக்கிட்டுத்தாண்டி இருக்கேன். கல்யாண மண்டபத்துல இசை நிகழ்ச்சி ஆரம்பிச்சாச்சு போலிருக்கு. அதான் வாடி போகலாம்னேன். நீ வேணாம்னுட்டே..."

"அதை விடுடி, சங்கர் மகாதேவன் எனக்காகவே இந்தப் பாட்டை பாடற மாதிரி இருக்குடி..."

"போடி இவளே... பாடல் எழுதினவர் வைர முத்துடி, அவர் உன் ஞாபகத்துக்கு வரலியா? அதோட இப்ப அதைப் பாடறது சங்கர்மகாதேவன் இல்லேடி, முரளி மோகன்..."

"முரளி மோகனா... யாருடி அது?"

"என்னடி இது! அவர் ரொம்ப ஃபேமஸ்டி. மெட்ராஸ்ல 'மயிலிறகு ஆர்கெஸ்ட்ரா'னு இசைக்குழு வச்சிருக்கார். அவங்க ட்ரூப்தான் இன்னிக்கு நம்ம டவுன்ல வந்து புரோக்ராம் நடத்திட்டிருக்கு... மயிலிறகு படம் போட்டு, பெரிசா போஸ்டர்லாம் ஒட்டிருக்கே நீ பார்க்கலையா?"

***'ஜனனம் என்பது ஒரு கரைதான்***
***மரணம் என்பது மறுகரைதான்***

**இரண்டுக்கும் நடுவே ஓடுவது தலைவிதி என்னும் ஒரு நதிதான்'**

பாடலின் இரண்டாவது சரணம் அற்புதமாக ஒலிப் பதைத் தலையசைத்துத் தாளம் கொட்டி ரசித்த ரஞ்சிதா,

"அது என்னடி 'மயிலிறகு'னு இசைக்குழுவுக்குப் பேர் வச்சிருக்காங்க... கார்த்த காம்போதின்னு கேலியா சொல்வாங்க, கழுதையாட்டம் கத்தறவனைப் பார்த்து. அது மாதிரியா இது..? மயிலுக்கும் பாட்டுக்கும் என்னடி சம்பந்தம்... மயில் கத்தி நீ கேட்டிருக்கியா?" கர்ணகடூரமா இருக்கும்..." என்றாள்.

"சரிடி, குயில்னு பேர் வச்சிட்டா மட்டும் பாட்டு நல்லா வந்துடுமா? இது மயில் இல்லடி 'மயிலிறகு ஆர்கெஸ்ட்ரா' மயிலிறகால வருடினா எவ்வளவு இதமா இருக்கும்... அந்த மாதிரி இதயங்களை வருடற இசைக் குழுன்னு அர்த்தம். இப்ப நீயே அவங்கப் பாட்டைக் கேட்டு, சுகமா தலை ஆட்டறேல்ல!"

'ஓ.கே.ம்மா, நான் ஒண்ணும் சொல்லலே. ஆளை விடுடி தாயே..." என்று கைக்கூப்பி சரண்டர் ஆனாள் ரஞ்சிதா.

அன்றிரவு பத்து, பத்தரை வரை அந்த இசை நிகழ்ச்சி இன்பத்தேன் பாய்ச்சிக் கொண்டிருந்தது. ரஞ்சிதாவும் மனக்குழப்பங்கள் மறந்து, அதைக்கேட்டு ரசித்தபடியே தூங்கிப்போனாள்.

விடியற்காலையில் எழுந்து, பக்கத்தில் இருக்கிற பஸ் நிலையம் சென்று, முதல் பஸ்ஸைப் பிடித்து ஊருக்குப் போய்ச் சேரலாம் என்று எண்ணிப் புறப் பட்டாள் ரஞ்சிதா. பானுவும் உடன் வந்தாள். சின்ன

சேலம் பஸ் புறப்படத் தயாராக இருந்தது. அவசரம் அவசரமாக அதில் ஓடிப்போய் ஏறிக்கொண்டாள் ரஞ்சிதா.

“இன்னிக்கு ஸ்கூல் லீவுதாண்டி. சனி, ஞாயிறு ரெண்டு நாள் அவகாசம் இருக்கு. மனசைத் தேத்திக்கோ. ஒண்ணும் பயப்படாதே. உங்க அம்மாகிட்ட எதையாவது சொல்லிக் குழப்பிவிட்டுராதே. தைரியமா இரு. நாம பார்த்துக்கலாம். திங்கள் கிழமை மீட் பண்ணுவோம்...” என்று கூறிய பானு, டாட்டா காட்டிவிட்டுச் சென்றாள். பஸ் வேகமெடுத்து சாலையில் திரும்பி, பாலக்கரை தாண்டி, பிரதான டவுனுக்குள் பிரவேசித்தது.

அப்போதுதான் ரஞ்சிதாவின் கண்ணில் முதல் முதலாக அந்த போஸ்டர் தென்பட்டது முன்னால் போன ஜெயங்கொண்டம் பேருந்தின் பின்புறம் ஒட்டப்பட்டிருந்த அது, பளிச்சென்று அவளுக்காகவே ஏந்திப் பிடித்தமாதிரி காட்சி தந்தது. அதில் உள்ள அழகிய மயிலிறகு படமும், இசைக் குழு பெயரும் பக்கத்திலேயே கிட்டார் ஏந்தி நிற்கும் இளைஞன் படமும் பார்த்து அவள் ஆச்சர்யப்பட்டாள். காரணம், அவன்தான் அவளை ரங்குவிடமிருந்து காப்பாற்றி, காரில் அழைத்துவந்து, டவுனில் விட்டவன்.

‘அட... இவர்தான் அந்த இசைக்கலைஞன் முரளி மோகனா? இவருடைய குரல்தான் இரவு முழுக்க என் இதயம் உருக்கியதா? எத்தனை அற்புதமான பாடல்களை யெல்லாம் பாடினாரே... தெரிந்திருந்தால், நிகழ்ச்சிக்குப் போய் வந்திருக்கலாமே...’ என்று எண்ணி யெண்ணித் தவித்தாள்.

பஸ் பயணிகள் பலரும் அந்த மெல்லிசை நிகழ்ச்சி பற்றியே பேசிக்கொண்டிருந்தனர்.

"சூப்பரா பாடறான்யா அந்த ஆளு. சங்கர் மகா தேவன், உன்னிகிருஷ்ணன், ஹரிகரன், டி.எம்.எஸ்னு எல்லார் குரல்லியும் பாடி அசத்தறான்யா..."

"யோவ்... முரளிமோகன் ரொம்ப பாப்புலர்யா... அவர் குழுதான் இப்ப டாப்புல இருக்கு. சிங்கப்பூர், மலேசியாவுல கூட சமீபத்துல இவங்க போய் இசை நிகழ்ச்சி நடத்திட்டு வந்ததா பத்திரிகைல படிச்சேன்யா..."

"உனக்கு இன்னொரு விஷயம் தெரியுமா... அந்த முரளித் தம்பி நம்ம பக்கம்தானாம். கச்சேரி ஆரம்பிச்ச உடனே அவரே இதை முதல்ல மைக்குல சொன்னாரு. 'நா முத தடவையா இங்க வந்திருக்கேன். இந்த டவுன் பக்கத்துல உள்ள ஏதோ ஒரு கிராமம் தான் எங்களுக்குப் பூர்வீகம்னு எங்க அம்மா சொல்வாங்க. அதான் காலை யிலேயே இங்க வந்து, நிறையா கோயிலுக் கெல்லாம் போய் சுத்தினேன். தெருவுல இறங்கி நடந்தேன். அடுத்த முறை வர்றப்ப எங்க கிராமத்துக்கும் போகலாம்னு இருக் கேன்'னு பேசினாரு."

"அட... அவரு நம்ம பக்கம்தானா? என்ன ஊருன் னாரு?"

"தெரியலியாம். மறந்துட்டேன்னாரு. எதா இருந்தா என்ன? நம்ம பக்கத்து ஆளு. அது நமக்குப் பெருமை இல்லியா?"

"நிச்சயமா?"

அவர்கள் பேசிக்கொண்டதிலிருந்து, முரளி மோகன் தன் இசைக் குழுவினருடன் இரவே புறப் பட்டுப் போய்விட்டதாக அறிந்த ரஞ்சிதா, ஏதோ ஓர் இனம்புரியாத ஏக்கம் இதயத்தில் படர்வதை உணர்ந்தாள்.

'பானு கூப்பிட்டவுடன் போயிருந்தா, அவரைப் பார்க்க மறுபடியும் ஒரு வாய்ப்பாவது கிடைச்சிருக்கும். முடிஞ்சா பேசிட்டும் வந்திருக்கலாம். சே... மிஸ் பண்ணிட்டமே' என நினைத்து உருகினாள். எதனாலோ மோகன் முகம் அவள் மனசைவிட்டு அகல மறுத்தது.

கூட்டு ரோட்டில் இறங்கி, மேலமங்கலம் நோக்கி கப்பி மண் சாலையில் நடந்து கொண்டிருந்த ரஞ்சிதாவிடம்,

"எங்கே பாப்பா உன் சைக்கிள்? ஏன் நடந்து வர்றே?" என்று எதிர்ப்பட்டவர்கள் அத்தனை பேரும் தவறாமல் கேட்டனர்.

"திருட்டுப் போயிடுச்சுங்க" என்கிற பதிலை சலிக்காமல் சொன்னாள் அவள்.

ஊருக்கு வெளியே சற்று ஒதுங்கினாற் போன்ற ஓடைக்கரையில் இருந்த அவர்கள் கூரை வீட்டின் வாசலில் வெயிலுக்காகப் போடப்பட்ட பந்தலில் உட்கார்ந்திருந்த சாரதாமணி தேவி, தூரத்தில் மகள் நடந்து வருவதைப் பார்த்துவிட்டுப் பதற்றத்தோடு எழுந்து எதிர்நோக்கி நின்றாள்.

அம்மாவைப் பார்த்ததும் ரஞ்சிதாவுக்கு அதுவரை அடக்கி வைத்திருந்த உணர்வுகள் பீறிட்டு எழ, கண்களில் வழியும் நீரைத் துடைத்தபடி ஓடிவந்து, அம்மாவைக் கட்டிப் பிடித்துக் கொண்டு, "பெரிய ஆபத்திலேர்ந்து தப்பிச்சு வந்திருக்கேன்மா" என்று கேவினாள்.

"அழாதேடி. ஒரு பொண்ணு அழுதா, அதுக்கு உலகம் கற்பிக்கிற அர்த்தம் ஒண்ணே ஒண்ணுதான்- அவ கெட்டுப் போய் வந்திருக்கான்னுதான் நினைப்பாங்க,

பேசுவாங்க. எதா இருந்தாலும் உள்ர வந்து, நிதானமாக சொல்லு..."

மகளைத் தோள் தழுவி, ஆதரவாக அணைத்து அழைத்துச் சென்ற சாரதாமணி, "நல்லவேளை... நீ வர்றப்ப இங்கே யாருமில்லை. என்ன நடந்துச்சுன்னு சட்டுனு சொல்லுடி..." என்றாள்.

ரஞ்சிதா நடந்த சம்பவங்களை ஒன்று விடாமல் விவரித்தாள்.

சாரதாமணியின் முகம் இறுகிப்போனது. அவள் வேதனைகளை வெளிக்காட்டாமல் அடக்கியபடி, "சரி, நீ, பள்ளிக்கூடம் போக வேண்டாம். நாம இதுபத்தி யோசிப்போம். அழாதே. அவசரப்படாதே. படிப்பு நின்னு போச்சேனு கவலைப்படாதே..." என்றாள்.

"என்னம்மா இப்படிச் சொல்றே... டவுன்ல பானு வீட்ல தங்கிப் படிக்கலாமே. அவகூட இதைத்தான் சொன்னா..."

"வேணாம்டி. சரிப்படாது. அவ சொல்லிடாப்புல ஆச்சா... பானுவுக்கு ஒரு அண்ணன் இருக்கான். பாண்டிச்சேரில ஹாஸ்டல்ல தங்கி, காலேஜ் படிக்கறான். அவன் வந்து போறப்ப எதாச்சும் பிரச்னை வரும். அவங்க அம்மா இதுக்கு ஒத்துக்கவே மாட்டா. நாம அநாதைங்கடி. வந்து வந்து ஒட்டிக்கறோம்னு பேசுவாங்க. நீ இப்போதைக்கு படிப்பை விட்டுடறதுதான் நல்லது."

"நீ இப்படித்தான் சொல்வேன்னு எனக்குத் தெரியும். இங்க ஹையர் எலிமெண்ட்ரி ஸ்கூல்ல எட்டாவது வரை படிச்சேன். அப்பவே ஒரு சமயம் டைபாய்டு காய்ச்சல்ல கிடந்து, முழுப் பரீட்சை எழுத

முடியாம போயிடுச்சு. மறுவருஷம் படிச்சு பாஸ் பண்ணியும், 'பொண்ணு நோஞ்சலா இருக்கா'ன்னு நீ ஒரு வருஷம் டவுன் ஸ்கூலுக்கு அனுப்பலே. அப்புறம் போய்ச் சேர்ந்து இப்ப மூணு வருஷம் ஆனதும் மறுபடியும் கண்டம். ஏம்மா, இப்பவே நான் காலேஜ் படிக்கிற வயசுல இருக்கேன். இன்னும் பிளஸ்-டூவே முடிக்கலேன்னா நல்லாவா இருக்கும். படிப்பு ராசியே என் ஜாதகத்துல இல்லியா...?''

''உன் ஜாதகம்லாம் ஓகோன்னு தான் இருக்கு. நம்ம சூழ்நிலை சரியில்லியே ரஞ்சி. நல்லகாலம் வர்ற வரைக்கும் நாம தாக்குப்பிடிச்சு நின்னாகணுமே. கண்ணை வித்தா சித்திரம் வாங்கறது? உன்னை எப்படியாவது மானத்தோட கரையேத்தணும்னு தானேடி நான் இத்தனை வேஷமும் போடறேன். புரியலியா உனக்கு?''

ரஞ்சிதாவுக்கு அம்மாவின் துயரக்கதை ஓரளவு தெரியும்தான். அவள் ஐந்து வயதுக் குழந்தையாக இருந்த வரைதான் தந்தை முகம் பார்த்திருக்கிறாள். அதன் பிறகு எல்லாமே அம்மாதான். அதுவும் அந்த ஒதுக்குப்புற ஓடைக்கரை வீட்டு வாழ்க்கை. ஊருக்குள் நல்ல பேர் கிடையாது. யாருடைய ஒத்துழைப்பும் கிடையாது. ஒரே ஆறுதல், யாரும் அவர்களுக்குப் பெரிதாக எந்த இடைஞ்சலும் தருவதில்லை. 'ஏதோ இருந்து தொலையட்டும்' என்ற போக்கில் விட்டுவிட்டனர்.

அம்மா, ஊருக்குள் ஒரு நல்ல குடும்பத்தில் பிறந்தவள். முப்பது வருடத்துக்கு முன்னால், அவள் யாரையோ காதலித்து, வீட்டைவிட்டு ஓடிப் போயிருக்கிறாள். ஆறுமாசம் அவர்களை எங்கு தேடியும் அகப்படவில்லை. அவர்கள் துணிந்து ஊருக்கு வந்து சேர்ந்த

போது, அம்மாவின் குடும்பம் சிதைந்து சின்னா பின்ன மாகி, ஊரைவிட்டு ஒரேயடியா எங்கோ போய்ச் சேர்ந் தாச்சு. போன இடம் யாருக்கும் தெரியாது.

அம்மாவின் காதலன் ஊருக்குள் ஓரளவு வசதி யான வீட்டைச் சேர்ந்தவன். திரும்பி வந்தவனை அக் குடும்பம் 'திருந்தி வா... ஏற்கிறோம்' என்று நிபந்தனை விதித்திருக்கிறது. அவன் 'சாரதாவைப் பிரிய என்னால் முடியாது' என்று உறுதிகாட்ட, 'குடும்பத்துக்குள் வந்து குழப்பம் பண்ணாதே' என்று கூறி விட்டனர் அவர்கள்.

ஊருக்கு வெளியே இலுப்பைத் தோப்பில் கூரை வீடு அமைத்து வசிக்கத் துவங்கியிருக்கிறார்கள் அம்மா வும், காதலனும். முதலில் ஒன்றிரண்டு குழந்தைகள் பிறந்து, தங்காமல் போய்ச்சேர, கடைசியாகப் பிறந்தவள் தான் ரஞ்சிதா.

அப்பா, குடும்ப வழியில் நாட்டு வைத்தியம் அறிந் தவர். அது பிழைப்புக்கு உறுதுணையாய் இருக்க, ஒரு சில வருடங்கள் அம்மாவுடன் இல்லறம் நடத்தியபின், சொத்துவிட்டுப் போய்விடக் கூடாதென்று, அக்காவின் மகளை மணந்து கொண்டு குடும்பத்தில் போய்ச் சேர்ந்து விட்டிருக்கிறார். அம்மாவிடம், 'சாரதா நீ கவலைப் படாதே. உன்னைக் கைவிட மாட்டேன். சொத்து கைக்கு வந்தால்தான் உனக்கு நிலம் நீச்சு எழுதி வைக்க முடியும். பொறுமையாக இரு' என்றிருக்கிறார்.

ஆனால் அதெல்லாம் வெறும் பேச்சு என்பது போகப்போகப் புரிந்திருக்கிறது. 'இப்ப என்னை எதிர்க்க யாருமில்லை. பெரியவங்க போய்ச் சேர்ந்துட்டாங்க. நீயும் என்னோடு வீட்டுக்கே வந்து தங்கலாம்' என்று அப்பா அழைக்க, அம்மா அந்த வீட்டு வேலைக்காரியாய்

இருக்க விரும்பாமல் தன்மானத்தோடு மறுத்து விட்டிருக்கிறாள். அம்மாவுக்குச் செய்த துரோகமோ என்னவோ, அப்பா இரண்டே வருடத்தில் காசநோயால் பீடிக்கப்பட்டு, இருமி, இளைத்து, எந்த மருத்துவமும் பலன் தராமல் இறந்து போயிருக்கிறார். பேயடித்து விட்டது என்றும் ஒரு பேச்சு உண்டு.

அம்மா தாலிகட்டவுமில்லை. தாலி அறுக்கவுமில்லை. அரைகுறை வாழ்க்கையாய் அமைந்து விட்டிருக்கிறது அவளின் காதல் வாழ்வு. எது எப்படியானாலும் பெற்ற மகளைக் காப்பாற்றியாக வேண்டும் என்பதில் மட்டும் அம்மா உறுதியாக இருந்திருக்கிறாள். அதன் விளைவுதான் இந்த சாமியாரிணி வேடம்.

அம்மா பரிதாப முகம் பார்த்த ரஞ்சிதா, மேற்கொண்டு எதுவும் பேசாமல், கயிற்றுக்கட்டிலில் போய்ப் படுத்துக் கொண்டாள். நடந்து வந்த களைப்பு, கால்வலி தீர சற்று ஓய்வுத் தேவைப்பட்டது.

ஆனால், மனதிற்கு ஓய்வேது?

கண்களை மூடினால், மனத்திரையில் முரளி மோகன் புன்முறுவல் பூத்த முகத்தோடு எழுந்து நின்றான். 'வா... வா... வாம்மா... சீக்கிரம் வந்து வண்டில ஏறு' என்று அவன் அவசர அவசரமாகக் கூறிய வார்த்தைகள், இப்போது அவளுக்கு தேவகானமாகச் செவிகளில் ஒலித்தது.

யாரோ ஒரு வழிப்போக்கன் என்ற எண்ணம் மாறி, அவன் ஒரு பிரபல இசைக்கலைஞன் என்பதை மனம் பதிவு செய்து கொண்டதும் 'அடடா... அவரா நமக்கு வந்து உதவினார்...! அவர் மட்டும் அப்போது வந்திரா

விடில் நம் வாழ்வு எப்படியெல்லாம் சீரழிந்திருக்கும்! ஆபத்தில் காப்பாற்றியவர்களைக் கடவுள் என்று போற்று வது உலக வழக்கமாயிற்றே... அப்படிப் பார்த்தால், அந்த முரளிமோகன் நமக்கு ஒரு கடவுள் மாதிரிதானே?' என்றெல்லாம் எண்ணியது.

அன்றிரவு, நிறைய பாடல்களை அவன் குரலில் கேட்டு மகிழ்ந்திருந்ததால், அவன் தன்னிடம் பேசிய ஒவ்வொரு வார்த்தையுமே அவளுக்கு இப்போது சங்கீதமாய் ஒலித்தது.

'அவன்கூட நம் ஊர்ப் பக்கத்தவன் என்று பேசிக் கொண்டார்களே, அப்படியானால் அவன் ஏன் நம் காணாமல் போன உறவினர்களுள் ஒருவனாக இருக்கக் கூடாது? எதிர்பாராத சம்பவங்களுள் ஒன்றாக இது நிகழ்ந்துவிட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்! அந்த முரளிமோகனை நாம் திரும்பவும் சந்திக்க வாய்ப்பு அமைய வேண்டுமே' என்றெல்லாம் அவள் மனசில் எண்ணங்கள் ஓடின.

எத்தனை அன்பும் பரிவுமாகப் பேசினான்... 'போலீஸில் சொல்வோமா வேண்டாமா' என்று அவளு டைய கருத்துக்கு மதிப்பளித்து விசாரித்தான். 'உன் அம்மா கவலைப்படுவார்களே' என்று கனிவு ததும்பக் கேட்டான். 'கவலைப்படாமலிரு... கவனமாக இரு' என்று எத்தனை உரிமையும் பொறுப்புமாய் ஆலோசனைகள் சொன்னான். அந்த மனிதனைப் பற்றிய எந்த விபரமும் அறிந்து கொள்ளாமல் இருந்தேனே... இறைவா, அந்த முரளிமோகனை மறுபடி என் கண்களில் காட்டுவாயா? தவறிவிட்ட சந்தர்ப்பம் மறுபடி எனக்கு வாய்க்க ஒரு வழி காட்டேன்...' என்று உள் மனத்தில் உருகி உருகிப் பிரார்த்திக்க ஆரம்பித்தாள்.

# 7

**நா**ன்கு நாட்களாக ரஞ்சிதாவைக் காண முடியாமல் போனதும் ரங்குவின் கோபம் எல்லை மீறியது. 'அவள் எனக்கே ஆட்டம் காட்டுகிறாளா?' என்று கறுவினான்.

சைக்கிள் பயணம் ஆபத்து என்றெண்ணி, அவள் பஸ்ஸில் பள்ளி செல்வாள் என்று எதிர்பார்த்த அவன், தினமும் காலையில் ஏழுமணிக் கெல்லாம் மெயின் ரோட்டில் ஆஜராகி, ஒவ்வொரு பஸ்ஸாகப் பார்த்து ஏமாந்தான். எதிலுமே அவள் பயணிக்கவில்லை என்கிற ஏமாற்றம் எரிச்சலாயிற்று.

இருப்பினும் திங்கள்; செவ்வாய், புதன் என்று விடாமல் வந்து, ஒன்பது மணிவரை காத்திருந்துவிட்டுத் திரும்பினான். 'அதிகம் போனால் சனி, ஞாயிறு கழித்து அவள் திங்கள்கிழமை ஒரு மாற்று ஏற்பாட்டுடன் பயணிப்பாள்' என்பது அவன் எதிர்பார்ப்பாக இருந்தது.

'ஒன்று போலீஸில் புகார் செய்திருப்பாள். அல்லது ஊரிலிருந்து யாரையாவது அழைத்து வந்து மிரட்டுவாள்' என்றுகூட அவன் எதிர்பார்த்தான்.

எதுவும் நடக்கவில்லை என்றதும், 'ஒருவேளை பள்ளி செல்வதையே நிறுத்தியிருக்கலாமோ' என்று எண்ணினான்.

'கிராமத்து பெரிசுகளுக்கு இதைவிட்டால் வேறு யோசனை வராதே' என்று நினைத்த அவன் தீர்மானமாக ஒரு முடிவுக்கு வந்தான்.

அது

'மேலமங்கலம் போய்ப் பார்த்து விடுவது' என்கிற துணிச்சலான முடிவுதான். 'என்னதான் நடந்துவிடும் பார்ப்போம்' என்று அந்த முயற்சியில் இறங்கினான்.

புதன்கிழமை மாலை நாலு மணி அளவில் மோட்டார் பைக்கில் சோமுவையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டான். சோமு, பின்னால் உட்கார்ந்து ஒரு சைக்கிளையும் தள்ளிக் கொண்டு வந்தான். அது, ரஞ்சிதாவின் சைக்கிள்தான். ஓடையிலிருந்து எடுத்துப் புதுப்பித்திருந்தார்கள். சிதைந்த பாகங்களை மாற்றி, அதை ஒரு புது சைக்கிளாகவே ஆக்கியிருந்தார் பாய்.

மேலமங்கலம் தோப்பு வீட்டின் முன்னால் ரங்கு வந்து நின்று, "அம்மா..." என்று அழைத்ததும், சாரதாமணி அம்மாள் வாசலுக்கு வந்து,

"யாரது... யார் நீங்க? உங்களுக்கு என்ன வேணும்?" என்று விசாரித்தாள்.

"முதல்ல நீங்க என்னை மன்னிக்கணும்..."

"மன்னிப்பா... எதுக்கு? யாருப்பா நீ...?"

"பேர் ரங்கு. அரங்கநாதன் முழுப்பேர். கீமாத்தூர் பண்ணையார் மகன். ரஞ்சிதா சொல்லியிருக்குமே..."

"ஏம்பா, நீதானா அது... பார்த்தா நல்ல புள்ளையா தெரியறே. என்னப்பா இதெல்லாம் விளையாட்டு... எம் பொண்ணு எவ்வளவு பயந்துட்டா தெரியுமா...?"

"விளையாட்டுதாங்க. உங்க பொண்ணு தப்பா நினைச்சுடுச்சு. அதுக்குதான் மன்னிப்பு கேட்க வந்தேன். பாருங்க, சைக்கிள் - புத்தகப்பை எல்லாத்தையும் போட்டுட்டு வந்துடுச்சு. பத்திரமா கொண்டாந்து சேர்ந்துட்டேன். கூப்பிடுங்க. நேரா ரெண்டு வார்த்தை சொல்லிட்டுப் போயிடறேன்."

சாரதாமணி ஒரு கணம் யோசித்தாள். 'பெரிய வீட்டுப் பையன். ஏதோ தப்பு பண்ணிட்டாலும், உணர்ந்து மன்னிப்பு கேட்கும் நிலைக்கு வந்திருக்கிறான். அவனிடம் கோபம் காட்டுவது சரியில்லை' என்றெண்ணியவளாய்,

"உள்ளே வாப்பா. எதுக்கு வாசல்லயே நின்னுகிட்டு" என்று அழைத்தபடி உட்புறம் நகர்ந்தாள். அவனும் பின்தொடர்ந்தான்.

அது கூரை வீடுதான் என்றாலும், சற்று பெரியதாகவே இருந்தது. ஆளோடி, கூடம், முற்றம், உட்புறம் தனியே சமையற்கட்டு, பின்புறம் தோட்டம் என்று திட்டமிட்டு அமைக்கப்பட்டிருந்தது. கூடத்தில் பெரிய ஜமக்காளம் விரிக்கப்பட்டிருந்தது. சாரதாமணியிடம் ஆரூடம் பார்க்க, குறிகேட்க வருபவர்கள் அங்கேதான் அமர்வது வழக்கம். சுவர் முழுக்க ஏராளமான சாமி படங்கள்... போதாதத்துக்கு கடவுளர் படங்கள் உள்ள ஏராள காலண்டர்கள் வேறு தொங்கின.

தனியே பூஜை மாடம் வேறு ஓர் ஓரமாக இருந்தது. அதில் காளி அல்லது பிரத்யங்கரா தேவியின் பயங்கரமான படம் பெரிதாக இருந்தது. செம்பருத்தி மாலை சார்த்தி, குத்துவிளக்கு எரிந்தது. கீழே ஒரு அம்மன் சிலை வேறு, அரளிப் பூக்கள், வாழைப்பழம் அதில் செருகிய

ஊதுபத்தி என்று அந்த இடமே ஒருவித அச்சமூட்டும் சூழலில் காட்சியளித்தது. முற்றத்தில் துளசி மாடம் இருந்தது.

"ரஞ்சி, இங்க வாம்மா" என்று அழைத்த சாரதா மணி,

"தம்பி உட்காருங்கப்பா" என்று ஜமக்காளத்தைக் காட்டினாள்.

"இருக்கட்டுங்க... பரவாயில்லை" என்று ரங்கு மறுக்கவும் பின்புறமிருந்து ரஞ்சிதா வரவும் சரியாக இருந்தது.

"யாரு... இவங்களா... அம்மா, எதுக்கும்மா இவங்களை உள்ள விட்டே..."

"ஏய்... சும்மா இருடி. தம்பியே மனம் திருந்தி, மன்னிப்பு கேட்க வந்திருக்கு. நீ எதாச்சும் மரியாதை இல்லாம பேசாதடி..." என்றாள் தாய்.

"ரஞ்சிதா, ரொம்ப பயந்துட்டியா. அதெல்லாம் வேணாம். மனசுல எதுவும் வச்சுக்காதே. சைக்கிள் கொண்டாந்துட்டோம். புதுசு இல்லே. பழசு. உன்னுது தான். இதோ புத்தகப்பையும்... டேய் சோமு, குடுடா அதை..."

சோமு கொடுக்க, கைநீட்டி அதை வாங்கினாள் ரஞ்சிதா.

"நீ நாலு நாளா டவுனுக்கே வர்றதில்லே. ஸ்கூல்ல நின்னுட்டியா? வேணாம் ரஞ்சி, படிப்பை நிறுத்திடாதே. என்னால உனக்கு இனிமே எந்தத் தொந்தரவும் இருக்காது..." என்றான் ரங்கு.

"அட, நீ முதல்ல உட்காருப்பா. வேணும்னா வாசல்ல கிடக்கிற விசிப்பலகையை இங்கே கொண்டாந்து போடச் சொல்றேன். உட்கார்ந்து பேசு. நான் போய் காபி போட்டு எடுத்து வர்றேன்..." என்ற சாரதா மணி அடுப்பங்கரைப் பக்கம் நகரத் துவங்கினாள்.

"இல்லீங்க அதெல்லாம் வேணாம்" என்று ரங்கு மறுத்தான்.

"அம்மா, நீ போகாதே. இங்கேயே இரு..." என்ற ரஞ்சிதா,

"நீ சொல்றது நிஜம்தானா? அன்னிக்கு அப்படித் துரத்தினே. மிரட்டினே... உன்னை எப்படி நம்பறது...?" என்றாள்.

"அப்படியெல்லாம் பேசாதே ரஞ்சி. எல்லாரும் எப்பவும் கெட்டவங்களா இருந்துடறதில்லே. வயசுப் பசங்க ஏதோ தமாஷ் பண்றது சகஜம் தான். அதிலும் தம்பி பெரிய இடத்து பையன். தப்பான கண்ணோட்டத் துலயே பார்க்காதே..." என்றாள் சாரதாமணி.

"நல்லா சொல்லுங்கம்மா... உங்க பக்குவம் ரஞ்சி கிட்ட இல்லே. என்னை மோசமானவன்னே முடிவு பண்ணிருச்சு. நீங்க நாலும் தெரிஞ்சவங்க. யோசிச்சுப் பேசறீங்க..." என்ற ரங்கு, அத்துடன் நிறுத்தாமல், ரஞ்சிதாவைப் பார்த்து,

"உன்னை மாதிரி இல்லே உங்கம்மா. அவங்களும் ஒரு காலத்துல காதல்ல மதிப்பு வச்சு, மனசுக்குப் பிடிச்சவரோட ஓடினவங்க. நான் உனக்கு அதுமாதிரி கஷ்டம்கூட தர விரும்பலே. நீ 'எஸ்'னு ஒரு வார்த்தை சொன்னா போதும், மறுநிமிஷம் நம்ம கல்யாணம்

முறைப்படி, ஊரறிய நடக்கும். எதுக்கு வீணா பயந்து நடுங்கறே..." என்றான்.

"பாத்தியாம்மா. நல்லவன், பெரிய இடத்தைச் சேர்ந்தவன்னு சர்ட்டிபிகேட் கொடுத்தியே. இவன் என்ன பேசறான் பார்த்தியா..." என்றாள் ரஞ்சிதா.

சாரதாமணி திகைப்புடன் அவனைப் பார்த்து, "என்னப்பா... இப்படிப் பேசறே..." என்றாள்.

"நிஜம்தாம்மா. என்னை நம்புங்க. உங்க பொண்ணைக் காதலிச்சுட்டு, ஏமாத்திடுவேன்னு சந்தேகம் வேணாம். இழுத்துகிட்டு எங்கேயாவது ஓடிடவும் மாட்டேன். நல்லா யோசிச்சு ஒரு முடிவுக்கு வந்துட்டேன். வாழ்ந்தா ரஞ்சிதாவோடதான். ராணிமாதிரி வச்சுக் காப்பாத்துவேன். 'உம்'னு ஒரு வார்த்தை சொல்லுங்க... பெரியவங்களோட வந்து, முறையா சம்பந்தம் பேசறேன்..." என்றான் ரங்கு.

"எழுந்து வெளியே போடா நாயே. இன்னும் ஒரு நிமிஷம் இங்க இருந்தே. அப்புறம் விளக்குமாறும், முறமும் தான் உங்கிட்ட பேசும். மரியாதை கெடறதுக்குள்ர வெளியே போயிடு" என்று ஆவேசம் காட்டினாள் ரஞ்சிதா.

ரங்குவால் அதற்குமேல் பொறுமை காட்ட முடியவில்லை. "மூடுடி வாயை. ரொம்ப சிலுப்பாத. எவனோ காரைக் கொண்டாந்து நிறுத்தினதும் ஏறிப்போன உத்தமி தானே நீ. தாலி, கல்யாணமெல்லாம் உங்க குடும்பத்துக்கே ராசியில்லேடி. நான் நினைச்சா, உன்னை இப்பவே தூக்கிட்டுப் போயிட முடியும். உங்க அம்மா முகத்துக்காகப்

பார்க்கறேன். இப்பப் போறேன். ஆனா, விட்ருவேன்னு மட்டும் நினைக்காதே. நான் கண்... வச்சா வச்சதுதான். நீ என் கட்டிலுக்கு வந்தே தீர...ம்...'' என்று கத்திவிட்டு வெளியேறினான் ரங்கு.

ஒருகணம் தயங்கி நின்ற சோமு, சாரதாமணியைப் பார்த்து, "இதெல்லாம் நல்லா இல்லேம்மா, நீங்க எடுத்துச் சொல்லுங்க. உங்க பொண்...க்கு இதைவிட உசத்தியா எந்த சம்பந்தமும் அமைஞ்சிடாது. ரங்கு நல்லவன். ஆனா முரடன். கிடைக்கலேன்னா அழிச்சுடுவான். புத்திசாலித் தனமா நடந்துக்குங்க'' என்றான்.

அவன் நீட்டிய புத்தகப் பையைப் பிடுங்கி அவன் மீதே வீசியெறிந்த ரஞ்சிதா, "சீ... போடா. அவன் ஒரு குரங்கு. இவன் ஒரு கோட்டான். பேச வந்துட்டானுக...'' என்று சீறினாள்.

சோமு கண்களை உருட்டி, மிரட்டிவிட்டுச் செல்ல சாரதாமணி, மகளை அடக்கிவிட்டு, வாசலுக்கு வந்து, "தம்பி, ரங்கநாதா, அவ சொன்னது எதையும் மனசுல வச்சுக்காதப்பா. எங்களுக்கு யாரும் இல்லேன்னு நினைச்சுதானே இப்படியெல்லாம் வந்து பேசிட்டு போறே...?'' என்றாள்.

"சாமியாரம்மா, உங்க பின்னால ஒரு கூட்டம் இருக்குன்னு எனக்குத் தெரியும். அதுக்கெல்லாம் பயப்படற ஆளு நான் இல்லே. நீங்க எதாச்சும் மாயம்-மந்திரம் பண்ணலாம்னு நினைச்சா, இந்த ரங்குவோட, .....ரைக்கூட புடுங்க முடியாது. நான் நல்லவனா இருக்கறதும், கெட்டவனா மாறுறதும் உங்க பொண்... கையிலதான் இருக்கு.

எடுத்துச் சொல்லுங்க. இன்னும் ஒருமாசம் டைம் தர்றேன். நல்ல முடிவா எடுங்க. என்னை ஏமாத்தவும் முடியாது. எதிர்க்கவும் உங்களால முடியாது. வர்றேன்..." என்றபடியே மோட்டார் பைக்கைக் கிளப்பினான். சோமு பின்னால் ஏறி அமர்ந்ததும் அது புழுதி கிளப்பிய படி ஓடி மறைந்தது.

சாரதாமணி பேயறை பட்டதுபோல் நடுக்கம் உள்ளே பரவத் திகைத்து நின்றாள்.

# 8

மயிலிறகு ஆர்க்கெஸ்ட்ரா ஆடிமாசம் முழுக்க படு பிஸி. செவ்வாய், வெள்ளிக் கிழமைகள் பூராவும் அம்மன் கோயில்களில் புக் செய்திருந்தார்கள். வேறு சில நிகழ்ச்சிகளும் இருந்தன. கோவை, திருச்சி, மதுரை நாகர்கோயில் என்று தமிழ்நாடு முழுக்கப் பல்வேறு நகரங்களுக்கும் போய்வர வேண்டியிருந்தது.

இந்த நேரம் பார்த்து முரளிமோகன் திடீரென்று உடல் நலம் பாதிக்கப்பட்டான். நண்பர்கள் ஆடிப்போய் விட்டனர். அவனுடைய டீம் முழுக்க முழுக்க நண்பர் களால் உருவானது. சிலர் நல்ல உத்தியோகத்தில் இருந் தனர். ஒன்றிரண்டு பேர் சினிமா ஃபீல்டைச் சேர்ந்தவர் கள். எல்லோரும் முரளிமோகன் தலைமையில் ஒன்றி ணைந்து செயல்பட்டனர். நாளுக்குநாள் புகழடைந்து வளர்ந்து வரும் அந்த மெல்லிசைக் குழுவின் தலை வனுக்கு ஒரு பாதிப்பு என்றதும் அவர்கள் அத்தனை பேரும் ஒட்டுமொத்தமாகக் கலங்கிப் போய்விட்டனர்.

"டேய் மோகன், என்னடா ஆயிற்று உனக்கு?" என்று கேட்டு ஒவ்வொருவரும் துளைத்தெடுத்தனர். அதிலும் பாலு கொஞ்சம் அதிகமாகவே சத்தம் போட் டான். அவன் தான் மோகனுக்கு அதிக நெருக்கம். எங்கே போனாலும் காரை ஓட்டுபவனும் அவன்தான். மற்றவர் கள் ரயில், பஸ்ஸில் பயணிப்பர். தேவைப்பட்டால் மினிவேன் வாடகைக்கு எடுப்பதும் உண்டு. ஆனால், மோகன் எப்போதும் காரில்தான் பயணிப்பான்.

அவனும் ஓட்டுவான், பாலுவும் ஓட்டுவான். நிகழ்ச்சிகள் பற்றிய முழு விவரங்கள் அறிந்தவனும் கூட அவன்தான்.

மோகன் தாய்கூட பாலுவிடம்தான், "என்னப்பா ஆச்சு என் மகனுக்கு... ஏதாவது பேய் கீய் அடிச்சி இருக்குமோ?" என்று கேட்டாள்.

தலைவலி, காய்ச்சல், வயிற்றுக்கோளாறு, நெஞ்சு வலி இப்படி ஏதாவது என்றால் வெளிப்படையாகச் சொல்லலாம். ஆனால். மோகனுக்கு வந்திருப்பதோ விசித்திரமான உபாதையாய் இருந்தது. ஹைபடைஸ்- பி, டைபாய்டுவாக்ஸின் எல்லாமே முன்னெச்சரிக்கையாக போடப்பட்டிருந்தது. அவனுக்குப் பல ஊர்ப்பயணம், பலவிதமான ஆகாரம், தண்ணீர் ஆகியவற்றால் உடல் நலம் பாதித்துவிடக் கூடாது என்கிற எச்சரிக்கை உணர்வுடையவன் மோகன். பிறகு என்னதான் அவனுக்கு நேர்ந்துள்ளது?

ஒருநாள் காமராஜர் அரங்கில் இசை நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்தது... 'பார்வை ஒன்றே போதுமே' படத்தில் உன்னிகிருஷ்ணன் - ஹரிணி பாடிய -

**'திரும்பத் திரும்பப் பார்த்துப் பார்த்து**
**திரும்பத் திரும்பப் பேசி பேசி**
**திரும்பத் திரும்ப காதல் சொல்லும்**
**கனவுக் காதலா...'**

இந்தப் பாடலை மோகன் பாடிக் கொண்டிருந்தான். அவனுக்கு ஜோடியாக வினிதா பாடிக் கொண்டிருந்தாள். அப்போது திடீரென்று மோகன் மூச்சுத் திணறலுக்குள்ளானான். பாடல் வரிகளில் பிழைகள் நேர்ந்தன. இருப்பினும் ஒரு மாதிரி சமாளித்துப்

பாடி முடித்தவுடன், பாலுவைக் கூப்பிட்டு, "டேய்... எனக்கு ஒருமாதிரி தலை சுத்தலா இருக்கு. நகழ்ச்சியை நீ தொடர்ந்து நடத்து... பத்து நிமிஷத்துல வர்றேன்" என்று கூறி, ஒதுங்கினான். ஆனால் ஒரு மணி நேர மாகியும் மேடைக்கு வரவில்லை.

இரண்டு கைகளாலும் தலையைப் பிடித்தபடி உள்ளே போய் உட்கார்ந்து கிடந்தவனை அன்றிரவே டாக்டரிடம் அழைத்துப் போனார்கள். 'பிஸி, டென்ஷன் தான் காரணம். வேற கோளாறு எதுவுமில்லை. ஹி ஈஸ் பர்ஃபெக்ட்லி ஆல்ரைட்' என்று கூறிய டாக்டர், ஒரு பி டுவெல் இன்ஜெக்ஷன் போட்டு, தொடர்ந்து ஒரு கோர்ஸ் எடுத்துக் கொள்ள அட்வைஸ் செய்து அனுப்பி வைத்தார்.

மறுநாள் நிகழ்ச்சி எதுவுமில்லை. மூன்றாம் நாள் ராஜா அண்ணாமலை மன்றத்தில் ஒரு சாரிட்டிக்கு நிதி சேர்க்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மோகன், அதே 'பார்வை ஒன்றே போதுமே' படத்திலிருந்து உன்னிகிருஷ்ணன் பாடிய,

**'ஏ.... அசைந்தாடும் காற்றுக்கும்**
**அழகான பூவுக்கும்**
**காதலா, காதலா...**
**ஏ... அலையாடும் கடலுக்கும்**
**அது சேரும் மணலுக்கும்**
**காதலா, காதலா...**
**கொஞ்சம் இனிக்கும்**
**கொஞ்சம் கரிக்கும்**
**முத்தச் சுவைக்குள் மூழ்கவா...?'**

என்கிற பாடலைப் பாடிக் கொண்டிருந்தபோது, தள்ளாடினான். அவன் தாள கதிக்கேற்ப அசைவதாகவே மற்றவர்கள் எண்ணினர். ஆனால், வரிகள் தடுமாற அவன் இரண்டு முறை சாரி சொல்லிச் சமாளித்தபோது, பாலு புரிந்து கொண்டு அருகில் வந்தான். மோகன் இரு கைகளாலும் தலையைப் பிடித்துக் கொள்ளவே, அவனைப் போய் உள்ளே அமரச் சொல்லிவிட்டு,

''மன்னிக்க வேண்டும் ரசிகர்களே... முரளி மோகனுக்கு சற்று உடல் நலமில்லை. மறுபடியும் அவர் மேடைக்கு வருவார். அதற்குள் இப்போது சிதம்பரம் ஜெயராமன் குரலில் ஒருபாடல்'' என்று கூறி, அவனே 'வண்ணத்தமிழ் பெண்ணொருத்தி வந்தாள்...' என்று பாட ஆரம்பித்தான். ஆனால் நிகழ்ச்சி முடிகிறவரை மோகன் மறுபடி மேடைக்கு வரவே இல்லை.

இந்த நிலையில்தான் மறுநாள் நண்பர்கள் சூழ்ந்து கொண்டு அவனைத் துளைத்தெடுத்தனர்.

"டெய், சொல்லித் தொலைடா, உனக்கு என்ன தான் ஆயிற்று? நீ இப்படி மேடைக்கு மேடை மயங்கி விழுந்தா நம் டீம் கதி அதோகதிதான். ஏற்கெனவே இந்த ஃபீல்டுல போட்டி அதிகம். தாக்குப்பிடிச்சி நிக்கறதே கஷ்டம். இதுல நீவேற இப்படிப் பண்ணினா, நமக்கு வர்ற சான்ஸ் எல்லாம் கைமாறிப் போயிடும். உண்மையா உனக்கு என்னதான் பிரச்சனைன்னு நாங்க தெரிஞ்சுக்க வேணாமா? எதா இருந்தாலும் மனசுவிட்டுப் பேசுடா. உன் உடம்புக்கு எந்த வியாதியும் இல்லை. மனசுல ஏதும் பிரச்னை இருந்தா நீ சொல்லாம நாங்க எப்படிடா தெரிஞ்சுக்கறது?'' என்று அதட்டினான் பாலு.

"காதல் கீதல்ன்னு எதுலயாவது மாட்டிகிட்டியா?" என்றான் ஒருவன்.

"அட... இவனா... காதலா? ஏண்டா இவன்தான் காவி அணியாத சாமியார்ன்னு நமக்கே தெரியுமேடா. நம்ம டீம்ல வந்து பாடாத அழகிகளா..? யாரு பக்கமும் பார்வை திருப்பாத - ஜொள்ளு விடாத ஒரே கல்லுப் பிள்ளையார்டா இவன். இவங்க அம்மா வேற, 'கல் யாணம்னு பேச்செடுத்தாலே இவன் விளக்கெண்ணெய் குடிச்ச மாதிரி மூஞ்சியை வச்சுக்கறானேப்பா. இவனா பார்த்து யாரையாச்சும் காதலிச்சாக்கூட மறைக்காம எங்கிட்ட சொல்லுங்கப்பா. அவளையே கட்டி வச்சுட றேன்'னு நம்மை அரிக்கறாங்க. இவன் பிரச்சினை ஒண் ணுமே புரியலியே" என்றான் இன்னொருவன்.

அப்போதுதான் மோகன் வாய் திறந்து "ஒரு பொண்ணுதாண்டா என் பிரச்னை..." என்றான்.

"என்னது... பொண்ணா...? யாருடா அவ...?" என்று எல்லோரும் ஒரேகுரலில் ஆர்வமாகக் கேட்டனர்.

"அதுதான் யாருன்னு எனக்கே தெரியலே..."

"அடையாளம் சொல்லுடா. கண்டு பிடிச்சுடலாம். எங்கேயாச்சும் கோவில் திருவிழாவுல பார்த்தியா? இல்லே... எதாச்சும் கல்யாண வீட்லயா... கொஞ்சம் பார்க்க சுமாரா எந்த ஃபிகர் இருந்தாலும் சரி. அவளை எங்கே எந்த ஊர்ல பார்த்தோம்னு நம்ம ரவி டைரில குறிச்சு வெச்சுக்கறாண்டா. அதைப் பார்த்தா நீ சொல்ற அடையாளங்களை வச்சுக் கண்டுபிடிச்சுடலாம். இல்லே, வீடியோ டேப் வரவழைச்சு போட்டுப் பாத்துறலாம். சொல்லுடா... யாரு அவ... எப்படி இருப்பா...?"

மோகன் அவர்களைப் பார்த்து, "வாயை மூடுங்கடா. நாம ஊர் ஊரா போறது ஃபிகர்களை நோட் பண்ண இல்லே. இதெல்லாம் தெரிஞ்சா, அப்புறம் நம்மள யாராவது கூப்பிடுவாங்களா? என் பிரச்னை வேற மாதிரி..." என்றான்.

"அதுதான் என்னன்னு சொல்லேன்..."

"மேடைல மைக் பிடிச்சுப் பாடறப்ப, ஒரு நொடி தாளத்துல லயிச்சுக் கண்ண மூடினா போதும். அப்ப ஒரு காட்சி வருது. அதுல ஒரு பொண்ணு உயிரையே உருக்கற குரல்ல, 'என்னை எப்படியாச்சும் காப்பாத்துங் க'ன்னு அலறுறா, பளிச், பளிச்சுன்னு ஸ்லைடு போட் டாப்ல ஸ்னாப், ஸ்னாப்பா இந்தக் காட்சி வருது..."

"என்னடா மோகன் இது! விசித்திரக் கதையா இருக்கு... அவ எப்படி இருப்பா... எதாச்சும் அடையாளம் சொல்லேன்..."

விசித்திரம்தான். அவ முகமே தெரியமாட்டேங்குது. தண்ணிக்குள்ர யாரோ பிடிச்சு அந்தப் பெண்ணோட முகத்தை அமுக்கறா மாதிரி இருக்கு. மூச்சுத் திணற லோட அவ உயிரையே பிடுங்கியெறியறாப்புல அலறும் போது என் தலைக்குள்ர ரத்தமே தெறிக்கிற மாதிரி விண் விண்ணுன்னு வலிக்குது. மனசைப் போட்டு அந்தக் குரல் பிசையுது. அப்பத்தான் நான் பாட முடியாம தடுமாறிட றேன்..."

அவன் சொல்லச் சொல்ல நண்பர்கள் திகைத் தனர். இந்தப் பிரச்னைக்கு என்ன செய்யலாம் என்றே அவர்களுக்குப் புரியவில்லை.

"யாரையாவது சாமியார், மந்திரவாதியைப் பார்க் கலாமா?" என்று ஆலோசித்தனர்.

# 9

“அம்மா உன்னோட மந்திர சக்தியை வச்சு இந்த ரங்குவின் கொட்டத்தை ஒடுக்க முடியாதா? இவன் கை, கால் விளங்காம செஞ்சா என்ன... வாயாலயும் மூக்காலயும் ரத்தம் கக்கற மாதிரி ஏதாவது மந்திரம் போடேன்...” என்றாள் ரஞ்சிதா.

“ஏண்டி, என்னை என்ன சூனியக்காரின்னு நினைச்சியா? என்னிக்காவது நான் அப்படி ஏதாவது செஞ்சு பார்த்திருக்கியா நீ? நான் மந்திர சக்தியை எப்பவுமே கெட்ட காரியத்துக்குப் பயன்படுத்தறவ இல்லேடி. மனசு கலங்கி வர்றவங்களுக்கு, ‘பயப்படாதே. கடவுள் கிருபையால உன் கஷ்டம் விலகும்... சீக்கிரமே நல்லது நடக்கும்’னு ஒரு ஆறுதல் சொல்றதுக்கு தாண்டி நான் இந்தக் கோலத்துல இருக்கேன்..”

“இல்லம்மா. உன்னைப்பத்தி எனக்குத் தெரியாதா? தேள்கடி, பாம்புக்கடின்னு வர்ற எத்தனை பேருக்கு மந்திரிக்கறே... அதுமாதிரி இந்த ரங்குவும் ஒரு விஷப் பாம்புதாம்மா. இவன்கிட்டேருந்து நான் தப்ப ஏதாவது ஒரு வழி சொல்லக் கூடாதா நீ..?”

“கடவுளை நம்பு. தீவிரமான நம்பிக்கையும் ஆழ்ந்த பிரார்த்தனையும்தான் எல்லாப் பிரச்னைக்கும் தீர்வு...”

அப்போது கையில் பெரிய கூடையுடன் வந்த ஆண்டாளம்மா, “சாமியாரம்மா, எங்கே இந்தப் பொறுக்கிப்பய வந்துட்டுப் போறான்...?” என்று கேட்ட

படியே வாசல் பந்தலில் உட்கார்ந்தாள். அந்த இடம் கொஞ்சம் மேடான பகுதி என்பதால், ஏறி வந்த களைப் பில் அவளுக்கு மூச்சு வாங்கியது.

ஆண்டாளம்மா அடிக்கடி வருவாள். பக்கத்தில் உள்ள செல்லியம்மன் கோவிலைக் கூட்டிப் பெருக்கி சுத்தம் செய்வாள். விளக்கேற்றுவாள். பின்னாலுள்ள இலுப்பைத் தோப்பிலிருந்து உதிர்ந்த இலைச்சருகு, சுள்ளி களைச் சேகரித்துச் சென்று அடுப்பெரிப்பாள். ஏழைப் பெண்மணி, சாரதாமணியைச் சிறுவயது முதலே அறிந்த வளும் கூட.

“என்ன ஆண்டாளு, இந்தப் பையனை உனக்குத் தெரியுமா...?”

“ஏன் தெரியாம... கீமாத்தூர் பண்ணையார் மகன் தானே. உளுந்து பொறுக்க, கூலி வேலை பார்க்கன்னு நம்ம ஊர் ஏழை பாழைங்க அங்கன போய் வர்றது உண்டுதானே... ஒரு பொட்டப் புள்ளைய கூட விடாம சீண்டிக்கினே இருப்பான். கொஞ்சம் ஏமாந்து இளிச் சாலும் போதும். பம்புசெட்டு ரூம்புக்குள்ர தூக்கிட்டுப் போயிடுவான். ரொம்ப மோசமானவன். அவன் எதுக்கு இங்கன வந்துட்டுப் போறான்....?”

“ஏதோ பூஜை பண்ணனும்னு விவரம் கேட்டு வந்தான். சொல்லி அனுப்பிச்சேன். நீ போய் விளக்குப் போட்டுட்டு வா. அப்புறம் பேசலாம்...” என்று அவளைக் கத்தரித்து அனுப்பிய சாரதாமணி, “இவ காதுல உன் சங்கதி விழுந்தா போதும். ஊர் முழுக்க டமுக்கடிச் சிடுவா...” என்று முனகினாள்.

"கேட்டியாம்மா... அந்த ரங்குவைப் பற்றி ஊருக்கே தெரிஞ்சிருக்கு. நீயானா அவனை நல்ல தம்பின்னு சர்ட்டிபிகேட் பண்ணினே...ஃ" என்றாள் ரஞ்சிதா.

"அதெல்லாம் ஒண்ணுமில்லடி. அவன் மூஞ்சியைப் பார்த்தாலே காலிப்பயன்னு எழுதி ஒட்டியிருக்கே. எனக்குத் தெரியாதா? வாசல்ல வந்து நின்னு வம்பு பண்றவன் கிட்ட ஆவேசம் காட்டறது எப்பவுமே நல்லது இல்லேடி..."

"என்னவோ போ. காண்டாமிருகம், கரடி, புலி கிட்ட மாட்டின மாதிரி இருக்கு. எப்படித்தான் தப்பப் போறமோ தெரியலே. நீ ஏதாவது மாயமந்திரம் பண்ணுவேன்னு பார்த்தா அதுக்கும் வழியில்லேங்கறே... ஏம்மா, நிஜமாதான் கேட்கறேன். நீ எதுக்கு இந்த சாமியார் கோலம் போட்டுகிட்டிருக்கே. ஒவ்வொருத்தர் இந்த வேஷத்துல என்னமா சம்பாதிக்கறாங்க தெரியுமா... காரு, பங்களான்னு ஆடம்பரமா வாழறாங்க. நீயும் தான் பூஜை, புனஸ்காரம்லாம் பண்ணறே. ஏதோ கூலி வேலை செஞ்சு வயிற்றைக் கழுவறதுக்கு பதிலா நாம கொஞ்சம் கவுரவமா இருக்கோம். மற்றபடி நம்மகிட்ட என்ன வசதிம்மா இருக்கு..."

"ரஞ்சி, கூலிவேலை ஒண்ணும் கேவலமில்லை. நான் அதைச் செய்யவும் தயாராத்தான் இருந்தேன். கொஞ்சம் உசந்த குடும்பத்துப் பொண்ணுங்கறதால யாரும் அதுமாதிரி வேலைல்லாம் நமக்குத் தர மாட்டாங்க. உங்கப்பா வேற நாட்டு வைத்தியம், சோதிடம்னு ஆர்வம் காட்டினாரு. நானும் அதுல பாதி, இதுல பாதி அரைகுறையா கத்துக்கிட்டு ஏதோ காலம் தள்ளிட்டேன்.

இப்ப உன்னைக் கரை சேர்க்கறதுதான் எப்படின்னு தெரியாம முழிக்கறேன்..."

"என்னம்மா, இப்படிச் சொல்றே. நானா உனக்கு ஒரு பிரச்னை ஆயிட்டேன்?"

"இல்லடி ரஞ்சி. இது உனக்குப் புரியாது. சின்ன பெண்ணா இருந்தே... நானும் கவலைப்படாம இருந்துட்டேன். இப்ப நீ வளர்ந்துட்டே... அதிலயும் இப்ப ரெண்டு வருஷமா உன் வளர்த்தி சாஸ்தி. தேவதை மாதிரி ஆயிட்டே.. இந்த ரங்குப் பய வந்து உன்னோட அடுத்த அத்தியாயத்தை எனக்கு ஞாபகப்படுத்திட்டுப் போயிட்டான். இப்ப இவனைச் சமாளிக்கலாம். ஆனா இனிமே எப்பவுமே இந்தப் பிரச்னை எதிரே நிற்கும். என்ன பண்ற துன்னுதான் தெரியலே. உனக்கு நான் எங்கே போய்டி மாப்பிள்ளை பார்ப்பேன். யார் வீட்ல போய்ப் பேச முடியும்? நாம அநாதைங்கடி. ஒண்ணு சொன்னா கோவிச்சுக்க மாட்டியே..."

"என்னம்மா...?"

"ஒரு தாய் மககிட்ட இப்படிச் சொல்லக் கூடாது தான்- இருந்தாலும் வேற வழி தெரியலே..."

"சொல்லும்மா..."

"இந்த ரங்கு வேணாம்... சரி, ஆனா வேற நல்ல பையனா, உன் மனசுக்குப் பிடிச்சவனா யாராச்சும் இருந்தா, நீ அவனை லவ் பண்ணலாம்லே. அப்படி எதுனாச்சும் இருந்தா பயப்படாம என்கிட்ட வந்து சொல்லிருடி..."

"அம்மா..." என்று வீறிட்ட ரஞ்சிதா,

"கல்யாணம் பண்ணி வைக்க முடியலே... நீயா யாரோடயாச்சும் ஓடிப் போயிடுன்னு சொல்றியாம்மா.."

"சீச்சி... அப்படி இல்லேடி என் ராசாத்தி, நம்ம நிலைமை என்னன்னு நீ புரிஞ்சுக்கணும்லியா... அதுக் காகச் சொன்னேன்..."

"ஏம்மா நமக்கு சொந்தக்காரங்க்ன்னு ஒருத்தர் கூடவா இல்லே. உதவட்டும், உதவாம போகட்டும்... இருப்பாங்களே..."

"தெரியலே... இருந்தாலும் இருக்கலாம். இத்தனை நாள் சொல்லாதது பூரா இப்ப உனக்கு சொல்லிடறேன். எங்கப்பா இந்த ஊர்ல சிவன் கோயில் குருக்களா இருந்தார். நாத்திகத் தனம் எங்கும் ஒரு அலை மாதிரி பரவின காலம் அது. கோவில்ல ரொம்ப வருஷம் சம்பளமே தர்றதில்லே... ஏராள நிலம் நீச்சு இருந்தும் விளையலே... சாவி ஆயிடுச்சுனு சால்ஜாப்புதான் சொல் வாங்க. அப்பா எப்படியோ தாக்குப்பிடிச்சு ஜீவனோ பாயம் செஞ்சார். ஊர்ல ஒத்தை பிராமண வீடுதான். மத்தவாள்லாம் எங்கெங்கோ பிழைப்பு தேடிண்டு போயிட்டா. ஊர்ல யார் வீட்ல திதி, திவசம்னு நடந் தாலும் அப்பாதான் போவார். அதுல கிடைச்ச கால்படி, அரைப்படி அரிசில காலம் தள்ளினோம்.

அக்கா ஒருத்தி நெய்வேலி பக்கம் எங்கேயோ இருந்தா. அப்பப்ப பெட்டிய தூக்கிண்டு அழுதுண்டு வந்து நின்னது ஞாபகம் இருக்கு. மூணு சவரன் நகை போடலேன்னு பிரச்னை. அப்புறம் ஒரு நாள் அவ செத்துப் போன கடுதாசி வந்தது. அப்பா, அம்மா

போயிட்டு வந்தாங்க, அப்ப எனக்கு பத்து வயசு இருக்கும். பதினாலு வயசுல ஒரு அண்ணா இருந்தான். அவனோட ஸ்கூல் போன ஞாபகம் இருக்கு.

நான் முருகேசனோட ஓடிப்போனப்ப எனக்குப் பதினைஞ்சு வயசு. டவுன்ல சினிமா பார்க்கப்போக விடமாட்டாங்க வீட்ல. ஆறுமாசம், ஒரு வருஷத்துக்கு ஒரு முறைதான் அந்த சான்ஸ் கிடைக்கும். முருகேசன் அடிக்கடி சைக்கிள்ல டவுன் போய் வருவான். காபி பொடி, சர்க்கரை வாங்க அவங்கிட்டதான் அம்மா காசு தந்து அனுப்புவா. அடிக்கடி வீட்டுக்கு வரப்போக இருந்தான். அப்படித்தான் அவனோட பழக்கம் ஏற்பட்டுச்சு.

ஒருநாள் 'டவுனுக்கு சினிமா பார்க்க வரியா'ன்னு கூப்பிட்டான். ஏதோ துணிச்சல்ல போயிட்டேன். அது மேட்னி ஷோ. சாயங்காலம் திரும்பிடலாம்... அம்மா கேட்டா, மேலத்தெரு தனலட்சுமியோட முந்திரிக் காட்டுக்கு விளையாடப் போனேன்னு சொல்லி சமாளிச்சிடலாம்னு நினைச்சேன். தனம் உடையார் விட்டு பெண். என்னோட தோழி. போனா ரொம்ப நேரம் விளையாடிட்டு வருவேன். அம்மாவுக்கு சந்தேகம் வராது. அப்பா அன்னிக்கு ஊர்ல இல்லே. முருகேசனோட போய், சினிமா பார்த்துட்டு வெளியே வந்தா நல்ல மழை. இருட்டற வரை நகர முடியல. ஃபிரெண்டு ரூமுக்குப் போகலாம்னு அழைச்சிட்டுப் போய், அதை இதைப் பேசி என் வாழ்வோட விளையாடிட்டான்.

'ஓ'ன்னு அழறது தவிர, வேற ஒண்ணும் தெரியலே. 'பயப்படாதே. நான் உன்னை காப்பாத்தறேன்'னு சொல்லி, கடலூர்ல கொண்டு போய் தங்க வச்சான். அவன் பேச்சு அப்ப எனக்கு வேதமா இருந்தது. புது

சுகம், புது நம்பிக்கைன்னு நாட்கள் ஓடின. மைனர் செயினை வித்துத்தான் அந்த மைனர் விளையாட்டை நடத்தினான். அப்புறம் நாங்க ஊருக்கு வந்தப்ப, அப்பாவை ஊர்க்காரங்க ‘கோவில்ல நுழையாதீங்க’ன்னு தடுத்திட்டதாகவும், நாலே நாள்ல அப்பா தூக்குல தொங் கிட்டதாகவும் தெரிஞ்சுது. அம்மாவும் எங்க சுந்தர் அண்ணாவும் ஊரைவிட்டே போய்விட்டதாகவும் சொன்னாங்க. எதிர் வீட்ல ரொம்ப நாள் முன்னால இருந்த ஒரு புரோகிதர் குடும்பம் திருவண்ணாமலைல இருக்கிறதாகவும், அங்கேதான் ஆதரவு தேடிப்போயிருப் பாங்கன்னும் சிலர் சொன்னாங்க.

முருகேசன்தான் அப்பறம் சொஞ்சநாள் கழிச்சு ஆளனுப்பி விசாரித்தான். அந்தக் குடும்பம் மெட்ராஸ் போயிட்டதா தகவல் கிடைத்தது. எங்க அம்மாவும் அண்ணாவும் மெட்ராஸ்தான் போயிருக்கணும். முப்பது வருஷமாயிடுச்சு. இப்ப யார் எங்கே இருக்காங்கன்னு எப்படி கண்டுபிடிக்கிறது. அப்படியே கண்டுபிடிச்சாலும் நான் அவங்க மூஞ்சில முழிக்க முடியுமா? அண்ணா கல்யாணம் ஆகி, குழந்தை குட்டிகளோட நிச்சயம் எங்கேயாவது இருப்பான்...”

பேசப் பேச அம்மாவின் கண்களில் நீர்கசிவதைக் கண்டு மனம் தவித்தாள் ரஞ்சிதா. அம்மா நல்ல சிகப்பு. ஐம்பதைத் தொடும் வயது என்றாலும் கட்டுக்குலையாத திரேகவாகு. ரொம்ப குண்டு என்று சொல்ல முடியா விட்டாலும். பூசினாற் போன்ற உடம்பு. குண்டு முகம். பார்த்தவுடன் யாரையும் வசீகரித்துவிடும் கண்கள். வேண்டுமென்றே அவள் வனப்பையெல்லாம் சிதைத்துக் கொண்டிருப்பது பார்த்த மாத்திரத்தில் யாருக்கும் புரிந்துவிடும்.

அழகான சுருள் முடியை அம்மா, எலி கடித்துக் குதறினாற் போல் கன்னா பின்னாவென்று கத்தரித்துக் கொள்வதை ரஞ்சிதா பலமுறை பார்த்திருக்கிறாள். ஒழுங்காக எண்ணெய் தடவி வாரவே மாட்டாள். களை பிடுங்கப் போகிற பெண்கள் மாதிரி அள்ளிச் செருகு நான். அதிலும் சமீபகாலமாக ஆலம்பால் தடவி, நாலைந்து சடைக் கற்றையைத் திரித்துத் தொங்க விட்டுள்ளாள். ஏதோ முரடன், மீசையை முறுக்குவது போல் புருவங்களை நிரடி, நிரடி, மேற்புறமாக ஏற்றி விட்டிருக்கிறாள். இடது கன்னத்தில் தாடை ஓரம் ஒரு மிளகு அளவு மரு உண்டு. மாம்பழக் கன்னத்தின் அழகை எடுப்பாக ஆக்கும் அந்த மருவின் ஓரம் தேத்தாங் கொட்டையை இழைத்துச் சூடு போட்டுப் போட்டு, அசிங்கமான கருந்திட்டை கட்டை விரல் அளவு உருவாக்கியிருக்கிறாள். நெற்றியில் ஒரு ரூபாய் நாணய சைஸில் குங்குமப் பொட்டு. அதைச்சுற்றி விளிம்பு கட்டினாற்போல் கறுப்பு மைத் தீற்றல், சந்தனக் கீற்று, விபூதிப் பட்டை. கழுத்தில் குண்டு ருத்ராட்ச மாலை, சிவப்புப் புடவை. சிவப்பு ரவிக்கை, எப்போதும் வெற்றிலை குதப்புவதால் ரத்தச் சிவப்பான வாய் என்று யாரையும் கிட்டே நெருங்கவிடாத · அச்சமூட்டும் செயற்கைத் தனங்களுடன் சாமியாரிணி கோலம்.

இத்தனையும் அம்மாவின் தற்காப்புக் கவசம் என்பதை ரஞ்சிதா நன்றாகவே அறிவாள்.

'பாவம், ரொம்பவேதான் போராடி, நலிந்து, மனம் இறுகிக் கிடக்கிறாள். பாறை வெடித்து நெருப்பு பீறிட்டாற் போன்று இன்று அவளின் பழங்கதை முழுமையாய் வெளிப்பட்டு விட்டது. இந்த உலகத்தின் எங்கோ ஒரு

மூலையில் அவளுக்கும் சொந்தக்கார மனிதர்கள் இருக்கிறார்கள். எப்படியாவது முயன்று, வானைத் துழாவி, கடலைக் கடைந்து அந்த சொந்தத்தைக் கண்டுபிடித்தே தீர வேண்டும். விடக் கூடாது..." என்று தீர்மானித்தாள்.

அதற்கு ஓர் அரிய உபாயம் அவளுக்கு அன்றிரவே கிடைத்தது.

# 10

**சா**ரதாமணி, சாமியார் வேஷம் போட்டிருந்தாலும் நிறைய கதைப் புத்தகங்கள் படிக்கிற வழக்கம் உள்ளவள். கல்கியின் 'சிவகாமியின் சபதம்', சாண்டில்யனின் 'யவனராணி', நா. பார்த்தசாரதியின் 'மணிபல்லவம்', அகிலனின் 'வேங்கையின் மைந்தன்' என்று நிறைய சரித்திரக் கதைப் புத்தகங்களாகச் சேகரித்து வைத்திருந்தாள். எல்லாம் பத்திரிகையில் தொடராக வந்ததைப் படங்களோடு தொகுத்து பைண்ட் செய்த புத்தகங்கள். ஒரு கள்ளிப் பெட்டி நிறைய அவை அடுக்கப்பட்டிருந்தன.

அம்மா பெரும்பாலும் அந்தக் கதைகளில் வருகிற சாமியார் பாத்திரங்களை அடிக்கடி மிகவும் சிலாகித்துப் பேசுவாள். நாகநந்தி, தர்மானந்தர், நாங்கூர் அடிகள் என்று அம்மா விவரிக்க விவரிக்க, ரஞ்சிதா அந்தப் பாத்திரங்களை அப்படியே மனக்கண்முன் கொண்டுவந்து நிறுத்திப் பார்ப்பாள். பிறகு அந்தக் கதைப் புத்தகங்களை எடுத்து, அம்மா குறிப்பிட்ட சாமியார்களின் ஓவிய உருவங்களைப் பார்த்து ரசிப்பாள். பார்த்திபன் கனவில் அப்படி சாமியாராக வருபவர் மகேந்திர சக்கரவர்த்தியே தான் என்பதை அறிந்து அவள் வியந்து போனதுண்டு. ரஞ்சிதாவின் மனம் கவர்ந்து, எப்போதும் கனவிலும் தோன்றி உலவுபவர் நா. பா. வின் மணிபல்லவத்தில் வரும் நாங்கூர் அடிகள்தான். அவர் இரவெல்லாம் கழுத்தளவு தண்ணீரில் நின்றபடி தாமரை மலரின் இதழ்கள்

சூரிய ஒளிபட்டு முற்றாக மலரும் வரை அதையே உற்று நோக்கியபடி தவம் செய்யும் காட்சி அவளை சிலிர்க்க வைக்கும். பாம்பு வந்து கழுத்தில் சுற்றினாலும் அசைய மாட்டார் நாங்கூர் அடிகள்.

அப்பா! என்னவொரு திடசித்தம் - ஞான வைராக்கியம்! தவத்தின் அடிப்படையே ஆழ்ந்த நம்பிக்கையும், அசையாத மன உரமும்தானே?

அன்று இரவு தூக்கம் வராமல் புரண்ட அவள், 'ஏதாவது புத்தகம் படிக்கலாமே' என்று நினைத்தாள். குழப்பம், வேதனை, திகைப்பிலிருந்து மீள, மனசை வேறு எதிலாவது திருப்ப வேண்டும் போலிருந்தது. எழுந்து போய், கள்ளிப் பெட்டியைக் குடைந்தாள். நிறைய தல வரலாறு புத்தகங்கள், ஸ்தோத்திரங்கள் - மந்திரங்கள் - விதவிதமான சக்கர வரைபடங்கள் உள்ள புத்தகம், பீதாம்பர ஐயர் ஜாலத்திரட்டு, மலையாள மாந்திரீகம், ஜாதக அலங்காரம் என்று என்னென்னவோ மேலாக அடுக்கிக் கிடந்தன.

'அட! அம்மா மாந்திரீகம் செய்வதில்லை. ஆனால் எதற்கு இதையெல்லாம் சேகரித்து வைத்திருக்கிறாள்' என்று எண்ணியபடி குடைகையில், 'சித்தர்களின் சரிதம்' என்று ஒரு பைண்ட் வால்யூம் அகப்பட்டது. அவள் ஆர்வம் மேலிட, 'சித்தர் பாடல்கள் உண்டு. இது என்ன சித்தர்களின் சரிதம், பார்க்கலாம்' என்று எடுத்துப் புரட்டினாள். அது நாலைந்து வருடங்கள் முன்பு ஏதோ ஒரு ஆன்மிக சஞ்சிகையில் வெளியான தொடர் கட்டுரைகளின் தொகுப்பு. அம்மா பைண்ட் செய்து மேலே தலைப்பைக் கையால் எழுதியிருந்தாள். உள்ளே நிறைய இடங்களில் வரிகளின் கீழே அடிக் கோடிட்டி

ருந்தாள். சில பாராக்களில் மொத்தமாகக் கோடிழுத்து, பக்கத்தில் இரு கேள்விக் குறிகளை எழுதியிருந்தாள். சில இடங்களில் இரண்டு பெரிய ஆச்சர்யக் குறிகள்.

அம்மா ஆழ்ந்து படித்த புத்தகம் என்பதால் அதில் ரஞ்சிதாவுக்கும் ஆர்வம் ஏற்பட்டது. அதை எடுத்துக் கொண்டு பாயில் வந்து படுத்தவள், லாந்தர் வெளிச் சத்தில் படிக்கத் துவங்கினாள். அம்மா குறித்து வைத்த இடங்களாகப் படிப்பது சுலபமாக இருந்தது. முழுக் கட்டுரைகளின் சாரமும் அதுபோன்ற இடங்களில் தான் அழுத்தமாக வெளிப்பட்டிருந்தது.

அகத்தியர், போகர், சிவவாக்கியர் என்று பலரு டைய வரலாறுகள் அவள் முன்பே கேள்விப்பட்டது தான். பக்கங்களைப் புரட்டிக் கொண்டே போனால், சில நவீன கால அருளாளர்கள், யோகிகள், யோகினிகள் வரலாறும் காணப்பட்டன. அதில்தான் அம்மாவின் குறிப்புகளும் அதிகம் காணப்பட்டன. ஐம்பது வருடங் கள் முன்பு திருச்சி அருகே ஒரு குடியானவப் பெண், கூலி வேலைக்குச் சென்று திரும்பும் அந்திக் கருக்கலில், குளத்தில் கைகால் கழுவிக் கரையேறும் போது, எதிரே கரைமீது அரைத் தென்னமர உயரமுள்ள ஒரு ஆவி மனிதர் தோன்றி, 'ஏ புள்ள... இந்தாடி. இத வச்சுக்க' என்று கூறி, ஒரு வேரைத் தூக்கியெறிந்ததாகவும், அதைக் கீழே விழாமல் அவள் கையேந்திப்பிடிக்க கவனம் காட்டிய விநாடியில், ஆவி மனிதர் ஆளுயரத்துக்கு மேல் நீண்டு கிடந்த கள்ளி வேலியை அநாயாசமாகத் தாண்டிச் சென்று மறைந்ததாகவும், 'இதைப் பழனியாண்டி படத் தின் கீழே வச்சு, தூப தீபம் கொடுடி. உன் வாக்குப் பலிக் கும். காசு கண்ணை மறைச்சா, ஆண்டி மலையேறிடு வான்' என்று அசரீரி கேட்டதாகவும் ஒரு வரலாறு.

*அந்தப் பெண் பிறகு ஆவி மனிதர் சொன்னவாறே செய்ய, அவளுக்குள் ஒரு தெய்விக சக்தி ஆவாகனமா யிற்று. வாக்குப் பலிதம், மண்ணைக் கீறித் தந்தாலும் மருந்தாக மாறுவது என்று சித்து வேலைகள் நிகழவாரம் பித்தன. அவள் புகழ் எங்கும் பரவ ஆரம்பித்தது. சில வருடங்கள் வரை அவள் காசு, பணம் சேர்ப்பதில் குறியாக இல்லை. போகப் போக சொந்தங்கள் கூடி, வசூல் வித்தைகளைக் காட்டினர். சொத்துக்கள் குவிந்தன. சுகங்கள் பெருகின. சித்து வேலையும் மங்கி மறைந்து, அவள் சில அவமானங்களுக்கு உள்ளானாள்.*

*இதேபோல் வடநாட்டில், ஒரு ஏழைச் சிறுவன் முன் ஒரு சாமியார் தோன்றி, குடிக்க தண்ணீர் கேட்டார். அவனும் அன்புடன் தந்தான். அவனுடைய பணிவைப் பாராட்டி, அவனுக்கு ஒரு மந்திர உபதேசம் செய்துவிட்டுப் போனார் சாமியார். அவன் வளர, வளர சித்து வேலைகள் செய்ய ஆரம்பித்தான். புகழும், செல்வமும் குவிந்தன. அவன் எதையாவது தொட்டால் அந்தப் பொருள் உடனே மறைந்து போய்விடும். வாலிப வயதில் அவன் இந்த வித்தையைத் தவறாகப் பயன் படுத்தினான். நகைக்கடையில் போய் ஒரு நகையைத் தொட்டு விலைபேசிவிட்டு வாங்காமல் வந்துவிடுவான். அது பிறகு மறைவாக அவனிடம் வந்து விடும். நாளடை வில் அவன் கொள்ளைக்காரர்களுக்கும், கடத்தல்காரர் களுக்கும் கையாளாவிட்டான். இறுதியில் அவன் சக்தி விலகி, அவமானப்பட ஆரம்பித்தான்.*

*அம்மா அந்தப் பக்கங்களில் சிவப்பு மையால் நட்சத்திரக் குறிபோட்டு, 'ஆட்டம் போட்டால், அவ மானம் தான் மிஞ்சும்' என்று கமெண்ட் எழுதி வைத்தி*

ருந்தாள். அம்மா சித்து வேலைகள் எதிலும் ஆர்வம் காட்டாத ரகசியம் இப்போது புரிந்தது.

அடுத்த கதை சுவாரஸ்யமாய் இருந்தது. ஒரு பெண் சாமியார் பல வருடங்களாக அன்ன ஆகாரமில்லாமல் உயிர் வாழ்கிறார் என்ற செய்தி உலகமெல்லாம் பரவு கிறது. ஒரு பின்தங்கிய கிராமத்தின் பொட்டல் மேட்டில், தனியாக சிறு குடிசையில் வசித்த அவரைத் தேடி எங்கிருந்தெல்லாமோ மக்கள் வந்து குவியத் துவங்கினர். அவரைத் தரிசித்தால் நினைத்த காரியங்கள் நிகழ்வதாக மக்கள் நம்பினர். அவர் உபதேசம், அருள்வாக்கு எதுவும் செய்வதில்லை. காணிக்கை என்று ஒரு பொருளும் வாங்குவதில்லை. எப்போதாவது குடிசைக்குள்ளிருந்து வெளியே வந்து நிற்பார். மக்களைப் பார்த்துப் புன்முறுவல் காட்டுவார். கையைத் தூக்கி ஆசீர்வதிப்பார். அத்தோடு சரி. வேறு எதுவும் இல்லை.

ஆரம்பத்தில், அந்தப் பெண்ணுக்கு இடைஞ்சல் செய்த பலர் கொடிய பின்விளைவுகளுக்கு உள்ளாயினர். அதிலிருந்தே அவளைப் பற்றிய செய்தி வெளிஉலகுக்குத் தெரிய ஆரம்பித்தது. அது வெள்ளையர்களின் ஆட்சிக் காலம். பெரிய அதிகாரிகள், மருத்துவர்கள், பத்திரிகை யாளர்கள் எல்லாம் வந்து அப்பெண்ணைப் பற்றி துப்பு விசாரித்தும், ஆராய்ந்தும் பார்த்து அதிசயப்பட்டனர். அப்பெண் எப்போதாவது மழைநீரைக் குடிப்பதோடு சரி. பொய், புரட்டு ஏதுமில்லை. ஆகாரமின்றியே வாழ்கிறாள். உடல் நிலை சீராகவே இருக்கிறது என்று சான்று கூறினர்.

இந்த அதிசயத்தை மேலைநாட்டுப் பத்திரிகைகள் வியந்து விவரித்து எழுதின. அதில் கிடைத்த ஒரு செய்தி,

சிறு வயதில் பட்டினிக் கொடுமைகளை உணர்ந்த அவள் பல அவமானங்களுக்கும் உள்ளாகி, தற்கொலைக்கும் துணிந்து ஒரு ஆற்றில் போய் மூழ்கி, 'இறைவா, உண வின்றி உயிர் வாழ ஏதாவது வழியிருந்தால் காட்டு. இல்லையேல் இப்படியே சாகவிடு' என்று வேண்டி திட சித்தத்தோடு உட்கார்ந்து விட்டாள்.

இதோ உயிர் பிரியப் போகிறது என்ற நிலையில் ஒரு துறவி அவளைத் தூக்கிக் கரையில் நிறுத்தி, 'பெண்ணே! உன் குரல் கடவுள் காதில் விழுந்தது' என்று கூறி மந்திர உபதேசமும் செய்துவிட்டு, மாயமாய் மறைந்து போனார். அதன்பிறகு நீண்ட பல வருடங்கள் அவள் உயிர் வாழ்ந்து, பொன் - பொருள் - புகழ் ஆசை கள் எதுவுமின்றி இறை உணர்வில் ஒன்றியிருந்தாள். நாடி வந்தோர் நலம் பெற்றனர்.

இந்த அதிசயச் செய்தி அம்மாவின் மனசைக் கவர்ந்திருக்க வேண்டும். 'அடடா... இது சாத்தியமா? என்றும் திட- சித்தம்.... ஞான வைராக்கியம் எதைத்தான் சாதிக்காது' என்றும் குறிப்பெழுதியிருந்தாள்.

ரஞ்சிதாவின் மனத்தில் இது ஆழப் பதிந்து விட்டது. 'பசி, பட்டினியால் தவிக்கும் ஏழைகள் பல்லா யிரம் பேர் உள்ள ஒரு தேசத்தில் இதை ஒரு தீர்வாக யாருக்கும் உபதேசிக்க முடியாதுதான். இது பற்றிய கேள்விகளும் அந்தக் கட்டுரையில் எழுப்பப்பட்டு, விளக் கமும் கூறப்பட்டிருந்தன. இயல்பான மன எழுச்சியும், தெய்வ அருளும் ஒரு நேர்க்கோட்டில் சந்திக்க யாருக்கு வாய்ப்பு அமைகிறதோ அவர்கள் பாக்கியசாலிகள். நாமும் ஏன் அப்படி ஒருத்தியாக இருக்கக் கூடாது?' என்று எண்ணினாள் அவள்.

"என்னடி. விடிய விடிய படிச்சுக்கிட்டு... தூக்கம் வரலியா உனக்கு?" என்று அம்மா அதட்டினாள்.

"இதோ ஆச்சும்மா. தூங்க வேண்டியதுதான். அம்மா, இந்த 'டெலிபதி' அது இதுன்னு சொல்றாங்களே, அதெல்லாம் உண்மையா இருக்குமாம்மா...?"

"உண்மைதாண்டி. சித்தர்கள் எவ்வளவோ அற்புதம் பற்றியெல்லாம் பேசறாங்க. சித்த யோகம்கறது ஒரு அபூர்வ கடல். அதுல மூழ்கி எழுந்தா, நிச்சயம் முத்துக்களோட வரலாம்தான். மனோ அலைகள் மூலம் இந்தப் பிரபஞ்சத்தையே துழாவலாம். நானே இதைப் பத்தி யெல்லாம் நிறைய படிச்சாலும் தேமேன்னு சும்மா இருக்கேன். உனக்கு எதுக்குடி இதெல்லாம் இந்தச் சின்ன வயசுல... பேசாம தூங்கு..." என்றாள்.

ஆனால், ரஞ்சிதாவால் சும்மா இருக்க முடிய வில்லை.

முரளிமோகனின் தாயாருக்கு திடீரென்று எங்கிருந்தோ அப்படியொரு யோசனை உதித்தது. 'மகனுக்கு உடல் கோளாறு எதுவுமில்லை. மனசுதான் எதனாலோ பாதிக்கப்பட்டிருக்கிறது' என்பதை அறிந்ததும் அவள் இது ஏதோ காத்து கறுப்பு, கண் திருஷ்டி சமாச்சாரமாய் இருக்கும் என்று திருஷ்டி சுற்றிப் போட்டாள். வீட்டில் கணபதி ஹோமம் செய்யப் பட்டது. இருந்தும் ஒரு வாரமாக அவன் எங்கேயும் செல்லாமல், வீட்டிலேயே அடைந்து கிடக்கிறான். முகம் வெளுத்துக் கிடக்கிறது. ஷேவிங்கூட செய்து கொள்வ தில்லை. இரவில் கனவு கண்டு பிதற்றுகிறான். ஒன்றி

ரண்டு நகழ்ச்சிகள் கேன்ஸல் செய்தாயிற்று. நண்பர்கள் தினம் வந்து, கவலையோடு பார்த்துவிட்டுச் செல்கின்றனர் என்றதும், சௌதாமினி மகனிடம் வந்து,

"ஏண்டா மோகன், நீ ஒரு பத்துநாள் முன்னால திருமுதுகுன்றம் போனேன்னு சொன்னியே, ஞாபகம் இருக்கா... அப்ப அங்கேருந்து ரெண்டு கிலோ மீட்டர்ல இருக்கற மல்லமேடு மாரியம்மன் கோவிலுக்குப் போயிட்டு வந்தியோ....?" என்று கேட்டாள்.

"இல்லம்மா. டவுன்லயே நிறைய கோயில்கள். அதைப் பார்க்கவே நேரம் போதல. அது திடீர்னு ஏற்பாடான டிரிப் அம்மா. நான் கூட உங்கிட்ட கேட்கணும்னு நினைச்சேன். அங்கதான ஏதோ ஒரு ஊர் நம்ம பூர்வீகம்னு சொல்லுவே?"

"ஆமா. உங்கப்பா அந்த திருமுதுகுன்றம் டவுன பத்திதான் வாய் ஓயாம பேசுவார். பாவம் மனுஷன், எப்படியாவது ஒருமுறை நம்மையெல்லாம் அழைச்சுண்டு அங்கே போய் வரணும்னு ஆசைப்பட்டார். உனக்கு மல்லமேடு மாரியம்மன் கோயில்லதான் முடியிறக்கி, காது குத்தறதா இருந்தது. அது நம்ம குல தெய்வம். கடைசில குடும்பப் பிரச்சனையால அங்கே போக முடியலே. திருத்தணி போய் பண்ணிட்டோம். எனக்கென்னமோ நீ அங்கே போயிட்டு வந்தப்புறம்தான் இந்த அவஸ்தைன்னு தோணுது. உடனே மறுபடி ஒரு நடை அங்கே போயிட்டு வந்துடு. டவுன்ல விசாரிச்சா வழி சொல்வாங்க.. ஒரு அர்ச்சனை பண்ணிட்டு வந்தியானா கூட போதும். எல்லாம் சரியாயிடும்..."

"சரிம்மா. நீயும் புறப்படு. கார்ல போயிட்டு வந்துடுவோம்..."

மோகன் சம்மதிக்க, நண்பன் பாலுவும் இதை ஆமோதித்துக் காரோட்டி வர, மூவரும் அந்த ஞாயிற்றுக் கிழமையே திருமுதுகுன்றம் புறப்பட்டார்கள்.

# 11

இலுப்பைத் தோப்புக்குப் பின்னால் உள்ள ஏரிக்கு தினமும் காலையில் ஒருமுறை, மாலையில் ஒருமுறை குளிக்கப் போனாள் ரஞ்சிதா. போனால் திரும்பி வர நெடுநேரமாயிற்று. பள்ளி செல்லாமல் வீட்டிலேயே அடைந்து கிடப்பவள், ஒரு மாறுதலுக்காக இப்படி வெளியே சென்று வருவதைத் தடுக்க வேண்டாமே என்று விட்டுவிட்டாள் சாரதாமணி. கேட்டால், 'வழியில் அய்யனார் கோவில் கிணற்று மேட்டில் புவனாவோட பேசிக்கிட்டிருந்தேம்மா' என்பாள்.

ஒருநாள் மாலையில் ஆடு மேய்க்கிற சிறுவன் ஒருவன் விழுந்தடித்துக் கொண்டு ஓடிவந்து, "சாமி யாரம்மா, உங்க பொண்ணு ரஞ்சிதம் ஏரிக்குள்ர முழு கிடுச்சு. ரொம்ப நேரமா வெளியவே வரலே. ஓடியாந்து பாருங்கம்மா" என்றான்.

'இருந்த மனக் குழப்பத்தில் என்ன செய்தாளோ தெரியவில்லையே' என்று பதறியடித்துக் கொண்டு ஏரிக்கரை நோக்கி ஓடினாள் சாரதாமணி. 'ஊர் மக்கள் குளிக்க வேறு குளம் உண்டு. இது பாசன ஏரி. அதிக ஜனநடமாட்டம் இராது. நல்ல வேளை, ஒரு ஆடு மேய்க்கும் சிறுவன் கண்ணில் பட்டது. இல்லாவிட்டால் என்னவெல்லாம் ஆகியிருக்குமோ' என்று நினைத்தபடி ஓடிய சாரதாமணி, சர்வ நிதானமாக ஏரிக்கரையிலிருந்து இறங்கி வருகிற மகளைப் பார்த்து, அதிசயித்தபடி,

"என்னடி ரஞ்சிதா, நீ ஏரிக்குள்ர முழுகிவிட்டதா இந்தப் பையன் ஓடிவந்து சொன்னானே..." என்று கேட்டாள்.

"அவன் சொன்னது உண்மைதாம்மா. ஆனா, தெரியாமயோ கால் வழுக்கியோ விழலே. ஆழம் குறைச்சலான இடமா பார்த்து நான் வேணும்னேதான் முழுகி உட்கார்ந்திருந்தேன்..."

"எதுக்குடி... மூச்சுத் திணறிச் சாகவா. அந்தப் பய, கையைப் பிடிச்சி இழுத்தான்னு தற்கொலை பண்ணிக்கவே முடிவு பண்ணிட்டியா... அதுக்கான ஒத்திகையா இது..."

"ஏம்மா அப்படி நினைக்கறே. உன் மக கோழை இல்லே. அவசரப்பட்டு சாகமாட்டேன். சின்ன வயசுல நீ சொல்லித் தந்த பிராணாயாமப் பயிற்சியால தண்ணிக்குள்ள உட்கார்ந்து, மூச்சடக்கித் தவம் பண்றேன். என் கோரிக்கை கடவுள் காதுல விழும்கிற நம்பிக்கை எனக்கு இருக்கு. ஏழு நாள் கெடு வச்சிருக்கேன். அதுக்குள்ர நான் நினைச்சது நடக்கலேன்னா ஒருவேளை அப்படியே தண்ணிக்குள்ர மூச்சை விட்டாலும் விட்ருவேன். இது சத்தியம்மா..."

ரஞ்சிதா, அந்த மோகனை மனசில் இருத்தி, மீண்டும் அவனைச் சந்திக்கும் ஆவலையும் அவன் ஏன் தன் உறவினனாக இருக்கக் கூடாது என்பதையுமே ஆழ் மனதில் ஆவலாகப் பதித்து, 'பாதுகாப்பான உறவைத் தேடிக்கொடு' என்றே ஆண்டவனிடம் முறையிட்டாள்.

மகளின் மன உறுதியும், பிடிவாத குணமும் சாரதாமணி அறிந்ததுதான். "ஏண்டி, எதையாவது நினைச்சு, பைத்தியக்காரத்தனமா ஏதாவது செஞ்சு வைக்காதடி. நானும் ஒரு திட்டம் யோசிச்சு வச்சிருக்கேன். வர்ற ஞாயிற்றுக் கிழமை நாம மல்லமேடு மாரியம்மன் கோயிலுக்குப் போறோம். அங்க சொல்றேன் திட்டம் என்னன்னு. நீ கொஞ்சம் பொறுமையா இரு."

ஞாயிற்றுக் கிழமை. மல்லமேடு மாரியம்மன் கோவிலில் கூட்டம் சுமாராகத்தான் இருந்தது. செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில்தான் அங்கு கூட்டம் நெரிபடும். சுத்துவட்டு முப்பது கிராமங்களில் இருந்து அங்கு மக்கள் வண்டி கட்டிக் கொண்டு வந்து குழுமி விடுவர். பொங்கல் வைத்துப் பூஜை நடக்கும்.

திருமுதுகுன்றம் டவுனுக்குப் போகும் மெயின் ரோட்டிலிருந்து சற்று உள்ளடங்கி ஒரு கிலோ மீட்டர் தொலைவில் இருந்தது இந்த கோவில். விசேஷ நாட்களில் மட்டும் டவுன்பஸ், கோவில் வரை வந்து செல்லும். மற்ற நாட்களில், மெயின் ரோட்டில் வந்திறங்கி, நடக்க வேண்டும்.

மல்லமேடு மாரியம்மன் பற்றிய ஒரு சிறப்புத் தகவல்: அம்மனுக்கு இங்கு உருவம் கிடையாது. ஒரு பலி பீடம்தான் இங்கு மூலஸ்தானம். அதன்மீது முகத் துடன் கூடிய வெள்ளிக் கவசம் சார்த்தி, மஞ்சள் பாவாடை அணிவித்திருப்பர். மூலஸ்தானத்தை ஒட்டியே பெரிய புற்று உண்டு. நேர்ச்சையாக மஞ்சள் - குங்குமம் கொட்டுவார்கள். கோவில் சிறியதுதான். மண்டபம்தான் பெரிதாக இருக்கும். எங்கும் தூணுக்குத் தூண் உப்பும், மிளகும் இறைந்து கிடக்கும். மலைவேம்புதான் தல விருட்சம், பிரம்மாண்ட சைஸில் கோவிலை ஒட்டியே வளர்ந்து கிடக்கும். சுற்றிலும் வன்னி, வாகை, கிளுவை, ஆல், அரசு எல்லாம் நூற்றுக் கணக்கில் மண்டிக் கிடக் கும். நெடுங்கால மரங்கள்... குட்டிவனம் போல் இருக்கும்.

மாரியம்மன் சந்நிதி எதிரே ஆளுயரத்திலான நாப்பது, ஐம்பது சூலங்கள் நட்டுக்கிடக்கும். அதில் கோரிக்கை சீட்டுகளைக் கட்டுவது பிரசித்தம். ஒரு புகார், ஒரு மண்டலத்தில் தீர்க்கப்பட்டுவிடும் என்பது மக்களின் ஆழ்ந்த நம்பிக்கை. எப்பேர்ப்பட்ட எதிரியும் இங்கு

சீட்டுக் கட்டியவுடன் அடங்கி விடுவான் என்பார்கள். அதையும் மீறினால் 'பாக்கு வெட்டுதல்' என்று ஒரு சடங்கு உண்டு. அதைச் செய்தால், எதிரி குடும்பம் கூண்டோடு குளோஸ். ஆனால் அதை அத்தனை எளிதில் யாரும் செய்வதில்லை. 'பகை மறைய வேண்டும், பகைவன் மனம் மாற வேண்டும்' அவ்வளவுதான் தேவை 'ஆளே அழிய வேண்டும்' என்பது கொஞ்சம் அதீதம். அதை வேண்டுவது அநாகரிகம் என்கிற அளவு நல்ல மனங்கள் இன்னும் இருக்கின்றன. இந்தச் சடங்கு வெகு அபூர்வமாகவே நடக்கும்.

சாரதாமணி அம்மாள் தன் மகளுக்காக ஒரு புகாரை எழுதி அந்த சீட்டை மடித்து, மஞ்சள் நூல் சுற்றி, விசேஷ பூஜை செய்து எடுத்துக் கொண்டு, மகளுடன் வந்திருந்தாள். அவர்கள் ஒரு வாடகைக் குதிரை வண்டியில் வந்து இறங்குவதைப் பார்த்துவிட்ட சோமு, உடனே சைக்கிளில் தலைதெறிக்க ஓடி, ரங்கு வுக்குத் தகவல் சொல்ல, அவனும் இரண்டில் ஒன்று பார்த்துவிடும் ஆவேசத்துடன் மோட்டார் சைக்கிளில் பாய்ந்து புறப்பட்டான்.

பத்தாவது நிமிடத்தில் ரங்கு வந்து சேர்ந்து விட்டான். அவனோடு மோட்டார் சைக்கிளில் தொற்றிக் கொண்டு வந்து இறங்கிய சோமு, "அதோ பாருங் கண்ணே, அந்தக் குட்டியும் ஆத்தாளும்... அர்ச்சனை பண்ணிட்டாங்க போல. சீட்டுக் கட்டற இடத்துக்கு வந்துட்டாங்க. கொஞ்சம் லேட்டாயிடுச்சு. நீங்க ஓடிப் போய் அவங்கள சீட்டுக் கட்ட விடாம உடனே தடுங் கண்ணே..." என்று துரிதப்படுத்தினான்.

அர்ச்சனைத் தட்டிலிருந்து அம்மன் பாதத்தில் வைத்து எடுத்து வந்த சீட்டை அம்மா எடுத்துத் தர, அதை வாங்கிய ரஞ்சிதா நூலைப் பிரித்து சூலத்தில்

கட்டுவதற்காகத் திரும்பியவள், ஒருகணம் அங்கே வருபவர்களைப் பார்த்துத் திடுக்கிட்டாள்.

அது. ரங்குவையும், சோமுவையும் பார்த்து அல்ல. அங்கே ஒரு கார் வந்து நிற்க, அதிலிருந்து மோகன் கீழிறங்கி நிற்பதைத்தான் அவள் பார்த்தாள். கூடவே மோகனின் தாயாரும், நண்பன் பாலுவும் வந்தனர். அதைவிட ஆச்சர்யமாக அதே காரிலிருந்து ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டரும் இறங்கி வந்தார்.

ரஞ்சிதா, அம்மாவிடம் மோகனை சுட்டிக்காட்டி, "அம்மா, அவர்தான் அன்று என்னைக் காப்பாற்றியவர்" என்று கூறவும், மோகன் அவளைப் பார்க்கவும் சரியாக இருந்தது. அவனும், "என்ன ரஞ்சிதா, சௌகர்யமா இருக்கியா? அப்புறம் அந்தப் பயல் உங்கிட்ட எதாச்சும் வாலாட்டினானா..?" என்று விசாரித்தபடியே அருகில் வந்து நின்றான்.

போலீஸ் அதிகாரியை சுட்டிக்காட்டிய மோகன், "இவர் என் ஃப்ரண்ட். டவுன் ஸ்டேஷன்லதான் இருக்கார். அன்னிக்கு நீ 'கம்ப்ளைண்ட் கொடுக்க வேணாம்'னு சொன்னாலும், அந்தப் பய செஞ்ச கலாட்டாவை நான் நட்பு முறையில இவர்கிட்ட சொல்லிட்டேன். அவனைப் பற்றி தெரியும். 'இன்னொரு தடவை வாலாட்டினா பிடிச்சுகிட்டு வந்து சுளுக் கெடுத்துடறேன்'னு இவர் சொன்னார். நீ எதுக்கும் பயப்படாதே" என்றான்.

பரஸ்பர அறிமுகம் நடந்தபோது, சாரதாமணி அம்மாள் (மோகனையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள். எதனாலோ அவள் கண்கள் கலங்கின.

"என்னம்மா அப்படிப் பார்க்கறீங்க... ஏன் கண் கலங்கறீங்க?"

“இல்லப்பா... நீ அப்படியே அச்சு அசலா எங்க அண்ணன் சாயல்ல இருக்க. அதை நினைச்சேன். அண்ணன் ஞாபகத்துல கண் கலங்கிடுச்சு.”

“உங்க அண்ணன் பேர் என்ன... அவர் இப்ப எங்கே இருக்கார்?”

“சுந்தரமூர்த்தின்னு பேர். நாங்க சின்ன வயசுலயே பிரிஞ்சுட்டோம். அண்ணா இப்ப எங்க இருக்கார்னு தெரியாது...”

“அவர் மேல போய் ரெண்டு வருஷமாச்சு. ஒரு ஆக்ஸிடெண்ட்...” என்று மேலே கையை உயர்த்திக் காட்டிய மோகன், “இப்ப எனக்கு ஞாபகம் வருது. அப்பா அடிக்கடி எனக்கு ஒரு அத்தை உண்டுன்னு சொல்வார். உங்களைப் பார்த்தா அப்படியே எங்க பாட்டி சாயல். நான் அவங்களை நல்லா பார்த்திருக் கேன். பாட்டி எப்பவுமே சின்ன மகளை நினைச்சு அழு வாங்க. உங்க பேர் சாரதாமணியா...?” என்று கேட்டான்.

சாரதாமணி அம்மாள், “அட என் செல்லமே... டக்குனு கண்டுபிடிச்சுட்டியேடா...” என்று பாய்ந்து அவனைக் கட்டிப் பிடித்துக் கொண்டாள்.

பாசம் அங்கு அன்பு மழை பொழிந்தது. பழங் கதைகள் நொடியில் அலசப்பட்டன. உறவுக் காந்தம் உரிமையுடன் உறுதியாகப் பற்றிக் கொண்டது. குலதெய்வம் கோவிலில் புது உறவு பூத்தது. பற்றுக்கோடு இல்லாது தத்தளித்த மனோரஞ்சிதப் பூங்கொடி, தன் மனோ அலைகளால் பிரபஞ்சத்தைத் துழாவிக் கண்டு பிடித்த அன்புப் பூங்காவில் பாய்ந்து பரவி ஆயிரம் பூக்க ளாய் மலர்ந்தது.

காய்ந்து கிடந்த காட்டில் காட்டுத் தீயும் பற்றிக் கொண்டது போன்றிருந்தது அந்தக் காட்சி.

"என்னப்பா மோகன், நீ டவுனுக்கு வந்து என்னையும் அழைச்சுகிட்டு வந்தே, கோவிலுக்கு வழிகாட்டுன்னு. நான் கோயிலுக்கு வழி காட்டினதோட, நீ புகார் தராமலே உன் காணாம போன சொந்தங்களைக் கண்டு பிடிச்சுக் கொடுத்து, உன்னோட வாழ்க்கைக்கும் வழி காட்டிட்டேன்" என்று சிரித்தார் போலீஸ் அதிகாரி.

"மொதல்ல எல்லாரும் கோவிலுக்குப் போய் அம்மனை சேவிப்போம் வாங்க..." என்றாள் மோகனின் தாய்.

அவர்கள் சந்நிதிக்குள் போனார்கள். போலீஸ் அதிகாரியோடு ஒரு குடும்பம் வருவது கண்டு அங்கு சகல மரியாதைகளுடனும் தீபாராதனை நடந்தது. சமீபத்தில் போஸ்டரில் மோகனின் படம். பார்த்திருந்த அர்ச்சகர், பெரிய மாலை ஒன்றை எடுத்து வந்து அவன் கழுத்தில போட்டு, "நம்ம கோவிலுக்கு ஒருமுறை வந்து இசை நிகழ்ச்சி நடத்திக் கொடுங்கோ. கும்பாபிஷேக வேலைகள் ஆரம்பமாகப் போகிறது..." என்றார்.

'ராஜமரியாதைகளோடு வந்திருக்கும் ஒரு பிரபலஸ்தனின் பக்கத்தில் நிற்கும் ரஞ்சிதாவிடம் இனி, தான் வாலாட்ட முடியாது' என்கிற நினைவோடு ரங்கு மோட்டார் சைக்கிளைத் தள்ளிக் கொண்டு புறப்பட்டான். அது கூட அவனுக்கு புத்தி புகட்ட, அப்போதைக்கு ஸ்டார்ட் ஆகாமல் சண்டித்தனம் செய்தது.

ரஞ்சிதா நிம்மதிப் பெருமூச்சு விட்டபடி மோகனுடன் அம்மன் கோவிலை வலம் வர ஆரம்பித்தாள்.

❑ ❑ ❑

# மலையோரம் வீசும் காற்று

ஆதித்தகுமாரிடமிருந்து வந்துள்ள அழைப்பு அதிர்ஷ்ட தேவதையிடமிருந்து வந்திருக்கும் அழைப்பு என்றே எண்ணினான், தமிழ்க்கண்ணன்.

ஆதித்தகுமார், பிரபல நடிகர். ஆக்ஷன் ஹீரோ. பல வெற்றிப்படங்களை அளித்தவர். அவருடைய கால் ஷீட் கிடைப்பதே அரிது. அவரை வைத்துப் படமெடுக்க நான், நீ என தயாரிப்பாளர்கள் போட்டி போடுகின்றனர்.

அறுபது, எழுபது, எண்பது என்ற ரீதியில் அவரது சம்பளம் பற்றிப் பேசப்படுகிறது-லகரங்கள்தான். ஒரு கோடி ரூபாய் கொடுத்து, ஆதித்தகுமார் கால்ஷீட் பெற்று விடவும் சில தயாரிப்பாளர்கள் தயார்தான். ஆனால், ஆதித்தகுமார் கண்ணை மூடிக் கொண்டு எல்லாப் படங் களையும் ஒப்புக்கொண்டு விடுவதில்லை. அவரிடம் இன்னும் மூன்று அல்லது நான்கு வருடங்களுக்குத் தேதியே இல்லை.

ஒப்புக்கொண்ட படங்களை ஒவ்வொன்றாக முடித்து விட்டுத்தான் இனி புதிய படங்கள் ஒப்புக் கொள்வேன் என்று வேறு அவர் அறிவிப்பே வெளியிட் டிருக்கிறார்.

இந்த நிலையில் ஆதித்தகுமார் தன்னை அழைக் கிறார் என்றதும் தமிழ்க்கண்ணன் கொஞ்சம் தடுமாறவே செய்தான். அவனுக்குச் சிறிது நெர்வஸாகவே இருந்தது.

ஆனாலும் அவன் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை

ஆதித்தகுமாரை வைத்து ஒரு படம் பண்ண வேண்டுமென்று அவனுக்கு வெகுநாட்களாவே ஓர் ஆசை உண்டு.

அதுமட்டும் நடந்துவிட்டால், அவனுக்கு ஒரு நல்ல பிரேக் கிடைத்துவிடும். ஃபிலிம் இண்டஸ்ட்ரியில் அவனும் அழுந்தக் கால் ஊன்றி நிற்கலாம். அதன் பிறகு ஒரு படம் இயக்க பத்து லட்ச ரூபாய்க்கு மேல் வாங்கும் தகுதி அவனுக்கு வந்துவிடும்.

'டி.எஃப்.டி என்ற மூன்றெழுத்தை வைத்துக் கொண்டு அவனவன் சினிமா உலகையே கலக்கிக் கொண்டிருக்கிறான். நமக்குப் பின்னால் வந்தவன்-திரைப் படக் கல்லூரியைச் சும்மா பேருக்கு மட்டும் எட்டிப் பார்த்துவிட்டு வந்தவனெல்லாம் நிறைய படம் பண்ணி, பேரும் புகழும் பணமும் சம்பாதித்து நிற்கிறான். நம்மால் முடியவில்லையே' என்று அவன் தவித்த நாட்களும் உண்டு!

ஒன்றிரண்டு படவாய்ப்புகள் அவனுக்குக் கிடைத் தன. உருப்படியான பெயரைத்தான் சம்பாதிக்க முடிய வில்லை. ஆனால், எப்படியோ உதவி இயக்குநர் என்ற நிலையைத் தாண்டி, இயக்குநர் தமிழ்க்கண்ணன் என்ற பெயரை அவன் பெற்று விட்டான். இரண்டு படங்கள் டைரக்ட் செய்தான். ஒன்று சுமாராகப் போயிற்று- மற்றொன்று ஓடவில்லை.

ஆதித்தகுமாருக்கு எப்போதுமே புதியவர்களை ஊக்குவிப்பது பிடிக்கும். அதிலும் பிலிம் இன்ஸ்டிட்யூட் மாணவர்கள் திரையுலகில் சக்கைப்போடு போடுவதால்,

தானும் சிலரைக் கைதூக்கி விட்ட பெருமையை அடைய வேண்டுமென்று அவருக்கு ரொம்ப நாளாகவே ஓர் ஆசை. அதை அவ்வப்போது, அவர் செய்தே வருகிறார். தமிழ்க்கண்ணன் பற்றி அறிந்ததும் அவனுக்கும் அழைப்பு விடுத்தார்.

ஆதித்தகுமாரின் செயலாளர் கதிரேசனே நேரில் வந்து தமிழ்க்கண்ணனைச் சந்தித்து, "ஆதித்தகுமார் உன்னைச் சந்திக்கணும்னு சொன்னார். புறப்படுப்பா..." என்றார்

தமிழ்க்கண்ணனுக்குத் தெரியும், கதிரேசன் எவ்வளவு முக்கியமானவர் என்று. அவர் ஆதித்தகுமாரின் செயலாளர் மட்டுமல்ல; நெருங்கிய நண்பரும் கூட. சினிமா வட்டாரத்தில் அவர் நன்கு பிரபலமானவர். அவர் தயவிருந்தால்தான் ஆதித்தகுமாரின் கால்ஷீட்டே கிடைக்கும்

அவரே வந்து வாசலில் காரை நிறுத்தி வைத்துக் கொண்டு தன்னை அழைக்கும்போது, எப்படி மறுப்பதென்று அவனுக்குப் புரியவில்லை. 'உடனே புறப்படு' என்று அவசரப்படுத்துகிறாரே!

"அண்ணன் எதுக்குக் கூப்பிடறாருன்னு உங்களுக்குத் தெரியாமலா இருக்கும்? சொல்லுங்க சார்... ஒரே டென்ஷனா இருக்கு..." என்றான்.

"எதுக்குப்பா டென்ஷன்... நான் இருக்கேன்ல. சட்டுன்னு புறப்படு. எல்லாம் நல்லதுக்குத்தான்."

கதிரேசன் கையைப்பிடித்து இழுக்காத குறையாக வலியுறுத்தவே, தமிழ்க்கண்ணன் அவசரமாகத் தலை வாரி, சட்டை மாற்றிப் புறப்பட்டான். மனசில் மட்டும்

லேசாக ஒரு 'திக் திக்' இருந்தது.

'எவ்வளவு பெரிய நடிகர். அவருடைய அழைப்பு நிச்சயம் அதிர்ஷ்ட தேவதையின் அழைப்புதான். அவரிடம் நாம் என்ன பேசப்போகிறோம்? அவரை வைத்து இயக்குகிற வாய்ப்பு நமக்கு அளிக்கப்படுமா... அப்படியானால் அதற்கு நல்ல சப்ஜெக்ட் வேண்டுமே! ஒரு கதை தயார் பண்ணி சொல்லுப்பா என்றால், என்ன கதை சொல்வது? நல்லதாக அமைய வேண்டுமே...' இதே எண்ணங்களுடன் பயணித்தான். கார் ஓடிக் கொண்டிருந்தது.

கதிரேசன் எதுவும் பேசவில்லை. அவனுடைய டென்ஷன் அடங்கட்டும்-யோசிக்கட்டும் என்று விட்டு விட்டார்.

கார் மாம்பலம் பாண்டிபஜார் வழியாக ஓடி, சவுத் உஸ்மான் சாலையில் பிரவேசித்தது. பனகல் பார்க் தாண்டி. சிறிது தூரத்தில் இடப்புறம் ஒரு சந்தில் நுழைந்து. சற்று உள் ஒடுக்கமாக இருந்த அடுக்குமாடிக் கட்டடம் ஒன்றின் முன் நின்றது.

பார்த்தாலே பணக்காரத்தனம் நன்கு புலப்படும் கட்டடம்.

வாகனங்கள் நிறுத்த வசதியான காம்பவுண்ட் இருந்தது. காவலாள் இருந்தான். கதிரேசனுக்கு சல்யூட் செய்தான்.

இருவரும் இறங்கி, படிகளில் ஏறினர்.

இரண்டாவது மாடியில் இருந்தது வைகறை அபார்ட்மெண்ட். அதுதான் ஆதித்தகுமாரின் இருப்பிடம், அலுவலகம்... எல்லாம்.

முன் அறையில் சிலர் அமர்ந்திருந்தனர். அதில் ஓர் இளம் நடிகையும் இருந்தாள். கதிரேசனைக் கண்டதும் எல்லோரும் எழுந்து நின்றனர். அவர் யாரிடமோ "என்னப்பா... எப்ப வந்தே?" என்று விசாரித்தபடி ஒரு கணம் தயங்கி நின்றார்.

நடிகை அவருக்கு ஒரு பெரிய கும்பிடு போட்டபடி அருகில் நெருங்கி வந்து நின்றாள்.

தமிழ்க்கண்ணன் சற்று ஒதுங்கி, ஓர் அலுமினிய நாற்காலியில் போய் அமர்ந்தான்.

அவர்கள் பேச, தான் ஒரு தடைபோல அருகில் நிற்பது அவனுக்கு சங்கடமாக இருந்தது. பேசி முடிக்கட்டும் என காத்திருக்க நினைத்தான். ஆனால் கதிரேசன் விடவில்லை.

"அட என்னப்பா நீ, உட்கார்ந்துட்டே... வா... வா..." என்றபடி அவர்களிடமிருந்து ஒதுங்கி, உள்ளறைக் கதவைத் திறந்து நின்று அவனை அழைத்தார்.

நடிகை அவனை அறிந்து வைத்திருந்ததால், வழி மறிப்பது போல் வந்து, "என்ன சார் சவுக்கியமா? சாரோட படம் பண்ணப் போறீங்களா? என்னை மறந்துடாதீங்க..." என்று ஆரம்பித்தாள்.

லஜ்ஜையற்ற ஒரு கலகலப்பு தென்பட்டது அவளிடம்.

அவன் எங்கே நிற்கவோ, அவளிடம் பதில் பேசவோ சந்தர்ப்பமே தராமல் அவன் கையைப்பிடித்து இழுக்காத குறையாக உள்ளே அழைத்துச் சென்றார் கதிரேசன்.

உள்ளே ஆதித்தகுமார் ஸாட்டிலைட் டி.வி. பார்த்துக் கொண்டிருந்தான். வெள்ளை உடம்புப் பெண்கள் திரிதிரியான முடிக்கற்றைகளை விரித்துப் போட்டுக் கொண்டு, தாம் தூம் என்று குதித்துக் கொண்டிருந்தனர்.

ஒருத்தி அடிக்கடி குட்டைப் பாவாடையை எதற் காகவோ உதறினாள்.

ஒருத்தி அடிக்கடி குளோசப் ஷாட்டில் முகம் பெரிதாகி, மைக்கை விழுங்குவது போல் வாய்பிளந்து ஏதோ கூவிக் கொண்டிருந்தாள். அடுத்த லாங் ஷாட்டில் ஆடிட்டோரியத்தில் கூட்டம் உற்சாகம் கொப்பளிக்கக் கூத்தாடியது.

என்ன ஆட்டமோ, என்ன பாட்டோ...!

'நாட்டுப்புற குக்கிராமங்களில் வேப்பமரத்தடி கோயில்கள் சிலவற்றில் நிகழும் பேயாட்டப் பெண் களின் குதியல்களுக்கும் இதற்கும் அதிக வித்தியாசம் புலப்படவில்லை' என்றெண்ணினான் தமிழ்க்கண்ணன்.

ஒரு வேளை அது, ஒதுக்கப்பட்டு-அடக்கப்பட்டுக் கிடக்கும் பெண்களின் மன அழுத்தங்களுக்கான மந்திர வடிகால் எனில், இது சுதந்திரக் காற்றை அதிகம் சுவாசிக்கும் மேலை நாட்டுப் பெண்-ஆண்களின் மன அழுத்தங்களுக்கான விஞ்ஞான ரீதியிலான வடிகால் களோ என்னவோ!

ஆதித்தகுமார் கதவு திறக்கும் சப்தம் கேட்டதும் சட்டென்று ஃபாரின் டி.வி.யின் வால்யூமைக் குறைத்தான். ரிமோட் கண்ட்ரோல் சாதனத்தை டீபாயின்மீது போட்டுவிட்டு, திரும்பி "வாய்யா தமிழ், வா... வா... இப்படி வந்து உட்கார்..."

"கொமரு ஆளைக் கூட்டிட்டு வந்துட்டேம்பா! ஆமாம்... வாசல்ல அந்த அஜிதா வந்து உட்கார்ந்திருக்காளே, நீ வரச்சொன்னியா? அவகிட்ட என்ன சொல்லணும் சொல்லு" என்றார் கதிரேசன்.

ஆதித்தகுமாரன் நிஜப் பெயர் குமரேசன். அதைச் செல்லமாக 'கொமரு' என்று அழைக்கிற உரிமை சினிமா உலகில் ரொம்ப சிலருக்குத்தான் உண்டு. அதில் முதன்மையானவர் கதிரேசன்.

"அட, அவள யாரு வரச் சொன்னாங்க... அவளா வந்து நிக்கிறா. நீயே அவகிட்ட எதனாச்சும் சொல்லி அனுப்பிடு கதிரு. அப்புறம் மணிய உள்ர வரச் சொல்லு. தமிழுக்கு காபி கொண்டாரச் சொல்லு..." என்ற ஆதித்த குமார், "என்னப்பா தமிழ், காபியா இல்ல கூல்டிரிங்ஸ் எதனாச்சுமா... என்ன சாப்பிடறே சொல்லு..." என்று அவனிடமும் கேட்டான்.

பெரிய நடிகன் என்ற பந்தா இல்லாமல் அருகில் அமர்த்தி, வாஞ்சையுடன் தோள் தொட்டு அவன் பேசியது, விசாரித்தது தமிழ்க்கண்ணனுக்கு ஒரு நெகிழ்வை ஏற்படுத்தியது.

"எதுன்னாலும் பரவாயில்லேண்ணே. உங்களைப் பார்த்த சந்தோஷமே எனக்குப் பெரிசு..." என்றான்.

"அட, நீ என்னப்பா... என்னமோ ரசிகன் மாதிரி பேசிக்கிட்டு. நமக்குள்ள எதுக்கு இதெல்லாம், கதிரு... நீ மணிய கூப்பிட்டு, கூல்டிரிங்ஸ் கொண்டாரச் சொல்லு. நீ போய் அவள அனுப்பிட்டு சீக்கிரம் வாப்பா. நீயும் வந்து இங்க உக்காரு..."

கதிரேசன் வெளிக்கூடம் சென்றான்.

"அண்ணே, என்னண்ணே அப்படி சொல்லிட்டீங்க? நான் உங்க ரசிகன்தாண்ணே..." என்றான் தமிழ்க் கண்ணன்.

"அது சரிப்பா தமிழ். என்ன இருந்தாலும் நீ பெரிய டைரக்டர் இல்லியா? நீயும் சாதாரண ரசிகனும் ஒண்ணாயிட முடியுமா?"

"பெரிய டைரக்டர்லாம் இல்லண்ணே. உங்க முன்னால நான் சாதாரண ஆளு."

"இத பாரு தமிழ், அடக்கம்னு நினைச்சுகிட்டு இப்படில்லாம் பேசாதே. எனக்குப் பிடிக்காது. நம்மை நாமே ஏம்பா தாழ்த்திக்கணும்? நிச்சயமா நீ பெரிய ஆளு தான். அதுவும் முறையா திரைப்படக் கல்லூரியில் படிச்சுட்டு வந்திருக்கே. சாதிச்சும் காட்டிட்டே. அப்புறம் எதுக்குப்பா கூச்சம், தாழ்வு மனப்பான்மையெல்லாம்?"

கலகலப்பாகப் பேசி, அவன் தோளில் தட்டினான் ஆதித்தகுமார்.

மணி கொக்கோ கோலா பாட்டில் இரண்டை ஓப்பன் செய்து கொண்டு வந்து வைத்துவிட்டுப் போனான்.

ஆதித்தகுமாரே ஒரு பாட்டிலை எடுத்து அவனிடம் கொடுத்தான். "உன் படங்கள்லாம் பார்த்தேன். ரொம்ப நல்லா பண்ணிருக்கேப்பா..." என்றான்.

"ரொம்ப சந்தோஷம் அண்ணே. ஒண்ணு சுமாராப் போச்சு. இன்னொண்ணு அவுட். ரொம்ப மனசு வேதனையா போச்சு. பேசாம ஊரு பக்கம் போயிடலா மான்னு கூட நெனைச்சேன். இப்ப உங்க பாராட்டு கேக்கத் தெம்பா இருக்கு.

அண்ணன் படம் ஒண்ணு டைரக்ட் பண்ற சான்ஸ் கிடைச்சா நல்லா இருக்கும்னு ரொம்ப நாளாவே நினைச் சதுண்டு. பொய் சொல்றேன்னு நினைச்சுடாதீங் கண்ணே..." குரல் தழுதழுத்தது.

"செஞ்சுட்டாப் பேச்சு, அதுக்குத்தானேப்பா உன்னை அழைத்து வரச் சொன்னேன். உணர்ச்சி வசப் படாதே தமிழ். அமைதியா இரு..."

ஆதித்தகுமார் பஸ்ஸரை அழுத்த, வெளியே 'டுடுங்' என்று இனிய மணி ஒலிப்பது உள்ளே கேட்டது. பையன் ஓடிவந்தான்.

"எங்கடா கதிரு... உள்ர வரச் சொல்"

கதிரேசன் வந்தான். "என்ன கொமரு, அட நீ பேசுப்பா. நான் அப்புறம் வரேன். கொஞ்சம் முக்கிய மான வேலை இருக்கு. வந்து சொல்றேன்..." என்று கூறி விட்டு, வெளியேறினான்.

"இவன் ஒருத்தன்... ஆபீசுக்கு வேற எடம் பாருய் யான்னா எல்லாத்தியும் இங்கேயே வச்சுகிட்டு... பாரு தமிழ். எனக்கு இந்தக் கதிரேசன் இல்லேன்னா ஒண்ணும் சரியா பேசவராது. நீ எதனாச்சும் பேசிக்கிட்டிருப்பா..."

"அண்ணே, எந்த கம்பெனி படம்? பட்ஜெட் எவ்வளவுல இருக்கணும்னு நான் தெரிஞ்சுக்கலாமா?"

"பட்ஜெட் பத்தி நீ கவலையே படாதே. இது நம்ம சொந்தப் படம். கதிருதான் புரொட்யூசர்னு வச்சக் கோயேன். என் இமேஜ் உனக்குத் தெரியும். ஒரு நல்ல சப்ஜெக்ட் சொல்லு. உடனே ஆரம்பிச்சுடலாம். சீக்கிரம் முடிச்சு வெளியிடணும். நடுவால ரெண்டு மூணு கதை சரியில்லேப்பா. ஏதோ பணம் வருதேன்னு ஒப்புக்கிட்டது தப்பாப் போச்சு. உன்மேல எனக்கு நம்பிக்கை இருக்கு. நல்ல கதை ஒண்ணு ரெடி பண்ணிகிட்டு எப்ப வரே சொல்லு....?"

"உங்களுக்கு ஒரு கதை எப்பவோ ரெடியா இருக்கு என்னிடம். இப்பவே நாலு வரில சுருக்கமா சொல்றேன். பிடிச்சிருந்தா ஓ.கே. சொல்லுங்க. உடனே ட்ரீட்மெண்ட் எழுத ஆரம்பிச்சுடறேன்."

"சரி, கேட்டுரலாம். கொஞ்சம் இரு வரேன்..." என்று கூறி, பாத்ரூம் கதவைத் திறந்து நுழைந்து கொண்டான்.

அடுத்த பத்து நிமிஷம் அவன் வெளியே வரவில்லை.

# 2

**பா**த்ரூமிலிருந்து வந்தபிறகும் ஆதித்தகுமார் கதை கேட்க அவசரம் காட்டவில்லை.

பெரிய-அழகிய-ஃபோர்ம் மெத்தை விரிக்கப்பட்ட கட்டிலில் போய், "ஸ்... அப்பாடா" என்றபடி அமர்ந்தான். பிறகு, "வா தமிழ், இங்க வா. இப்படி உட்காரு..." என்று அழைத்து, அருகில் அமரச் சொன்னான்.

வசதியாக இரண்டு மூன்று தலையணைகளை அடுக்கி அதில் சாய்ந்து அமர்ந்தான். ரிமோட்கண்ட்ரோல் சாதனம் எடுத்து டி.வி. சானல்களை மாற்றிப் பார்த்தான். பிறகு ஒன்றிலும் மனம் செல்லாமல் அதை அணைத்தான்.

"எங்கப்பா இந்தக் கதிரேசனை இன்னும் காணோம்" என்று முனகியபடி அழைப்பு மணி விசையை அழுத்தினான். யாரும் உள்ளே வரவில்லை.

"சரி தமிழ், நீ சொல்லு. ஒண்ணும் அவசரமில்லை. நாம நாளைக்குக்கூட மீட் பண்ணலாம். நல்ல கதை வேணும்பா. அடிதடி, பதினெட்டு பட்டி பஞ்சாயத்து, அண்ணன்-தம்பி, மாமன்-மச்சான் சண்டை எல்லாம் அலுத்துப் போச்சு. வீச்சருவா தூக்கி அலையறது அலுத்துப் போச்சு. வித்தியாசமா ஒண்ணு பண்ணனும். யோசிச்சுச் சொல்லேன்..."

"ரொம்ப நாளா தமிழ்ல மறுஜென்மக் கதை சம்பந்தமா எதுவும் படம் வரலை. முன்னால ஸ்ரீதர் சார்

ஒரு படம் பண்ணினாரு. 'நெஞ்சம் மறப்பதில்லை'னு அற்புதமான படம். பாட்டெல்லாம் தேன் மாதிரி. இன்னிக்குக் கேட்டாலும் மனசை எங்கியோ கொண்டு போயிடும். 'மிலான்'னு இந்தில ஒரு படம் வந்து சக்கைப் போடு போட்டுது. அதைத் தமிழ்ல 'பிராப்தம்'னு எடுத் தாங்க. சிவாஜி சார், சாவித்திரி அம்மால்லாம் நடிச் சாங்க. நல்ல படம். அதுமாதிரி ஒரு கதை உங்களை வைத்துப் பண்ணனும்னு நினைக்கிறேன்."

"மறுஜென்மக் கதையா? அதுல்லாம் இப்ப எடுபடுமா? அதுவும் என் இமேஜுக்கு ஒத்து வருமா?"

"ஏண்ணே வராது? ரொம்ப நல்ல ஓர்க்-அவுட் ஆகும். வித்தியாசமான கதையா இருந்தா ஜனங்க விரும்புவாங்க. அதோட இது நல்ல காதல் சப்ஜெக்ட். இளசுகள்-காலேஜ் ஸ்டூடண்ட்ஸ் மத்தியில் அமோக வரவேற்பு கண்டிப்பா கிடைக்கும். கமல்கூட 'எனக்குள் ஒருவன்'னு இதுமாதிரி ஒரு படம் பண்ணினாருண்ணே!"

"அதில்லே தமிழ், சிலபேரு ஒரு மாதிரி கேலி பேசுவாங்க. கட்சி உணர்வுள்ள ஜனங்கள்லயும் நம்ம ரசிகருங்க இருக்காங்கல்லே...?"

அப்போது வாசல் கதவு திறந்து கதிரேசன் வந்தார்.

"என்னப்பா கொமரு, தம்பி தமிழ் என்ன சொல் லுது? எதுக்கு சும்மா பெல் அடிச்சே... நான்தான் பேசுங் கப்பான்னு சொன்னேன்ல. பைனான்ஸ் விஷயமா ஒருத் தன் வந்தான். உதவி கேக்கறான். பேசி, சமாளிச்சு அனுப் பிட்டு வர்றேன். என்ன, தம்பி சம்மதிக்குதுல்லே...?"

"சம்மதிக்காம என்ன... நம்ம ஆளு கதிரு. இப்பவே கதை சொல்றேன், கேளுங்கண்ணேனு ஆரம்பிச்சுடிச்சு.

அதான்பா உன்னைக் கூப்பிட்டேன். நீதானே புரொட்யூசர். நீ இல்லாம கதைய எப்படி ஓகே. செய்யறது? வா, உட்காரு..."

"அட நீ வேற தமாஷ் பண்ணிகிட்டு. ஹீரோ ஓ.கே பண்ணினா எல்லாமே ஓகேதான். ஏம்மா தமிழ். அங்க அத்தனை பிகு பண்ணிகிட்டே. இங்க வந்தவுடனே கதையே ரெடியாயிடுச்சா... நீ பெரிய ஆளுப்பா... சரி. இப்ப விஷயத்துக்கு வருவோம். நீ என்ன எதிர்பார்க்கறே, இப்ப உன் சம்பளம் எவ்வளவு... அதச் சொல்லு முதல்ல..."

கதிரேசன் நேரடியாக விஷயத்துக்கு வந்தான்.

தமிழ் பதில் சொல்வதற்குள் குறுக்கிட்ட ஆதித்த குமார், "என்னப்பா நீ, மெக்கானிக்கலாவே இருக்கே. பிஸினஸ் லைக்கா பேசினா எப்படி? முதல்ல கதையைக் கேளு. மறு ஜென்மக் கதை ஒண்ணு சொல்றேங்குது தமிழ்... ஒத்து வருமா-அதுவும் நமக்கு?" என்றான்.

"ரீஇன்கார்னேஷன் சப்ஜெக்ட். ரொம்ப நல்லா ஓர்க்கவுட் ஆகுமே கொமரு... ஏன், உனக்குப் பிடிக்கலியா?"

"பிடிக்கலேன்னு இல்லே கதிரேசா. இமேஜ் கெடக்கூடாதுல்லே. நீதான் இதுபத்தி சரியான முடிவு எடுக்கணும். அப்புறம் என்னைக் குறை சொல்லக் கூடாது. நம்ம ரசிகர்கள்ல சில பார்ட்டி ஆளுகளும் உண்டுல்லே. யோசிச்சுச் சொல்லு."

"இதுல யோசிக்க என்ன இருக்கு? நீ என்ன நாத்திகனா... கோயிலுக்குப் போறே. சாமி கும்பிடறே. அப்புறம் என்ன... கட்சிக்காரனுக ஆயிரம் பேசுவானு..." என்ற கதி ரேசன், தமிழ்க்கண்ணன் முகம் பார்த்து-

"இதப் பாரு தம்பி, நீ எங்களைவிட ஒரு பத்து வயசாவது சின்னவனா இருப்பே. அதனால உன்னை நிசமாகவே என் தம்பி மாதிரி நினைக்கிறேன். என் பேரு ஜான் கதிரேசன். அப்பா காலத்துல மதம் மாறின குடும்பம் எங்களோடது. இருந்தாலும் நானும் குமரேசனும் சின்னவயசுலேருந்தே ஜாதி-மத வித்தியாசமில்லாமல் சகோதரர்களா பழகுவோம். எங்க நட்பு, பேர் ஒற்றுமை எல்லாத்தியும் பார்த்துட்டு பலரும் 'இவங்க பூர்வ ஜென்மத்துல இரட்டையர்களா ஒட்டிப் பிறந்தவங்களா இருந்திருப்பாங்க'னு சொல்லுவாங்க. உண்டா இல்லியானு இவனையே கேளு..." என்றான்.

"ஆமாம் கதிரேசா... அது நிஜம்தான். இல்லேனு இப்ப யாரு சொன்னாங்க..." என்றான் ஆதித்தகுமார்.

"எது நிஜம்? நீயும் நானும் போன ஜென்மத்துல இரட்டைப் பிறவிகளா பிறந்திருந்ததா...?"

"அட... அது யாருக்குப்பா தெரியும்! நம்ம பத்தி ஜனங்க அப்படிச்சொன்னது நிஜம்னு சொல்றேன். மத்தவங்க என்ன, நம்ம ரெண்டு பேர் வீட்லயுமேகூட அப்படித்தான் சொல்வாங்க!"

"வீட்ல மட்டும் இல்ல கொமரு. ஹைஸ்கூல்லகூட தோ ரெட்டையர்கள் வந்துட்டாங்க'னுதான் பசங்க சொல்வாங்க. நாம ஒண்ணா பொறக்கலை-ஒரேமாதிரி உருவம்கூட கிடையாது. நீ ஒல்லி. கறுப்பு-நான் குண்டு, சிவப்பு. ஆனா இத்தனை வேறுபாடுகளையும் மீறி நம்ம இரட்டையர்கள்னு எல்லாரும் பேசினாங்க. எது இருந்துச்சோ இல்லியோ நாம நட்புல-மத ஒருமைப்பாட்டுல ஸ்டெடியா இருக்கோம். என்னோட நீ வேளாங்கண்ணி

வந்தே. உன்னோட நான் திருப்பதி வந்தேன். இதை எல்லாரும் பூர்வ ஜென்ம பந்தம்னு சொல்றாங்க. அப்படின்னா இதுக்கு என்ன அர்த்தம் சொல்லு பார்ப் போம்..."

"நீயே சொல்லு கதிரேசா..."

"ஜனங்க பூர்வ ஜென்மம்னு ஒண்ணு உண்டுனு நம்பறாங்க. சரியாவோ தப்பாவோ நாமகூட அதைப் பத்திப் பேசறோம். அப்புறம் என்ன தயக்கம்? அது மாதிரி ஒரு கதைல நடிச்சுட்டுப் போயேன். மக்கள் விரும்பறாங்கன்னு சொல்லித்தானேப்பா இந்த சினிமா பார்முலா எல்லாமே இருக்குது?"

"ஓ... நீ அப்படி வரியா... சரிப்பா, நான் ஒப்புக் கறேன். தமிழ், நீ கதையைச் சொல்லு."

தமிழ்க்கண்ணன் அந்தக் கதையைச் சொன்னான்...

அப்போதுதான் அந்த நதிக்கரை மாந்தோப்பில் ஒரு பல்லக்கு வந்து இறங்கியது. பிரம்மதுர்க்கம் ஜமீனி லிருந்து வந்திருந்த இளவரசி, தம் செம்பஞ்சுக் குழம்பு அலங்காரமுள்ள அழகிய பட்டுப்பாதங்களை தரையில் ஊன்றி, முகில்களின் மறைவிலிருந்து விடுப்பட்ட முழு நிலவு போல் வெளிப்பட்டாள். அவளைத் தொடர்ந்து தோழிப்பெண் ஒருத்தியும் இறங்கினாள்.

இருவரும் மரக்கிளையில் ஊஞ்சல் கட்டி, சிறிது நேரம் விளையாடிக் கொண்டிருந்தனர். பிறகு தோப் பருகே ஓடும் நதிக்கரையில் உடைகளை அவிழ்த்து வைத்துவிட்டு, நீந்தித் துழாவினர்.

எங்கிருந்தோ புல்லாங்குழல் இசை, புதுவெள்ளம் போல் பெருகி ஒலித்து, நதி நீரின் சிற்றலைகளில் மிதந்து வந்து அவர்களின் செவிகளில் விழுந்தது.

இளவரசிக்கு உடல் சிலிர்த்தது. அந்த இனிய குழல் இசை அவள் இதயம் தொட்டது.

தோழிக்கு ஏனோ ஒரு பதற்றம். "வாருங்களம்மா, போவோம்" என்றாள்.

"அவசரம் ஏனடி... இந்தப் புல்லாங்குழல் இசை என்னைப் புல்லரிக்க வைக்கிறது. இரு... இன்னும் சிறிது நேரம் நீராடலாம்... ஆமாம், இந்த இசை எங்கிருந்தோ ஒலிக்கிறது... யாரும் ஆள் கண்ணில்பட வில்லையே..."

"அதுதானம்மா ஆபத்து. எவனாவது மறைந்து நின்று நாம் குளிப்பதைப் பார்க்கிறானோ என்னவோ... வாருங்கள், நாம் இனி இங்கிருப்பது நல்லதல்ல..."

"போடி பைத்தியம். இது என்ன ஆளில்லாத தீவா? அதோ மலைமேல் கோயில் இருக்கு. நாமும் அங்கு போகத்தானே வந்துள்ளோம். ஏன் வீண் அச்சம் உனக்கு? ஆமாம்; இதே புல்லாங்குழல் இசை நாம் போனமுறை இங்கு வந்தபோதும் ஒலித்தது இல்லையா?"

"ஆமாம் அம்மா."

"என்னடி இது அம்மா...? சும்மா... புவனான்னு கூப்பிடு போதும். நீ என்ன வேலைக்காரியா... தோழி தானே? அதுவும் இப்ப நாம அரண்மனையிலயா இருக் கோம். மத்தவங்களைப் பத்தி நினைக்க. தனியா இருக்கும் போது மனசுக்கு நெருக்கமா பழக, மரியாதை மயக்கங்கள்

ஒரு தடையா இருக்கறது எனக்குப் பிடிக்காதுன்னு உனக்குத் தெரியும்ல..."

தேன்மொழி சிரித்தாள்.

"சரி புவனா. ஆனா நீ எங்க தனியா இருக்கே? இங்கே வந்ததும்தான் இந்த இசை உன் இதயத்தை ஆக்கிரமிச்சுடுச்சே... அந்த இசைக் கலைஞன்தான் உன் மனசுக்கு நெருக்கமா இருக்கிறான். அவன் யாருன்னே தெரியலே. யாராவது மாயாவியா இருப்பானோ என்னவோ? ஆள் கண்ணுல படறதில்லே, ஆனா இசை மட்டும் இழைந்து இழைந்து வந்து தவழ்கிறது. எனக்கு என்னவோ அச்சமாகவே இருக்கிறது. காற்று-கறுப்பு சேட்டைதான் இது. நாம் உடனே புறப்படுவது நல்லது..." என்றாள்.

"போடி இவளே... காற்றாவது கறுப்பாவது. காதில் வந்து பாயும் இன்பத் தேன்வெள்ளம்டி இந்த இசை. ஊன் உருக, உள்ளம் உருக, உயிர் உருக நிற்கிறேன் நான். நீயானால் அந்த அரண்மனைச் சிறைக்குள் போய் அடைய என்னை அவசரப்படுத்துகிறாய்."

"நாகதோஷம் நீங்க இந்தப் பூங்குறிச்சி மலை மீதுள்ள புவனேஸ்வரி அம்மன் கோயிலுக்கு வந்து நாற்பத்தெட்டு வெள்ளிக் கிழமைகளில் தீபமேற்றி வழி பட வேண்டுமென்று ஆச்சார்ய சிவஜோதி சுவாமிகள் கூறவில்லையெனில், நாம் எதற்கு இங்கு அடிக்கடி வரப் போகிறோம்? நீ அர்த்தமில்லாமல் அஞ்சி நடுங்குவாய். பேசாமல் வா..." என்று கூறி, நதியிலிருந்து கரையேறி னாள் புவனா.

இருவரும் மாந்தோப்பிற்கு சென்று ஈர ஆடை களைந்து, வேறு உடை மாற்றிக் கொண்டு, மலைக் கோயில் நோக்கி நடக்கத் துவங்கினர். அவர்களுடைய மென்மையான பாதங்கள் பட்டு, சருகுகள் சப்தமெழுப் பின. அப்போது சற்றுத் தொலைவில் தென்பட்ட ஓர் ஆடவன், "அப்படியே நில்லுங்கள்..." என்று உரத்த குரலில்–எச்சரிப்பது போல் கூறினான்.

அவர்கள் பயந்து அப்படியே நின்றனர்.

கண்ணிமைக்கும் நேரத்தில், தாழ்வாக இருந்த மாங் கிளை ஒன்றிலிருந்து அவர்கள் முன் பொத்தென்று ஏதோ விழுந்தது. சட்டென்று தாவிப் பாய்ந்த அவன், அவர் களை இடித்துத் தள்ளி, மின்னல் வேகத்தில் கீழே குனிந்து எதையோ தூக்கிக் கொண்டு கரகரவென்று சுழன்றான்.

அந்த இளைஞன் கையில் பிடித்திருந்தது நாக சர்ப்பம். மரக்களை மீதிருந்து அவர்கள் தலைக்குமேல் சற்றுமுன் நெளிந்து தொங்கியது.

அவனுடைய எச்சரிக்கைக் குரல் கேட்டு அவர்கள் தயங்கி நின்றதும் அது கீழே விழ, அது படமெடுத்துச் சீறுமுன் அவன் பாய்ந்து தாக்கி-மின்னல் வேகமாகச் சுழல்கிறான். இது பாம்பின் வேகத்தை-செயல்பாட்டைத் திணறச் செய்கிற ஓர் உத்தி.

அதோ அவன் அதை வீசி எறிகிறான். தொலைவில் போய் விழுந்து சருகுகளில் ஓசையெழ அது வேறு திசை யில் விரைகிறது.

சக்கரம்போல் சுழன்ற அவன் தள்ளாடி நடந்து, ஒரு மாமரத்தினடியில் அமர்கிறான். மயக்கமும் கிறுகிறுப்புமாக இருந்தது அவனுக்கு.

"எங்களுக்கு வந்த ஆபத்திலிருந்து எங்களைத் தக்க சமயத்தில் வந்து காப்பாற்றிவிட்டீர்கள். உங்களுக்கு எப்படி நன்றி சொல்வதென்றே எங்களுக்குப் புரிய வில்லை..." என்று கூறி, அவனருகே வந்து நின்றாள் புவனா.

அவன், 'பரவாயில்லை. நீங்கள் உங்கள் வழியே செல்லுங்கள்' என்பது போல் பெருமூச்சு பரிய சைகை செய்தான்.

அப்போதுதான் அவன் இடுப்பில் ஒரு புல்லாங் குழல் செருகப்பட்டிருப்பதை இளவரசி கவனித்தாள்.

# 3

"ஆரம்பம் ரொம்ப நல்லாருக்கு தமிழ். ஐ திங்க் அந்தப் புல்லாங்குழல் ஊதறவன்தானே ஹீரோ..." என்று கேட்டான் கதிரேசன்.

"ஆமாம் சார்..."

"கொமரு, உனக்கு நல்ல கேரக்டர்தான். ஜமாய்ச் சுடலாம். வீச்சருவா தூக்கிக்கிட்டு அலைய வேண்டாம். சின்னதா ஒரு புல்லாங்குழல் இடுப்பில் சொருகிக்கிட்டிருந்தாலே போதும். எளிய-கிராமத்து இசைக் கலைஞனா வரப்போறே... டிஃபரண்டான கேரக்டர். அப்புறம் இந்த சாதாரண. கிராமத்து ஆளு அரண்மனைலேருந்து வர்ற இளவரசியைக் காதலிக்கிற கதைன்னாலே சூப்பரா ஓர்க்கவுட் ஆவும். ம்... நீ மேல கதைய சொல்லுப்பா தமிழ்..." என்றான் கதிரேசன்.

ஆதித்தகுமார் வாய் திறக்கவில்லை. ஆனால், கதையைக் கவனமாகவே கேட்டுக் கொண்டிருந்தான்.

அன்று மலைக்கோயிலில் பூஜை முடித்து அவர்கள் பல்லக்கில் ஜமீன் அரண்மனைக்குத் திரும்பிக் கொண்டிருந்தனர். பிரம்மதுர்க்கம் ஜமீன் மூன்று மைல் தொலைவில்தான் இருந்தது.

வழிநெடுக இளவரசி அந்த இளைஞனைப்பற்றியே தேன்மொழியிடம் பேசிக்கொண்டு வந்தாள்.

"ஏனடி தேன்மொழி, அவர்தான் அந்த அபூர்வ இசைக் கலைஞராக இருக்குமோ?"

"இருக்காது புவனா. அவனைப் பார்த்தால் மாடு மேய்ப்பவன்போல இருக்கிறது. பரட்டைத் தலை, அழுக்கு உடை. அவனாவது அப்படி அற்புத ஜாலம் போன்ற இசையை இசைப்பதாவது? அவன் ஏதோ நம்மை ஓர் ஆபத்திலிருந்து காத்தான், அவ்வளவுதான். அதற்கு நன்றி தெரிவித்து நீதான் ஒரு மணி மாலையைக் கழற்றி அவனுக்குப் பரிசளித்தாய். அதை அவன் வாங்கினானா... பார்த்தாயல்லவா அவன் திமிரை. எழுந்து போய்விட்டான். அவனைப்போய் இன்னமும் நீ நினைத்துக் கொண்டிருப்பது தேவையா?" என்றாள் தேன்மொழி.

புவனாவால் அவனையும் மறக்க முடியவில்லை-அந்த மாந்தோப்புச் சம்பவத்தையும் மறக்க முடிய வில்லை. தன் உயிரையும் பொருட்படுத்தாமலல்லவா அவன் சீறும் நாகத்தைத் தூக்கிச் சுழற்றி வீசி எறிந்தான்! அப்புறம் அந்தப் புல்லாங்குழல்... அந்தப் புதிருக்கு அவனிடமேதான் விடை கேட்க வேண்டும்!

புவனா அடுத்த வெள்ளிக்கிழமை பூங்குறிச்சி மலைக்கோயிலில் அம்பாளை வழிபட்டுக் கொண்டிருந் தாள். கண்களை மூடி நின்று அவள் அம்மன் அழகை உள் வாங்கிக் கொண்டிருக்கையில் அந்தப் புல்லாங்குழல் எங்கிருந்தோ ஒலிக்கத் துவங்கி, காற்றில் மிதந்து வந்து அவள் காதுகளில் பாய்ந்தது. அவள் மேனி சிலிர்த்தது.

அவர்கள் கோயில் பிராகாரம் சுற்ற ஆரம்பித்த போது அவள் தோழியிடம், "அடி அந்த இசை கேட்கிறது பார்த்தாயா? நிச்சயம் இப்போது அங்கிருப்பான். வாயேன், போய்ப் பார்த்து விடுவோம். இன்று உண்மை தெரிந்துவிடும்..." என்றாள்.

தேன்மொழி அதுவரை அந்த இசை பற்றிச் சிந்திக்க வில்லை. இப்போது கூர்ந்து கவனிக்கையில் அது அவள் செவிகளுக்கும் நன்றாகக் கேட்டது.

"என்ன புவனா இது... இதெல்லாம் நன்றாகவா இருக்கிறது? நாம் அவனைப்பற்றி ஆராய்ச்சி செய்யவா இங்கு வருகிறோம்? வந்த வேலை முடிந்து ஊர் திரும்பு கிற நேரத்தில் நாம் எதற்கு அங்கு போக வேண்டும்? அதெல்லாம் ஒன்றும் வேண்டாம்" என்றாள் அவள்.

பேசிக்கொண்டே அவர்கள் பிராகார வலம் வந்தனர். அங்கே ஒரு மண்டபம். அதில் தூண் ஒன்றில் சாய்ந்த நிலையில் அந்தப் பரட்டைத்தலை இளைஞன். தூங்குவதுபோல் அவன் கண்கள் மூடிக் கிடந்தன. ஆனால் கைகள் அலட்சியமாகப் புல்லாங்குழலை வாயில் பொருத்திக் கொண்டிருந்தன. அவன் உதடுகள் லேசாக அசைவதுபோல் தோன்றியது. இசை ஒலிப்ப தாகவே தெரியவில்லை.

அவனை அங்கே கண்ட மறுகணம் இளவரசியின் கால்கள் தயங்கின. அவளால் மேற்கொண்டு ஓரடிகூட எடுத்து வைக்க முடியவில்லை. சிலைபோல நின்று விட்டாள்.

தேன்மொழியும் இதைக் கவனித்தாள். அவளுக்குச் சினம் பற்றிக் கொண்டு வந்தது.

"இந்தப் பயல் இங்கும் வந்துவிட்டானா...?" என்று அவள் முனகினாள்.

இளவரசியின் செவிகள் வேறு எதையோ கூர்ந்து கேட்க முயன்றன. ஆம்: அந்தக் குழலிசை வேறு எங்கோ மலையடி வாரத்திலிருந்து-நதிக் கரையிலிருந்து சன்ன

மாக, அலையலையாக எழுந்து மிதந்து வந்து கொண்டே யிருந்தது.

'என்ன இது... அப்படியானால் அந்த இசை இவனுடைய புல்லாங்குழலிலிருந்து வெளிப்படவில்லையா? அதை இசைப்பவன் வேறு ஒருவனா? இவன் புல்லாங் குழல் வைத்துக் கொண்டு என்னதான் செய்கிறான்?''

இளவரசி சட்டென்று தாவினாள் அந்த மண்டபம் நோக்கி. அவனுடைய தோள் தொட்டு உலுக்கினாள்.

அதேசமயம், "ஏய்... எழுந்திரு. இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய் நீ?" என்று அதட்டினாள் தோழி.

சட்டென்று கண் திறந்து, நிமிர்ந்து அமர்ந்தான் அவன். அந்தக் கணம் காற்றினிலே மிதந்து வந்து கொண்டிருந்த அந்த அமுத இசை நின்று போனது.

எங்கிருந்தும் அந்தக் குழலோசை ஒலிக்கவில்லை.

திடீரென்று எங்கும் ஒரு சூன்யம் உருவானது போலிருந்தது அவளுக்கு. சர்வமும் நிசப்தமாகிவிட்டதே!

அந்தரத்திலிருந்து அதல பாதாளத்தில் தலை குப்புற வீழ்வது போல் திடுக்கிட்ட அவன், அவர்களை ஏறிட்டு நோக்கினான். மறுகணம் அவன் முகம் இறுகியது.

"ஓ... நீங்களா! எதற்காக என்னை எழுப்பினீர்கள்" என்றான்.

அறிவற்றவன்... அழகுத் தேவதையாக வந்து நிற்கும் இளம் பெண்ணைப் பார்த்துக் கேட்கிற கேள்வியா இது?

அவன் கண்கள் ஈரம் கட்டியிருந்தன. கன்னங் களும் கசிந்து நனைந்திருந்தன.

ஏன்... இசையில் உருகிக் கரைந்திருப்பானோ!

அவளுக்கு எல்லாமே புரிந்துவிட்டது. அவனே அந்த மாய இசை ஜாலம் செய்தவன்... 'கண்டு கொண்டேன் உன்னை' என உள்ளம் கூவ-

"உங்கள் அற்புத இசை என் ஊனையும் உள்ளத்தையும் உருக்குகிறது. எத்தனை நாளாக உங்களைத் தேடினேன் தெரியுமா? இன்றுதான் அகப்பட்டீர்கள். இது எப்படி உங்களுக்குச் சாத்தியமாயிற்று? அருகில் தான் ஒலிக்கிறது என்று நினைக்கையில் எங்கோ வெகு தொலைவுக்கு அப்பாலிருந்து கேட்கத் துவங்குகிறது. தூரங்களை-திக்குகளை யூகிக்க முடியாத அளவுக்கு உங்கள் குரல் மாயாஜாலம் நிகழ்த்துகிறது. என் தோழி கூட இது ஏதோ யட்சிணி வேலையாக இருக்கும் என்றாள்..."

அளப்பரிய வியப்பு அவள் குரலில் தொனித்தது.

அவன், "உங்கள் பாராட்டுக்கு நன்றி. ஆனால், அதை வைத்துக்கொள்ள என் இதயத்தில் இடமில்லை. நீங்கள் உங்கள் வழியே செல்லுங்கள்..." என்றான். பிறகு வசதியாகத் தூணில் சாய்ந்து கொண்டான்.

"திமிர் பிடித்தவன். என்ன அலட்சியமாகப் பேசுகிறான்..." என்றாள் தேன்மொழி.

"சீ! மூடமே! பேசாமலிரு..." தோழியைக் கடிந்து கொண்டாள் இளவரசி.

அவன் முகம் திருப்பி அவர்கள் இருவரையும் பார்த்தான். பிறகு, "மன்னிக்க வேண்டும். நான் யாரையும் அலட்சியப்படுத்தவில்லை. எல்லோரும் அவரவர் பாதையில் ஒதுங்கிப் போவது எவ்வளவு நல்லது! இப்படி

வந்து பாராட்டும் வசவும் சரிவிகிதமாக என் முகத்தில் பூசுவது எதற்காக? நான் உங்களுக்கு என்ன கெடுதல் செய்தேன்?'' என்றான்.

"இவள் பேச்சை நீங்கள் பெரிதாக எடுத்துக் கொள் வேண்டாம். ஏன் இப்படி மனிதர்களிடமிருந்து ஒதுங்கிப் போகும் மனோபாவத்தில் இருக்கிறீர்கள்... உங்கள் பேச்சில்... குழல் இசையில் எல்லாம் ஒரு சோகம் புலப் படுகிறது. என்ன உங்கள் சோகம்?'' என்றாள் இளவரசி-அன்பிழையும் குரலில்.

"சோகம்தான் என் வாழ்க்கை. என் வாழ்க்கைதான் இசை. இசைதான் என் உயிர். என் உயிர்தான் அந்த விசித்திர நாத அலைகள். அந்த நாத அலைகள் எதைத் தேடியோ கனவுகளில் சஞ்சரிக்கும். மலைமுகடுகளில்-நதியலைகளில் உலவும்; காற்று வெளியிடையில் பரவித் திரியும். ஆனால், இதற்கெல்லாம் எனக்குக் காரணங்கள் கூறத் தெரியாது. நான் பாட்டுக்கு என் சோகங்களையே சுகங்களாய் எண்ணி ஒதுங்கிகிடக்கிறேன். என்னை வந்து வம்புக்கு இழுக்காமல் விலகிச் செல்லுங்கள். அது போதும் எனக்கு...'' என்றான் அவன்.

அவ்வளவு பேசியதே அதிகம் என்பதுபோல், தூணில் நன்கு சாய்ந்து, விழிகளை மூடிக் கொண்டான். உதடுகளில் குழலையும் பொருத்திக் கொண்டான்.

அதன்பிறகு அவனைத் தொல்லை செய்யாமல் அவர்கள் விலகி நடந்தனர்.

"இசைச்சித்தனோ... இவன் ஓர் அபூர்வ நாத உபாச கனோ... இசைத் தேவதையை எண்ணித் தவம் இயற்று கிறானோ... இருக்காது. இசைத் தேவதைகள்தான் இவனு

*டைய குழல் வழியே ஜனித்துப் பிரவகித்துப் பெருவெளியில் சஞ்சரிக்கத் தவிக்கும்-தவமியற்றும்...'' என்றெண்ணினாள் இளவரசி.*

*அன்று பிரம்மதுர்க்கம் ஜமீன் மாளிகை செல்லும் வரை அந்த நாத அலைகள் தன் பல்லக்கைத் தொடர்ந்து வருவதாகவே பிரமை தட்டியது அவளுக்கு.*

*அதன்பிறகு எல்லாக் கிழமைகளும் வெள்ளிக் கிழமைகளாகவே இருந்துவிட்டால் என்ன என்ற ஏக்கம் அவளைப் பற்றிக் கொண்டது. வெள்ளிக்கிழமைகள் மட்டுமே அவளுக்கு விடிந்தன. நோன்புகளும் விரதங்களும், அந்தப் பூங்குறிச்சி மலைக்கோயில் மண்டபத்தில் எந்த விக்கிரகம் ராகதேவதைகளின் மொத்தவடிவமாக வீற்றிருக்கிறதோ அந்த விக்கிரகத்திற்காகவே அமைந்தன.*

*ஆனால், அந்த உருவம்தான் கல்லைவிட கடுமையாக இறுகிக் கிடக்கிறதே... காதல் ராகத்திற்கும் அதற்கும் சம்பந்தமில்லை போலிருக்கிறதே!*

*கல்மரம் பூத்ததுபோல் கலைநயம் சிறக்கும் அந்த மண்டபம் பேசினாலும் பேசும், அவன்... கல்லுளி மங்கன்!*

*''அவனைப் பேச வைப்பேன். அந்த வித்தை எனக்குத் தெரியும்'' என அவள் கறுவிக் கொண்டாள்.*

# 4

அந்த வெள்ளிக்கிழமை இளவரசி வழக்கத்துக்கு மீறிய குதூகலத்துடன் காணப்பட்டாள்.

நதியில் நீராடி முடித்ததும் விசேஷ ஆடை, அணி கலன்களை அணிந்து கொண்டாள்.

தோழிக்கு வியப்பாக இருந்தது. "இப்போது இந்த அலங்காரம் எதற்கு புவனா?" என்று அவள் கேட்டாள்.

"பேசாமல் வாடி..." என்ற இளவரசி, மலைக் கோயில் படிகளில் மான்போல் துள்ளி ஓடினாள்.

அவளின் அவஸ்தை-அவசரம்-ஆர்வம் எல்லாமே புரிந்தது தோழிக்கு. 'இதெல்லாம் எதில்போய் முடியுமோ' என்ற அச்சமும் அவள் மனத்தில் எழுந்தது. ஆனாலும் என்ன செய்வது என்றும் புரியவில்லை. இளவரசியின் பின்னால் படிகளில் அவளும் ஏறினாள்.

சுவாமி தரிசனத்தை அவசரமாக முடித்துக் கொண் டாள் இளவரசி. அவள் எங்கே சாமி தரிசனம் செய்வது? ஆசாமி தரிசனம்தானே அவள் மனத்தை ஆக்கிரமித் திருக்கிறது!

அவர்கள் இருவரும் சுற்றுப் பிராகார வலம் துவக்கினர்.

வழக்கம்போலவே அவன் மண்டபத் தூணில் சாய்ந்திருந்தான். அவன் குரல் சன்னமாக ஒலித்துக் கொண்டிருந்தது. அவனருகே சென்ற இளவரசி,

அவனிடம் எதுவும் பேச்சுக் கொடுக்கவில்லை. திடீரென்று அந்த மண்டபப் படிகளில் ஏறி, நடனமாடத் துவங்கிவிட்டாள்.

கலீர் கலீர் என காற்சலங்கைகள் குலுங்கித் தாளமிட, கைவளை குலுங்க, அவள் அசைந்து அசைந்து ஆடினாள்.

கலகல வளையொலியும் - கலீர் கலீர் சலங்கை ஒலியும் கேட்டு அவன் மெல்ல விழிகளைத் திறந்தான். எங்கோ சூன்யத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்த அவனுக்குப் பூமியில் ஒரு சொர்க்கம் புலப்பட்டது.

'பூந்தென்றலில் ஒரு பட்டாம்பூச்சி, தன் வண்ணச் சிறகு விரித்து ஆடுகின்றதோ! செம்பஞ்சுக் குழம்புக் கோலங்கள் ஒளிரும் அந்தப் பட்டு வண்ணப் பாதங்கள் பூமிக்கு ஒத்தடம் கொடுக்கின்றனவோ! அழுந்தப் புதையாமல் அவை அந்தரத்தில் மிதக்கின்றனவோ!' என்றெல்லாம் அவன் மனத்தில் எண்ண அலைகள்.

"ஓ... நீங்கள் வெறும் இளவரசி மட்டுமில்லை; ஓர் அற்புதமான நடன கலாராணியும் கூட" என்றான்.

"சரி, உங்கள் கைகள் குழலை எங்கோ அதல பாதாளங்களில் ஆழ்கடலின் அடிப்பரப்பில் சஞ்சரிக்கச் செய்தது போதும். பூமிக்கு வரட்டும் உங்கள் நாத வெள்ளம். இந்த மண்டபத்தில் ஒலித்து, முழக்கமிடட்டும். அந்த நாதவெள்ளத்திலே நீந்தி என் கால்கள் நடனமிடும். உங்கள் கரங்கள் ஓய்கிறதா, என் கால்கள் ஓய்கிறதா பார்க்கலாம்..."

இளவரசி ஏன் இப்படிப் பேசினாள்? அது அவளுக்கே புரியவில்லை.

அவனோடு ஒரு வாதம்-வம்பு... போட்டி வர வேண்டும். அவள் எண்ணியதன் உட்காரணம், அவன் அப்படியாவது தன் மீது கவனம் திருப்புவான் என்பதே!

"ஓ! கலைக்கர்வம்... என் கைகளுக்கு உங்கள் கால்கள் சமம் என்கிறீர்கள். இளவரசியல்லவா... இருக்காதா பின்னே மமதை!" என்றான் அவன்.

"நான் அந்தப் பொருளில் சொல்லவில்லை."

"அவசியமற்ற பேச்சு எனக்குப் பிடிக்காது. இனி என் குழல் பேசும். உங்கள் கால்கள் தாராளமாக அதனோடு பேசட்டும்..."

அவன் நிமிர்ந்து அமர்ந்தான். அவனுடைய குழல் இசை மழை பொழியத் துவங்கியது. அவள் பதம் பிடித்து ஆடத்துவங்கினாள். அங்கே கலை வெள்ளம் பெருக்கெடுத்தது.

இளவரசி கோயில் மண்டபத்தில் நடனமாடுகிறாள் என்றதும் சந்நிதி காலியாயிற்று. பக்தர்கள் மண்டபம் முன் திரண்டனர்.

கலை மயக்கத்தில் மூழ்கிப்போன இளவரசி, எப்போது உணர்வு வந்து பார்த்தாளோ அப்போது கும்பல் கண்டு திடுக்கிட்டாள். அவள் இதுபற்றி யோசிக்கவில்லை-எதிர்பார்க்கவில்லை.

நாணமும் கூச்சமும் அவள் கால்களைக் கட்டிப் போட்டன. அவள், "வாடி போகலாம்" என தோழியை அழைத்துக் கொண்டு, மண்டபத்திலிருந்து குதித்து, மலைப்படிகளில் ஓடத்துவங்கினாள்.

திடீரென்று சலங்கை ஒலி நிற்கவே அவனும் உணர்வு வந்து, கூட்டத்தைப் பார்த்தான். நிலைமை புரிந்தது. இளவரசி போய்விட்டாள். அவன் எதையும் இலட்சியம் செய்யாமல் எழுந்து நதிக்கரை மாந் தோப்புக்குச் சென்றுவிட்டான்.

"கூத்தாடிப் பயலுக்கு அடித்த யோகம் பார்த்தி யாடா... இவன் புல்லாங்குழல் ஊதறானாம். அதுக்கு இளவரசி நாட்டியம் ஆடறாங்களாம். காலம் கெட்டுப் போச்சுப்பா...!"

கும்பல் குதர்க்கம் பேசிக் கலைந்தது...

பிரம்மதுர்க்கம் ஜமீன் அரண்மனைக்கும் இந்தத் குதர்க்கப் பேச்சுகள் அனைத்தும் அணிவகுப்பு நடத்தின.

இளவரசியின் தந்தை காளிங்கராய உடையார் கொந்தளித்துப் போனார்.

"தேன்மொழி அப்போதே எல்லாம் சொன்னாள். ஆனால், அது இவ்வளவு தூரம் ஆகிவிடும் என்று நான் நினைக்கவில்லை. இப்போதும் ஒன்றும் மிஞ்சிப் போய் விடவில்லை. இளவரசியை இனி பூங்குறிச்சிக்கே அனுப்ப வேண்டாம். அவர் இங்கேயே நாகதோஷ பரிகார பூஜை செய்யட்டும். அரண்மனைக்குள்ளேதான் ஓர் அம்மன் கோயில் இருக்கிறதே..." என்றார் அரண் மனைக் காரியஸ்தர் கனகவேல் முதலியார்.

"நீங்க சரியாகத்தான் சொல்றீங்க முதலியாரே... நம்ம பொண்ணு அங்க போறதும் போகாததும் அப்புறம்

இருக்கட்டும். ஆனா, அந்த தொம்பக் கூத்தாடிப்பய ஏன் அங்கேயே சுற்றிக் கொண்டிருக்கிறான்?'' என்றார் காளிங்கராய உடையார்.

"அதை நான் பார்த்துக்கறேன்..."

-கனகவேல் முதலியார் ஒரு தீர்மானத்துக்கு வந்த வராகவே இதைக் கூறினார்!

# 5

அடுத்த வெள்ளிக்கிழமை-

அரண்மனையிலேயே பூஜை ஏற்பாடுகள் நடந்தன. இளவரசி தோழியை அழைத்து, "என்னடி தேன்மொழி இங்கு ஏதோ பூஜை ஏற்பாடுகள் நடக்கின்றன. பல்லக்கு தூக்கிகளை இன்னும் காணோம்... நாம் எப்போது பூங்குறிச்சி புறப்படுவது...?" என்றாள்.

"இல்லை புவனா. நாம் இனி அங்கே போக முடியாது. பூஜையெல்லாம் இங்கேயேதான். இது உன் தந்தையின் கட்டளை."

இளவரசி மனமுடைந்து போனாள். தந்தையிடம் போய் எதுவும் கேட்க அவளுக்குத் துணிவில்லை. பூங் குறிச்சியிலிருந்து வந்த புகார்கள் கேட்டு அவர் கடுங் கோபத்திலிருப்பதை அவள் அறிவாள். அவளை அழைத்து ஒரு வார்த்தைகூட அவர் எதுவும் கேட்க வில்லை. அவளிடம் பேசுவதையே நிறுத்தி விட்டிருந்தார். என்ன செய்வது?

அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. நிச்சயம் இன்று வெளியே நகரமுடியாது என்பது புரியவே, பேசாமல் கடனேயென்று பூஜை செய்தாள். கவலையுற்று மஞ்சத் திலே சரிந்து கிடந்தாள். தோழி எவ்வளவு சமாதானம் சொல்லியும் அவள் சாப்பிட மறுத்து விட்டாள்.

திடீரென்று எங்கிருந்தோ அந்தக் குழலோசை சன்னமாக அலைபரப்பி அவள் செவிகளைத் தொட்டது.

"அதோ பாரடி, அவர் குழல் ஓசை கேட்கிறது. அது என்னை அழைப்பது போலிருக்கிறது. இன்று ஏனோ அவர் இசையில் அதிக சோகம் கொப்பளிக்கிறது. நான் எப்படியும் அங்கு சென்றாக வேண்டுமடி..."

"அது வீண் பிரமை புவனா... மலைக்கோயிலில் அமர்ந்து அவன் வாசிக்கும் புல்லாங்குழல் இங்கு எப்படி ஒலிக்க முடியும்? எப்போதாவது அப்படி நீ கேட்டதுண்டா என்ன?"

"எப்போதும் இல்லையடி. இன்று ஒலிக்கிறது. ஒரு வேளை அவர் பிரம்மதுர்க்கம் வந்திருக்கிறாரோ என்னவோ..."

"நிச்சயம் அவன் வந்திருக்க முடியாது. வீணாக மனத்தை அலட்டிக் கொள்ளாதே... பேசாமல் சாப்பிடு. படுத்து ஓய்வெடுத்துக்கொள். எல்லாம் சரியாகிவிடும்."

இதைத் தேன்மொழி சொல்லும்போதே, 'ஆ'வென அலறினாள் இளவரசி. ஒரு கணம் அவள் துடித்த துடிப்பில் தோழி நிலைகுலைந்தே போனாள்.

"என்ன புவனா... என்ன ஆயிற்று..?"

"தெரியவில்லையடி. அந்தக் குழலோசை திடீரென நின்றுபோனது. என்னை யாரோ சவுக்கால் அடிப்பது போல் இருந்... ஆ... ஐயோ... தேன்மொழி, என் மீது சரமாரியாக அடி விழுகிறதடி... ஐயோ... அப்பா... அம்மா..."

'ஏன் இப்படி இளவரசி மஞ்சத்தில் புரளுகிறாள்? என்ன மாய்மாலம் இது. ஒருவேளை இவளுக்கு எல்லாம் தெரிந்திருக்குமோ?'

தேன்மொழி மனசை இறுக்கிக் கொண்டாள்.

சடாரென்று இளவரசி மஞ்சத்திலிருந்து பாய்ந்து எழுந்து அவள் கழுத்தைப் பிடித்து நெரித்தாள்.

"சொல்லடி சதிகாரி. என்ன நடக்கிறது? உன் அப்பாதானே இங்கு அரண்மனைக் காரியஸ்தர். உனக்குத் தெரியாமல் எதுவும் இராது. என்னை யாரோ சாட்டையால் விளார் விளாராக அடித்து நொறுக்கு கிறார்கள். வலி பொறுக்கமுடியவில்லை. வஞ்சகி! இன்னுமா உன் மனம் இரங்கவில்லை. சொல்லித் தொலையேன். இது ஏதும் மாந்திரீகமா... கழுத்தை நெரித்துக் கொன்றுவிடுவேன்..."

புவனா மீண்டும் மஞ்சத்தில் விழுந்து துடித்தாள்.

"ஐயோ! இது என்ன பயங்கரம் புவனா! உன்னை யாரும் ஒன்றும் செய்யவில்லையே... ஏன் இப்படித் துடிக் கிறாய்...? ஒரு வேளை இது அந்த யட்சனின் வேலை யாகத்தான் இருக்கும். எனக்கென்னவோ அவன் சாதாரண மனிதன் என்றே தோன்றவில்லை. அவன் சூனியக்காரன். மாய-மந்திரங்கள் அறிந்தவன். அதனால் தான் உன்னை இந்தப் பாடுபடுத்துகிறான்.

போன வெள்ளிக்கிழமை நீ எந்த மண்டபத்தில் அவன் குழலூத நடனமாடினாயோ அதே மண்டபத்தில் இன்று அந்தத் திமிர் பிடித்தவனை தூணில் கட்டி வைத்து, அவன் அகந்தை அடங்கும்வரை சாட்டையில் அடித்து, அவனை ஊரைவிட்டே துரத்த வேண்டுமென்று உன் தந்தை கட்டளையிட்டுள்ளார். அதை நிறைவேற்ற என் தந்தை சென்றுள்ளார்..."

தோழி பேசப் பேச, இளவரசி துள்ளித் துடித்துப் புரண்டாள். இப்போது அவள் உடம்பில் இரத்தக் கோடுகள் தென்பட்டன. தேன்மொழி மிரண்டு போன வளாய் அங்கிருந்து அலறியபடியே ஓடிவந்தாள்.

காளிங்கராய உடையார் அப்போது ஜமீன் அரண் மனையில் இல்லை... தோப்பு வீடு சென்றிருந்தார்.

தேன்மொழி சிறிதும் தயங்காமல் தலை தெறிக்கிற வேகத்தில் அங்கே ஓடினாள். அங்கே அப்போதுதான் பூங்குறிச்சியிலிருந்து அவள் தந்தை வந்து சேர்ந்திருந்தார். அவர் காளிங்கராயரிடம், 'பெரிய விபரீதம் நடந்து விட் டது பிரபு' என்று நடந்த விவரம்கூறிக் கொண்டிருந்தார்.

"என்ன முதலியாரே சொல்கிறீர்கள்... என்ன விபரீதம் நடந்து விட்டது...?"

"அந்த தொம்பக்கூத்தாடிப் பயலை மலைக்கோயில் மண்டபத்தில் நிறுத்தி வைத்து, சவுக்கால் அடிக்கச் சொன்னேன். நம் அடியாட்கள் அவன் கையைப் பிடித்து இழுத்தனர். அவன் தகராறு எதுவும் செய்யவில்லை. பேசாமல் எழுந்து நின்றான். 'ஐயா... கடைசியாக இந்தப் புல்லாங்குழலை ஒரு முறை ஊதுகிறேன்' என்றான். சம்மதித்தேன்.

அவன் அந்தப் புல்லாங்குழலை வாசித்தபோது நானும் கூட சில கணப்போதுகள் நிலைகுலைந்து விட் டேன். அது மனுஷ கானமாகத் தோன்றவில்லை. தேவ கானம் போலிருந்தது. அவன் ஓர் இசைச்சித்தன். இசை யில் ஓர் அபூர்வ வித்தை அவனுக்கு வசமாகி யுள்ளது. இளவரசி அவன் இசையைக் கேட்டு மயங்கியதில் வியப் பதற்கு ஒன்றுமில்லை.

பிறகு அவன் மண்டபத்தின் மையத்தில் போய் நின்று, 'ம்... ஆகட்டும். தண்டனையை நீங்கள் நிறைவேற்ற லாம்' என்று கூறி விட்டு, இடுப்பில் கைஊன்றி கம்பீர மாக நின்றான்.

அடி விழவிழ அவன் சிரித்துக் கொண்டே நின்றது எனக்கே வியப்பாகவும் எரிச்சலாகவும் இருந்தது. அத் தனை அலட்சியம் யாருக்கும் சாத்தியமில்லை. உணர்ச்சி களைக் கூட வென்று விட்டவன் போன்றிருக்கிறது!

அவன் உடலில் முப்பத்தாறு அடிகள் விழுந்தன. அவன் முகம் கல்லாக இறுகியிருந்தது. சிரிப்பைக் காணோம். நானும் தண்டனையை நிறுத்தச் சொல்லி, அவனை எங்காவது கண்காணாத இடத்துக்குப் போகு மாறு விரட்டச் சொன்னேன்.

ஆட்கள் அவன் கை பிடித்து இழுத்தனர். அப்போது தான் அவன் அடியற்ற மரம் போல் வீழ்ந்தான்.

அவன் இறந்துபோன விவரம் அறிந்ததும் நான் திகைத்துப் போனேன். ஆலயத்துக்குள் ஒருவன் கொல் லப்படுவது நிகழ்ந்துவிட்டது. மக்கள் ஆளுக்கு ஒன்று பேசினர். அபசகுனம் என்றனர். ஜமீன் குடும்பத்துக்கு தீமை நிகழும் என்றனர். நான் செய்வதறியாது இங்கு ஓடி வந்தேன்..."

காரியஸ்தர் கனகவேல் முதலியார் கூறி முடித்தார்.

"சரி முதலியாரே, இப்போது அந்த சவத்தை என்ன செய்வது? அது அங்கேதான் கிடக்கிறதா?" என்றார் காளிங்கராயர்.

"இல்லை பிரபோ. அதை அப்புறப்படுத்தி, ஆற்றங் கரையில் தகனம் செய்யச் சொல்லிவிட்டேன். அவன் அநாதை. எந்தப் பிரச்னையும் எழாது. ஜமீன் அரண் மனைக்காரியம் எதையும் பூங்குறிச்சி மக்கள் எதிர்ப்பவர் களல்ல. ஆனால், தெய்வகுற்றம்-செத்தவன் ஆவி பற்றிய அச்சங்கள்தான் என்னுள்..." என்றார் முதலியார்.

அப்போது உள்ளே நுழைந்த தேன்மொழி அரண் மனையில் நடந்த சகலமும் விவரித்தாள்.

காளிங்கராய உடையாரும் கனகவேல் முதலியாரும் பதறியடித்துக் கொண்டு அரண்மனைக்கு ஓடிவந்தனர்.

அந்தக் கூடத்தில் ஜமீன் குடும்பத்தார் கூடியிருந் தனர். பெண்களின் ஒப்பாரி இதயத்தை பிசைவதா யிருந்தது.

அங்கே மஞ்சத்தில் ஒரு கோடி ரோஜா மலர்களின் இதழ்கள் உதிர்ந்து கிடந்தது போல்-தாதிப்பெண்கள் தங்கக் கிண்ணத்தில் ஏந்தி வந்த செம்பஞ்சுக் குழம்பு கொட்டிச் சிதறியதுபோல் செந்நிறம் எங்கும்பரவிக் கிடந்தது.

குருதிச் சேற்றிலே குங்குமப் பூக்குவியலொன்று சரிந்து கிடப்பது போல் இளவரசி விழுந்து கிடந்தாள்.

அவள் ஆவி எப்போதோ தன் ஆத்மா வரித்துக் கொண்ட நாயகனைத் தேடி நாத வெள்ளத்தில் மூழ்கி நீந்தப் போய் விட்டிருந்தது.

## 6

“இந்தக் கதை ரொம்ப நல்லா இருக்கு. ஆனா, சரித்திரக்கதை மாதிரி இருக்கே தமிழ்... அப்புறம் ஏதோ மறு ஜென்மம் அது, இதுன்னு சொன்னே... கதையில அப்படி எதுவும் இல்லியேப்பா...” என்று கேட்டான் கதிரேசன்.

“நான் இன்னும் கதைய முழுசா உங்ககிட்ட சொல்லலை சார். இது நாம பிக்சர்ல சொல்லப் போற கதையோட ஒரு முக்கியமான போர்ஷன். அவ்வளவு தான். சுருக்கமா முதலில் ஒன்லைன் போட்டுப்போம். பிறகு டீடெயிலா பார்க்கலாம்னு நெனைச்சேன். ட்ரீட் மெண்ட் பண்ணினப்புறம் சூப்பரா இருக்கும் சார் இந்தக் கதை. அண்ணன் என்ன நினைக்கிறாரோ தெரி யலையே...” என்றான் தமிழ்க்கண்ணன்.

ஆதித்தகுமார் ஒரு சிகரெட் எடுத்துப் பற்ற வைத்துப் புகையை உள்ளுக்கு இழுத்தான். பிறகு, “நல்ல லவ் சப்ஜெக்ட்... கொஞ்சம் அமானுஷ்யமா இருக்கு. பட், சினிமாடிக்கா பார்த்தா ஓ.கே. கதிரு சொன்னாப்பல முழுக்க சரித்திரமா போவுதேன்னு நானும் யோசிச் சேன்...”

“இப்பத்தான் ஒவ்வொரு படத்துலயும் பணத்தைக் கொட்டி இறைத்து, ஒரு பாட்டு சீனாவது ராஜா-ராணி

காஸ்ட்யூம்ல எடுத்து இணைச்சிடறாங்களே. சூரியன்ல, அரண்மனைக் காவலன்ல சரத் பண்ணினாரு. இப்ப வந்த ஜல்லிக்கட்டு காளைல பிரபு-கனகா பாட்டு சீன் பார்த்தோம்ல. இதே மாதிரி கமல், ரஜினி எல்லாருமே பண்ணியிருக்காங்க. இதுக்கு பேசாம முழுசாகவே ஒரு ஹிஸ்டாரிகல் ஃபிலிம் பண்ணிப் பார்த்துடலாம். என்ன சொல்றே கொமரு..." என்று சிரித்தான் கதிரேசன்.

"அட... நீ வேற தமாஷ் பண்ணிக்கிட்டு. அதுக்குல்லாம் இப்ப யாருக்குப்பா தில் இருக்கு..? கதைய முழுசா கேட்போம் கதிரு. ஐ திங்க் தமிழ் இப்ப சொன்ன சம்பவம்லாம் பிளாஷ் பேக்ல வரும்னு நினைக்கிறேன். கொஞ்சம் பெரிய பிளாஷ் பேக். ஆனா, பரவாயில்லே. என்ன தமிழ், நான் சொல்றது சரிதானே..?" என்றான் ஆதித்தகுமார்.

"உங்க ஐடியா நல்லாருக்குண்ணே. பிளாஷ்பேக்ல கூட வச்சுக்கலாம், ஆனா, நான் இன்னும் அதுபத்தி யோசிக்கலே. முதல்ல இதை முழுசா சொல்லிட்டு, அப்புறம் மறுஜென்ம விஷயத்தைக் காட்டிடலாம்னு நான் நெனைச்சேன். அதை அப்புறம் டிஸ்கஷன்ல பார்த்துக்கலாம். இது முழுக்க ஒரு ஹிஸ்டாரிக்கல் ஃபிலிம் இல்லே. ஆனா கொஞ்சம் பீரியாடிக்கலா பண்ணணும்னு நான் ஆசைப்படறேன். நல்லா ரிச்சா பண்ணணும். அப்ப தான் இது ஒர்க்கவுட் ஆகும். வெள்ளைக்காரங்க காலத்து ஜமீன் ஒன்றை அப்படியே கண்முன்னால கொண்டாந்துடணும். அந்த குதிரைகள் பூட்டிய சாரட் வண்டி, மேனா பல்லக்கு, யானை, குதிரை, வாட்கள்னு ஏகப்பட்ட விஷயங்கள் இருக்கு. காஸ்ட்யூம்லாம் வேற அதிகம்.

"அரண்மனைக்கு இருக்கவே இருக்கு மைசூர் பேலஸ். அனுமதிச்சீங்கன்னா கொஞ்சம் ராஜஸ்தான் வரை போய் வந்துடலாம். ஜெய்ப்பூர் அரண்மனையில் ஷூட் பண்ணினா படம் ரொம்ப ரிச்சாத் தெரியும். செகண்ட் ஆஃப்லயும் இந்த ஜமீன் விஷயங்கள் வருது..."

"இத பாரு தமிழ், செலவு பத்தி நீ யோசிக்காதே. அத நான் பார்த்துக்கறேன். புரொடக்ஷன் வேலை என்னோடது. இந்த பீரியாடிக் சமாசாரங்கள் நமக்கு ஒத்து வருமாங்கறத முதல்ல யோசிக்கணும். பாரதிராஜா சார் கூட இதுமாதிரி 'நாடோடித் தென்றல்'னு ஒரு பீரியாடிக் ஃபிலிம் பண்ணினாரு. என்ன ஆச்சும்னு தெரியும்லே..."

"நீ சரியாத்தான் சொல்றே கதிரேசா..."

"இல்லண்ணே... அது வேற டைப். அந்தப் படம் அவரு ரொம்ப நல்லாதான் பண்ணியிருந்தாரு. என்னமோ அது போகலே. ஆனா, நம்ம சப்ஜெக்ட் வேற மாதிரி இருக்கும். முதல்பாதி வெள்ளைக்காரங்க காலத்துல நடக்குதுனு சொன்னேன். அவ்ளோதான். வெள்ளைக்காரங்களுக்கும் நம்ம கதைக்கும் சம்பந்தமே இல்லே. அந்த ஆளுங்களே படத்துல வரமாட்டாங்க. துரை வருவாரு. துரை கேட்பாருன்னு ரெண்டு மூணு டயலாக்ல சொல்றதோட சரி..."

"நம்ம கதையில செகண்ட் ஹாஃப் எப்படின்னு நீ இன்னும் சொல்லவே இல்லியே..."

"சொல்றேண்ணே. சுதந்திரம் அடைஞ்ச பிறகு உள்ள காலகட்டத்துல அதே ஜமீன் இருக்கு. ரெண்டு தலைமுறை கழிச்சு அதே அரண்மனையில மறுபடியும் அந்தப் பெண் புவனா பிறந்து வளர்ந்திருக்கா. இப்பவும்

அதும் பேரும் புவனாத்தான் - புவனேஸ்வரி. கதை இந்தக் காலகட்டத்துல நடக்குது. அதனால இதை நல்ல சமூகக் கதையா டெவலப் பண்ணிக்கலாம். அண்ணன் சொன்ன மாதிரி அந்தப் பூர்வ ஜென்மக் கதையை பிளாஷ் பேக்ல கொண்டாந்துடலாம்..” என்றான் தமிழ்க்கண்ணன்.

அவனுக்கு எங்கே இந்த சப்ஜெக்ட் பிடிக்காமல் ஆதித்தகுமார் தன்னைக் கழற்றி விட்டுவிடுவானோ என்று சந்தேகமாக இருந்தது.

“அதெல்லாம் பிறகு யோசிப்போம். இப்ப நீ அவுட் லைனா உன்னோட கதையைச் சொல்லு. மறு ஜென்மத் துல அந்தப் புல்லாங்குழல் ஊதறவன் யாரா பிறந்திருக் கான்?” என்று கேட்டான் ஆதித்தகுமார்.

அதற்குள் நாலைந்து சிகரெட்டுகள் ஊதித் தள்ளி யாயிற்று.

“இப்ப அவன் ஒரு சிற்பியோட மகன். அதே மலைக் கோயில்ல திருப்பணி வேலைகள் நடக்குது. அப்ப மெட்ராஸ் போய் படிச்சுட்டு வந்த ஜமீன் பொண்ணு மலைக்கோயில் திருப்பணி வேலைகளைப் பார்க்க அங்கே வருது. அதோட கூடப் படிச்ச நாலைஞ்சு பொண்ணுகளும் ஊர் சுற்றிப் பார்க்க வந்திருக்குதுங்க.

இளம் சிற்பி ஒரு பெண் சிற்பம் செதுக்கிக் கொண்டிருக்கிறான். அதை வந்து பார்த்துக் கொண்டி ருந்த இளம் பெண்கள் அவனைக் கேலி செய்கின்றனர். அதைக் காதில் வாங்காமல் அவன் பணியில் கவனமாக இருக்கிறான்.

‘இது மாதிரி உடம்பும் அழகும் இப்ப யாருக்குடி இருக்கு?’ என்கிறாள் ஒருத்தி.

‘கோயில்ல ஆபாச சிலைகள்லாம் செஞ்சு வைப் பாங்களாமேடி... இந்த ஆளும் அது மாதிரி சிலைகள் செய்வாரோ’ என்கிறாள் வேறு ஒரு பெண்.

இப்படி அவர்கள் எத்தனை சீண்டியும் அந்த இளம் சிற்பி கவனம் சிதறவில்லை.

ஜமீன் பெண், ‘என்னய்யா உனக்கு காது செவிடா, இல்லே அத்தனை திமிரா...?’ என்று கேட்டு அருகில் போய் குனிந்து நிற்கிறாள்.

சிற்பி கல்லில் ஒரு தட்டு தட்ட, சிறு துகள் அவள் நெற்றியில் தெறிக்கிறது. சிவந்த அவள் நெற்றியில் செங் குருதி வழிகிறது. அவள் ‘ஆ’ வென அலறுகிறாள்.

சிற்பி மகன் பதற்றத்துடன் எழுந்து, மயங்கித் தள்ளாடும் அவளைத் தாங்கிப் பற்றுகிறான்...”

சொல்லிக் கொண்டே போன தமிழ்க்கண்ணனை நிறுத்துமாறு இடக்கரம் உயர்த்தி சைகை செய்தான் ஆதித்தகுமார். பிறகு,

“மோதல்ல ஆரம்பமாவுது அவங்க லவ். மேல சொல் தமிழ். அது எப்படி டெவலப் ஆச்சுன்னு அப்புறம் பார்ப்போம். எண்ட் என்ன? அதைச் சொல்லு முதல்ல. அவங்க சேர முடிஞ்சுதா இல்லையா?” என்று கேட்டான்.

“இல்லேண்ணே. டிராஜிடி எண்ட்தான் நினைச்சு வச்சிருக்கேன்..”

“டிராஜிடின்னு மொட்டையா சொன்னா எப்படிப்பா? கொஞ்சம் சுருக்கமா-தெளிவா சொல். நான் ஷூட்டிங் புறப்படணும்..”

துரிதப்படுத்தினான் ஆதித்தகுமார்.

அந்த அவசரம் தமிழ்க்கண்ணன் மனசைக் கொஞ்சம் சோர்வடையச் செய்வதாகவே இருந்தது. எனினும் அவன் உற்சாகம் காட்டவே முயன்றவனாய்-

"இப்ப இருக்கற ஜமீன்தார், அரசியல் செல்வாக்கு உள்ளவர். இவங்க காதல் விவகாரம் அவருக்குத் தெரிய வருது. மகளைக் கூப்பிட்டு எவ்வளவோ கண்டிச்சுப் பார்க்கறார். ஒண்ணும் எடுபடலே. அவங்க எல்லாக் கட்டுப்பாட்டையும் மீறிச் சந்திக்கறாங்க.

ஜமீன் அடியாட்கள் மலைக்கோயில் படிகளில் அந்தச் சிற்பியோடு சண்டை போடுகிறார்கள். அண்ணே, இந்த சண்டைக் காட்சி பற்றி பிரமாதமாக யோசிச்சு வச்சிருக்கேன். கோபுரம், மதில், படிகள்ல அற்புதமான ஜம்பிங் சீன்கள் எடுக்கப் போறோம்..."

"ஸ்... தமிழ், என்னப்பா நீ... அதெல்லாம் அப்புறம் டிஸ்கஷன்ல பார்ப்போம். நீ இப்ப கதையோட முடிவைச் சொல்லு போதும்."

"ஒருநாள் ஆற்றங்கரையில் அவனும் ஜமீன் பொண்ணும் பேசிக்கிட்டிருக்கறத ஜமீன்தாரே பார்க்கறார். கோபம் தாங்கல, விடுவிடுன்னு மலைக் கோயிலுக்குப் போறார். அங்கே சிற்பி கோபுர உச்சியில் அன்னிக்கு வேலை செய்ய மரப் பலகைகள், கட்டைகள், வச்சு சாரம் கட்டிக்கிட்டிருக்காங்க. அந்த ஆட்களை அழைத்துப் பேச்சுக் கொடுத்து வெளியே அனுப்பிவிட்டு, தன் அடியாள் மூலம் கோபுர உச்சியில் சாரப் பலகைய உடைச்சி, கயற அறுத்து எதுவும் தெரியாம பண்ணி வச்சிடச் செய்யறார்.

ஜமீன்தார் வந்திருக்கற சேதி தெரிஞ்சு சிற்பி ஓடி வருகிறான். வேலைகள் தாமதமாகிறதே என்று அவர் அவனிடம் கடிந்து கொள்கிறார். 'போப்பா... போய் வேலையைப் பார்...' என்று அதட்டுகிறார். அவன் அவசர அவசரமாக கோபுர உச்சிக்கு ஏறுகிறான். உடைந்த சாரப் பலகை மீது போய் நிற்கிறான்.

அடுத்த கணம்-ஜமீன்தார் கண்ணெதிரே அவன் சாரப் பலகைகள் அறுந்து, தலைக்குப்புற விழுகிறான். நேராக அவன் கீழே மலைப்படிகளில் விழுந்து ரத்தம் ஒழுக உருளுகிறான். அப்போதுதான் எதிர்பாராமல் அங்கே கீழே ஆற்றுப் பக்கமிருந்து அவன் காதலி புவனா படிகளில் ஏறுகிறாள். மேலே கோபுரத்திலிருந்து அறுந்து தொங்கிய ஒரு உருட்டுக்கட்டை பொத்தென்று அவள் தலையில் வந்து விழுகிறது. அவளும் அலறிச் சாய்கிறாள். அவன் மீதே விழுந்து அவனும் அவளும் பிணமாக, இப்போது உருண்டு கடைசிப் படியில் வந்து கிடக்கின்றனர்.

வாழ்வில் இணைய முடியாத அந்த இளசுகள் சாவில் இணைந்து கிடக்கின்றனர்.

ஜமீன்தார் 'மகளே புவனா' என்று கதறியபடி படிகளில் இறங்கி ஓடி வருகிறார்.

இந்தக் காட்சிகளை ஸ்லோமோஷனில் படமாக்குகிறோம்."

"அவ்வளவுதான், இல்லையா?"

"ஆமாம் அண்ணே..."

"சரி, நீ கிளம்பு. நானும் ஷூட்டிங் புறப்படணும். தெரியும்ல. இன்னிக்கு நான் அவுட்டோர் கிளம்பறேன்.

கோபிச்செட்டிப் பாளையத்துல மூணு நாள், ஊட்டில ரெண்டு நாள் படப்பிடிப்பு இருக்கு. வந்தவுடனே உனக்குத் தகவல் சொல்றேன். அப்புறம் உட்கார்ந்து பேசுவோம்... என்ன, சரிதானே..."

ஆதித்தகுமார் எழுந்து, புறப்படத் தயாரானான். தமிழ்க்கண்ணனும் எழுந்து, ஒரு கும்பிடு போட்டுவிட்டு வெளியே வந்தான். கூடவே வந்த கதிரேசன், டிரைவரைக் கூப்பிட்டு, "டைரக்டர் சாரை அழைச்சிட்டுப் போ. அவரு எங்க இறங்கணுமோ அங்க விட்டுட்டு வா" என்று உத்தரவிட்டான்.

தமிழ்க்கண்ணனுக்கு இரண்டு மூன்று நாட்களாக வேலையே ஓடவில்லை.

'பிடித்திருக்கு, பிடிக்கவில்லை என்று ஆதித்தகுமார் ஒரு வார்த்தை சொல்லிவிட்டுப் போயிருக்கலாமே' என்று நினைத்தான். வேறு படங்களுக்கு வேலை செய்ய வேண்டியிருந்தது.

அவன் திட்டமிட்டு வேலைகளைத் துவக்கி, குறித்த காலத்தில் படம் முடிப்பவன் என்று பெயரெடுத்திருந்தான். எதற்காகவும் அதைக் கெடுத்துக் கொள்ளக் கூடாது. அதே சமயம் ஆதித்தகுமாரின் அன்பாதரவையும் அவன் இழந்துவிட விரும்பவில்லை.

ஒருவேளை ஆதித்தகுமார் திடீரென்று அழைப்பு விடுத்தால் மறுக்க முடியாது. என்ன செய்வது...?

"தமிழ் சார், உங்களுக்கு போன்" என்றான் அவனது உதவி டைரக்டர்களில் ஒருவனான நம்பிராஜன்.

போனை வாங்கி, "ஹலோ... யாரு?" என்றான்.

"நான்தான் சார் அஜிதா.."

"ஓ... நீயாம்மா என்ன சொல்லு...?"

"என்னாங்கோ சார், நம்மள நீங்க மறந்து போவுது. அன்னிக்கே உங்ககிட்ட நின்னு ரெண்டுவார்த்தை பேச நினைச்சேன். முடியலே. இப்ப வர்லாமா சார், நீங்கதான் நம்ப வூட்டுக்கு வர மாட்டேங்கறீங்க" என்று தெலுங்கு கலந்த கொச்சைத் தமிழில் அஜிதா குழைந்தாள்.

அவள் ஒரு புதுமுகம். தெலுங்கில் இரண்டொரு படங்கள் பண்ணியிருக்கிறாள். எல்லாம் செகண்ட் ஹீரோயின் பாத்திரங்கள்தான். தமிழில் கால் ஊன்றத் துடிக்கிறாள்.

"என்ன விஷயம்னு போன்லயே சொல்லேம்மா. நான் இப்ப கொஞ்சம் பிஸியா இருக்கேன்."

நீங்க சொன்னா ஆதித்தகுமார் தட்டாம கேப் பாருன்னு எல்லாரும் சொல்லிச்சு. எனக்கு கொஞ்சம் சிபாரிசு பண்ணுங்க சார். உங்களை உசுரு உள்ள வரைக்கும் மறக்க மாட்டேன்."

அஜிதா விடாமல் பேசிக் கொண்டே போனாள். குரல் கொஞ்சிக் குழைந்தது.

"சரி அஜிதா. பார்க்கலாம். ஞாபகம் வச்சுக்கறேன்" என்று கூறி, போனை வைத்தான்.

"என்ன நம்பி இது. விடமாட்டேன்றா. ஆதித்த குமார் கிட்டேருந்து போன் வந்திருக்கும்னு நினைச்சா இது வந்து கழுத்தறுக்குது. அவரு இன்னிக்கு வந்துடு வேன்னாரு. காண்டாக்ட் பண்ணுவாருன்னு பார்த்தா அவருகிட்டேருந்து போனே வரலியே..."

"வரும் சார், நிச்சயமா வரும். பேசாம அந்த அஜிதாவை மடக்கிப் போடுங்க சார். நிச்சயமா அஜிதா நாலு தமிழ்ப்படத்துல நடிக்கத்தான் போவுது. ஏன்னா ஆளும் அழகு முயற்சியும் பண்ணுது. நாம முந்திக்கலாம். அதுக்கு நம்ம மூலமா ஒரு எண்ட்ரி கிடைச்சுச்சுன்னா நாம எது சொன்னாலும் கட்டுப்படும். அதோட கண்ட் ரோல் நம்மகிட்ட இருக்கும்."

"அதை எதுக்கு நாம கண்ட்ரோல் செய்யணும்?"

"சார், நீங்க ஃபீல்டுக்கு புதுசு. அதான் இப்படிச் சொல்றீங்க. புதுமுக நடிகைகள் அறிமுக விஷயத்துக்குப் பின்னால எவ்வளவோ சங்கதிகள் இருக்கு. அவங்க முதல்ல நம்மகிட்ட கால்ஷீட் பிராப்ளம் பண்ண மாட் டாங்க. பணவிஷயத்துல கறார் பேச மாட்டாங்க. இன் னொரு முக்கியமான சௌரியமும் இருக்கு. அதையும் சொல்லிடட்டா...?"

"வேணாம்னா விடவா போற. சொல்லுப்பா!"

"சினிமா உலகில் நீங்க உங்களுக்குனு ஓர் இடத்தை நிரந்தரமா பிடிக்கறதுக்குள்ள எவ்வளவோ சிரமங்கள் இருக்கு. வளர்ச்சி, பணம், புகழ்னு பார்த்தா இதெல்லாம் ஆம்பிளைங்களைவிட பொம்பளைகளுக்குத்தான் அதிகம். அதே மாதிரி சீக்கரமே நாலு வருஷத்துல காணா மலும் போயிடுவாங்க-அதுவேற விஷயம். அதுக்குள்ள அவங்க மூலமா நாம சில லாபங்களை அடைஞ் சுடலாம்!"

"அவங்க மூலமா லாபமா? நம்பி, நீ என்ன சொல்றே?"

"ஆமா சார். லாபம்தான். எல்லாமே ஒரு வியா பாரம் மாதிரிதானே சார். இப்ப உங்க மூலமே அஜிதாவுக்கு ஒரு அறிமுகம் கிடைக்குதுன்னு வச்சுக்கங்க. அப்புறம் அஜிதா வேற வேற யார் படத்துல நடிச்சாலும் உங்களைக் கேக்காம அக்ரிமெண்ட் சைன் பண்ணக் கூடாது. அந்தப் பொண்ணோட வெளிப் படங்களுக் கான சம்பளத்தை நீங்கதான் தீர்மானிக்கறிங்க. அதுல ஒரு குறிப்பிட்ட பர்சன்டேஜ் தொகை நமக்கு வந்தாகணும். இவ்வளவுதான் சார். குறைஞ்சது ரெண்டு அல்லது மூணு வருஷம்... அதிகம் போனா அஞ்சு வருஷம் இது மாதிரி அது உங்க பிடியில இருக்கணும். உங்களுக்குப் பணம் பிரச்னை வராது. இது ஒண்ணும் தப்பில்லே சார்!"

தமிழ்க்கண்ணன் இதுபற்றி கொஞ்சம் கூடத் தயக்க மில்லாமல் "அட நீ வேற... ஏதாவது தேவையில்லா யோசனை சொல்லிக்கிட்டு - அவளுக பணம் நமக்கு எதுக்கு நம்பி? நாம திறமையால உழைச்சு முன்னுக்கு வரணும். அதுதான் என்னோட ஆசை. இது மாதிரி தரகு வியாபாரம்லாம் எனக்கு வேணாம். ஆளை விடு..." என்றான்.

அப்போது கதிரேசன் அங்கே திடீரென்று வந்து நின்றார்.

"வணக்கம் தம்பி. என்ன டிஸ்கஷன் நடந்து கிட்டிருக்கு?"

"வாங்க சார், வணக்கம். டிஸ்கஷன் ஒண்ணுமில்லே சார். சும்மாதான் பேசிக்கிட்டிருந்தோம். அண்ணன் அவுட்டோர் முடிஞ்சி வந்துட்டாரா சார்..." என்றபடி

எழுந்து, அவரை வரவேற்று, உட்கார இடம் காட்டினான் தமிழ்க்கண்ணன்.

"கொமரு இன்னும் வரலேப்பா. அடுத்தவாரம் தான் வரும். நீ வருத்தப்படலேன்னா ஒரு விஷயம் உன்கிட்ட பேசணும், அதான் வந்தேன். தப்பா நினைச்சுக்க மாட்டியே" என்றார்.

இந்தப் பீடிகையே தமிழ்க் கண்ணனுக்கு விஷயத்தை விளங்க வைத்தது. ஆதித்தகுமார் தன்னை வைத்து ஒரு படம் பண்ணும் திட்டத்தை டிராப் செய்திருப்பார்!

"சொல்லுங்க சார், பரவாயில்லே..."

"அது வந்தும்பா-உன்கிட்ட கொஞ்சம் தனியா பேசணும்" என்ற கதிரேசன், நம்பிராஜனை ஏறிட்டார்.

அவன் "அண்ணே, காபி சாப்பிடறீங்களா, கூல்டிரிங்ஸ் வரவழைக்கட்டுமா?" என்று கேட்டபடி சற்று நகர்ந்தான்.

"இல்லப்பா, அதெல்லாம் ஒண்ணும் வேணாம்!"

தமிழ்க்கண்ணனும் கதிரேசனும் உள் அறைக்குச் சென்றார்கள்.

# 7

'நீ ஒண்ணும் தப்பா நினைச்சுக்க மாட்டியே" என்று கதிரேசன் மறுபடி ஆரம்பிக்கவும் "இதுல தப்பா நினைக்க என்ன சார் இருக்கு...? அண்ணன் வேணாம்னு சொல்லிருச்சா. அதை நீங்க போன்லகூட சொல்லிருக் கலாம். உங்க பெருந்தன்மை நேர்லயே வந்துட்டிங்க" என்றான் தமிழ்க்கண்ணன்.

உள்ளே கிடந்த சோபாவில் பொத்தென்று அமர்ந்த கதிரேசன், "நீ மொதல்ல உட்காருப்பா" என்று அவன் கையைப் பிடித்து இழுத்து, அருகே அமரச் செய்து தோளை அழுத்தி முதுகைத் தடவி ஒரு தட்டு தட்டினார். பிறகு, கடகடவென நகைத்தபடி...

"ஓ... நீ அப்படி முடிவு பண்ணிட்டியா. விஷயம் அதிலேப்பா. நான் கோபிசெட்டிப்பாளையம் போயிருந் தேன். அங்க ரெண்டுநாள் அதிகம் தங்க வேண்டியதாயி டுச்சு கொமருக்கு. அப்புறம் ஊட்டில மூணு அல்லது நாலு நாள் ஷூட்டிங் இருக்கு. நீ தப்பா நினைச்சுக்கப் போறியோன்னு கொமரு கவலைப்பட்டாப்பல. உன்னைப் பத்திதான் நாங்க அங்க பேசிக்கிட்டிருந் தோம்."

"சார், நீங்க எதுக்கோ தயங்கறீங்க. என்னைப் பொறுத்த வரையிலும் நீங்க வேற, ஆதித்தகுமாரண்ணன் வேற இல்ல. நீங்க எதுவானாலும் தயங்காம சொல் லுங்க..."

"வேற ஒண்ணுமில்ல தமிழ், நீ சொன்ன கதையில செகண்ட் ஹாஃப் சரியா வரும்னு தோணலேங்குது கொமரு..."

"அதுக்கென்ன சார். அண்ணன் அப்படி ஃபீல் பண்ணினா மாத்திடுவோம். எங்க சேலம் பக்கத்துல ஒரு ஜமீனுக்குச் சொந்தமான மலைக் கோயில் இருக்கு சார். அந்தப் பக்கம் தான் எங்க கிராமம். அங்க இது மாதிரி ஒரு சம்பவம் நடந்ததா கர்ண பரம்பரையா சொல்லு வாங்க. சின்ன வயசுல கேட்டிருக்கேன், அதைத்தான் கொஞ்சம் சினிமாடிக்கா நான் யோசிச்சு சொன்னேன்."

"நல்லதுப்பா. ஆனா நான் கொமரு சொன்னது முழுக்க ஒரு வாட்டி சொல்லிடறேன், கேட்டுக்க. நடிக னோட குறுக்கீடு ஸ்கிரிப்ட் விஷயத்துல இருக்கறதைப் பொதுவா டைரக்டருங்க ஒப்புக்கறதில்லே. நீயும் அது மாதிரி நினைச்சுரக் கூடாதுன்னு கொமரு சொல்லச் சொன்னாப்பல."

"சார், என்ன சார் நீங்க. இது உங்க சொந்தப் படம். இதுல அவருக்கு இல்லாத உரிமையா? அண்ணன் என்ன சொல்றாரு?"

கதிரேசன் ஆசுவாசமாகச் சாய்ந்து ஒரு சிகரெட் பற்ற வைத்துக் கொண்டார். பிறகு-

"செகண்ட் ஹாஃப்ல அந்த சிற்பி கேரெக்டர் வேண்டாம்னாப்பல. பொண்ணு மெட்ராஸ்ல படிக்குது. அப்ப கூட படிக்கற காலேஜ் பையனோட சிநேகம். அவங்க கொஞ்சம் பேரோட பிக்னிக் போறாங்க. அது ஒரு ஹில் ஸ்டேஷன். ஊட்டி, கொடைக்கானல்னு எங்க வேணும்னாலும் வச்சுக்கலாம்.

ஆட்டம், பாட்டம்னு ஒரே ஜாலியா இருக்காங்க. அப்ப அங்க ஒரு மலைவாசிப் பையன் கையில புல்லாங் குழல் வச்சுக்கிட்டு, இவங்கள வேடிக்கை பார்த்துக்கிட்டு நிக்கறான்.

அவங்கிட்ட போய் இந்தப் பொண்ணு, 'ஏம்பா... இதை எதுக்கு வச்சிருக்கே. சும்மா விளையாட்டுக்கா, இல்ல ஊதத்தெரியுமா'னு தமாஷ் பண்ணுது. அவன் அதை வாயில் வைத்து, கொஞ்சம் ஊதிக் காட்டறான்.

'வாவ்.. லவ்லி, சூப்பர்'னு அந்தப் பொண்ணு துள்ளுது, 'இத நீங்க யாராவது இப்படி ஊத முடியுமா?'னு ஆண்கள் பக்கம் பார்த்துக் கேட்குது.

'நான் கிட்டார்ல எக்ஸ்பர்ட்'

'மேண்டலின்ல தூள் கிளப்புவேன்'

'சாக்ஸபோன்னா அசத்திடுவேன்'

இப்படி புல்லாங்குழல் தவிர இதர வாத்தியங்கள் பேரைச் சொல்லி ஒவ்வொருவனும் ஜகா வாங்கறாங்க.

'உன்னோட ஆள் வாயை திறக்கல பார்த்தியா புவனா. அவன் ரொம்ப அழுத்தம். அவனுக்கு ரொம்ப நல்லா புல்லாங்குழல் வாசிக்கத் தெரியும்னு ஒரு தடவை என்கிட்ட சொல்லியிருக்கான். விடாதே. அவன் வாயைத் திறக்கவை'னு ஒருவன் மாட்டி விடறான்.

புவனா, 'அப்படியா... எனக்குத் தெரியவே தெரியாதே'னு சொல்லி, அந்தச் சிறுவன்கிட்டேருந்து புல்லாங்குழலை உருவி, 'சங்கர், எங்கே... வாசிங்க பார்க்கலாம்'கறா.

அவன் என்ன சொல்லியும் யாரும் விடறதா தெரியலை. கலாட்டா பண்றாங்க. சங்கர் அந்தப் புல்லாங்குழலை வாங்கி வைத்துக் கொண்டு விழிக்கிறான்.

அவர்களில் ஒருவன், 'டேய் மாப்ள. இங்க நின்னுகிட்டு முழிச்சி பிரயோஜனமில்லை. பேசாம அதோ அந்தப் பாறை மேல ஏறி உட்கார்ந்துகிட்டு, புல்லாங் குழல் ஊதற மாதிரி போஸாவது கொடு. நான் போட்டோ எடுத்துக் குடுத்துடறேன். தங்கச்சி ஊர்ல போய் அப்பப்ப போட்டோவ பார்த்து சந்தோஷப்பட்டுக்கும். நீ குழலூதற கிருஷ்ணன் மாதிரி அதுக்குத் தோணும்'னு சொல்றான்.

இப்படி எல்லாரும் தமாஷ் பண்ணவே, சங்கர் ஒரு சிறிய பாறை மீது ஏறி அமர்ந்து குழலூதுவது போல போஸ் கொடுத்தான். போட்டோ எடுக்கப்படுகிறது. ஆனால், அவன் ஊத முயன்று பார்த்தும் கன்னாபின்னா சத்தம்தான் வருகிறது. சிரித்தபடியே, 'நமக்கு இந்த ஜென் மத்துல சங்கீத ஞானம்லாம் வராதுப்பா' என்று கூறி, அவன் கீழே இறங்க முயல்கிறான்.

அப்போது கால் தடுக்கிக் கீழே விழுந்து உருள் கிறான். புவனா 'ஐயோ' என்று அலற, சக மாணவர்கள் பதறி ஓடி அவனைச் சூழ்ந்து கொள்கிறார்கள்.

சங்கருக்கு ஆபத்து எதுவும் நேரவில்லை. அடியும் பலமாக எதுவுமில்லை. கொஞ்சம் சரிவான பகுதியில் விழுந்து புரண்டதால் லேசான சிராய்ப்புதான்.

மறுநாள் அதிகாலையில் அவனைப் படுக்கையில் காணவில்லை. வெளியிலோ ஒரே பனி. இந்தக் குளிரில் எங்கே போயிருப்பான்?

ஆறரை மணிக்கு புவனா வந்து கதவைத் தட்டி, 'சங்கர் எழுந்துட்டாரா? இப்ப உடம்பு எப்படியிருக்கு?' என்று கேட்கிறாள்.

'சங்கரைக் காணவில்லை. ராத்திரி பூரா ஒரே அனத்தல். சரியா தூங்கலை. விசாரிச்சப்ப ஒண்ணு மில்லேனு மழுப்பினான். விடிகாலைதான் நல்லா அசந்து தூங்கறான்னு நெனச்சேன், ஆனா, படுக்கையில ஆளைக் காணலை...' என்றான் சங்கரின் அறைத் தோழன்.

கவலையோடு வெளியே வந்த புவனா, எதேச்சை யாக முதல் நாள் சங்கர் கீழே விழுந்த இடம் நோக்கி நடந்தாள். அது ஒன்றும் அதிக தூரமில்லை. அவள் நினைத்தது சரி. அவன் அங்கேதான் அந்தப் பாறை மீது உட்கார்ந்திருக்கிறான்.

சங்கரைப் பார்த்த புவனாவுக்கு மற்றொரு ஆச்சர்யம். அவன் இப்போது புல்லாங்குழலை வாசித்துக் கொண்டிருக்கிறான். அற்புதமான இசை மெலிதாக ஒலித்துக் கொண்டிருக்கிறது.

'என்ன சங்கர், எதுக்கு இந்தக் காலை மூடு பனில இங்க வந்து உட்கார்ந்துகிட்டிருக்கீங்க. இவ்ளோ நல்லா குழலூதறீங்களே... உங்களுக்கு முன்னயே இது தெரியுமா! அப்ப நீங்க நேத்து தெரியாதுன்னு சொன்னது பொய்யா?'

'புவனா, நீ என்னை நம்பு. சத்தியமா இதுக்கு முன் னால நான் புளூட்ட தொட்டதுகூட இல்லை. ராத்திரி முழுக்க எனக்கு என்னென்னவோ டிரீம்ஸ். அது ஒரு கலர்ஃபுல் சினிமான்னே சொல்லலாம். போன ஜென்மத் துல எனக்கு ரொம்ப நல்லா புளூட்ல டேலண்ட் இருந்

திருக்கு. எங்கோ ஒரு மலை, அதுமேல அம்மன் கோயில். கீழ் அடிவாரத்துல ஆறு, கரையில மாந்தோப்பு. அங்கெல் லாம் நான் புளூட் ஊதிக்கிட்டு அலையறேன்.

யாரோ ஒரு ஜமீன் பொண்ணு இளவரசி மாதிரி இருக்கா. என் பின்னால அலையறா. நாங்க எங்கெல் லாமோ பறந்து திரியறோம். ஒவ்வொரு காட்சியும் ரியலா அப்படியே வீடியோ படம் எடுத்தாப்பல என் கனவுல தெரியுது புவனா...

அப்புறம் அந்த மலைக்கோயில் மண்டபத்துல அவ என் முன்னால டான்ஸ் ஆடறா. இது ஜமீன் ஆளுக காதில் விழுது. யாரோ ஒரு முரடன் வந்து 'தொம்பப் பயலே, உனக்கு ஜமீன் பொண்ணாடா கேக்குது'னு என்னை சவுக்கால அடிச்சி விளாசிடறான். நாங்க ஒரு தப்பும் பண்ணலை. ஆனா நான் தண்டனை அனுபவிக் கிறேன். அப்படியே செத்தும் போகிறேன். இவ்வளவும் கனவுதான் புவனா..''

அவள் சட்டென்று பாய்ந்து அவன் வாயைப் பொத்துகிறாள்.

'சாவு பத்தி சொல்லாதீங்க சங்கர்.'

'அட நான்தான் குத்துக்கல்லாட்டம் இதோ இருக்கேனேம்மா. என்னடா இவன் பூர்வ ஜென்மம் அது இதுன்னு பீலா விடறான்னு நினைக்கறியா...?'

'அப்படி நினைக்கலை சங்கர். அதை அப்புறம் பார்க்கலாம். நீங்க முழுசாச் சொல்லுங்க. புளூட் வாசிக்க கறீங்களே. இது எப்படி உங்களால முடிஞ்சுது...'

'அது எனக்கே தெரியல புவனா. கனவு நிஜம் போலவே இருந்துச்சு. விடிகாலைக் கனவு பலிக்கும்

பாங்கல்லே. என்னவோ தோணிச்சு இந்தக் குழலை எடுத்துக்கிட்டு இங்க வந்துட்டேன். வாயில பொருத்தி ஊதினா... சரம்சரமா சப்த ஜாலங்கள். எனக்கே நம்ப முடியலே. காதுல என்னென்ன ராகங்கள் பேரெல் லாமோ விழுது. மனது 'இதுதான், இதுவேதான்... வாசி'ன்னு கூவுது. விரல்கள் வித்தை செய்யுது. எனக்கே நான் யார்னு தெரியல..."

'சரிதான். என்ன கிண்டலா... அப்ப நான் யாருன் னாவது புரிஞ்சுதா.... இல்லே இன்னும் அந்த இளவரசி மயக்கத்துலயே இருக்கீங்களா...'

'அதுல ஒண்ணும் குழப்பமில்லே புவனா. அந்த இளவரசி வேற யாருமில்லே-அச்சு அசலா நீயேதான். அப்பவும் உன் பேரு புவனாதான். அதனால் உன்னைப் பார்த்ததும் வித்தியாசமா எதுவுமே தோணலை. பூர்வ ஜென்ம பந்தம்னு சொல்லுவாங்களே, அது நம்ம விஷயத் துல வெறும் வார்த்தையில்ல-நூற்றுக்கு நூறு நிஜம். இது வெறும் காதல் உளறல்னு நினைச்சுடாதே புவனா...'

'இல்ல சங்கர், நம்ம காதலைப் பத்தி விடுங்க. அது நமக்கு முந்தியே உறுதியா தெரிஞ்ச விஷயம்தான். ஆனா, இப்ப நீங்க ஒரு கனவுக்கதை சொல்றீங்களே இதை முந்தியே நான் எங்கோ கேட்டிருக்கேன். அதைப் பத்தி தான் யோசிக்கறேன். அ... வந்து ஞாபகம் வந்துடிச்சு...'

'என்ன ஞாபகம் புவனா...'

'சொல்றேன். எங்க ஊர் சேலம் பக்கம்னு சொன் னேன்ல. ஆக்சுவலா அது இன்னும் கொஞ்சம் உள்ர தள்ளி காவேரிக் கரையில உள்ள பூலாம்பட்டி, நெருஞ்சிப்பேட்டை பக்கமா இருக்கற ஒரு சின்ன

கிராமம். பூங்குறிச்சின்னு பேரு. சுற்றிலும் மலைகள்தான். அங்க ஒரு மலைக்கோயில் இருக்கு. அது எங்க ஜமீனுக்குச் சொந்தமானதுதான். அங்கதான் நீங்க சொல்ற மாதிரியே ஒரு சம்பவம் நடந்ததா கேள்விப் பட்டிருக்கேன். ஆனா, அதை அப்ப நான் வெறும் அப் நார்மலான கட்டுக்கதைன்னுதான் நெனைச்சேன். இப்ப நீங்க என்னடான்னா கனவுங்கறீங்க-பூர்வ ஜென்மம் கறீங்க. எனக்கும் ஈரோடு பக்கம்தான் சொந்த ஊர். இந்த லீவுல நாம அங்கே போறோம்; அந்த மலைக்கோயிலைப் பார்க்கறோம். ஓ.கே "

'ஓகே' என்றான் சங்கர்.'

# 8

கதிரேசன் சொல்வதை அமைதியாக கேட்டுக் கொண்டிருந்த தமிழ்க்கண்ணன், அவர் சற்று நிறுத்தியதும்-

"சொல்லுங்க சார், உண்மையிலேயே இந்த ஐடியா நல்லா இருக்கு. மாத்திரலாம்" என்றான்.

"அவ்வளவுதாம்பா எங்களுக்கு வேணும். எங்கே ஒப்புக்க மாட்டேன்னு அடம்பிடிப்பியோன்னு நினைச்சேன்..."

"சார், நீங்க இன்னும் முழுசா சொல்லலியே! அப்புறம் அவங்க பூங்குறிச்சி கிராமம் போனாங்களா?"

"அட... நீ என்னப்பா தமாஷ் பண்றே? நான் என்ன ரைட்டரா? ஏதோ கொமரு சொன்னதை உன்கிட்ட சொன்னேன். ம்... அப்புறம் ஒண்ணு சொல்லிச்சு..."

"என்ன சார் அது?"

"அந்தப் பையனும் பொண்ணும் அங்க போறாங்க. அவன் ஏதோ புராதன கோயில் விஷயமா ஆராய்ச்சி செய்ய அந்த ஊருக்கு வந்திருப்பதாகச் சொல்லி, அரண் மனைல தங்க வச்சுடுது அந்தப் பொண்ணு. அப்பன்காரனும் பெரிசா ஆட்சேபிக்கல. அங்க தொண்ணூறு வயசுக்கு மேல ஆன கிழவி ஒருத்தி இருக்கா. ஆண்டாளம்மானு பேரு. அவ வேறு யாருமில்லே. பழைய தேன்மொழிதான்.

புவனாவும் சங்கரும் நெருக்கமா பழகறதா அந்தக் கிழவிகிட்டே யாரோ சொல்றாங்க. அவ புவனாவ கூப்பிட்டு, 'யாருடி அந்தப் பையன்? ஊர்லேருந்து வந்து தங்கியிருக்கானாமே! என்கிட்ட அவனை அறிமுகப் படுத்தலியே,' என்றாள்.

கிழவி தங்கியிருக்கிற மாடி அறைக்கு அதிகமா யாரும் போறதில்லை. அவ இப்ப புவனாவுக்குக் கொள்ளுப்பாட்டி.

'உன்னை சிரமப்படுத்த வேணாம்னுதான் அவரை இங்க அழைத்து வரலே. இப்ப கூப்பிடறேன்னு சொல்லி, அவன் ரூமுக்குப் போகிறாள். அவன் இங்கே இல்லை.

மலைக்கோயில் பார்க்கத்தான் போயிருப்பான் என்று எண்ணி, அவள் அங்கே காரில் செல்கிறாள்.

முன்பே அவர்கள் இரண்டு முறை மலைக்கோயில் சென்று வந்தனர். அவனும் அந்த இடங்கள் தன் கனவில் வந்த இடங்கள்தான் என்று கூறியிருந்தான். அப்போது காரில் சென்று உடனே திரும்பியிருந்ததால், இப்போது அவன் நடந்தே போயிருந்தான்.

வழியில் வயதான யாரைப் பார்த்தாலும் நிறுத்தி, அந்த மலைக் கோயில் பற்றி விசாரிக்கிறான். அந்த இசைக் கலைஞன் பற்றிய கதை நிஜமா, அதற்கு சாட்சி உண்டா என்று அறிவது அவன் நோக்கமாக இருக்கிறது.

அன்று ஒரு துப்பு கிடைக்கிறது. ஒரு பெரியவர், 'எனக்கு ஒண்ணும் தெரியாது தம்பி. எப்பவோ அப்படி ஒரு சம்பவம் நடந்துச்சுன்னு சொல்லுவாங்க. கேட்டிருக்கேன். அது நிசமான்னு தெரியாது. அங்கால அந்த ஆத்துக் குப்பத்துல ஒரு தொண்டு கிழவன் இருக்கான்.

அவன் அந்த சம்பவம் நடந்தப்ப இருந்தவன்னு சொல்லிக்கிறாங்க' என்றார்.

அவன் அந்தக் குப்பம் சென்று, அந்தக் கிழவனைக் கண்டுபிடிக்கிறான். அந்தக் கிழவன் வேற யாருமில்லை. அந்த இசைக் கலைஞனுக்கு சவுக்கடி கொடுத்த அரண் மனை அடியாள்தான். அந்தக் கொலை அவன் மனசை மிகவும் பாதித்ததுண்டு. அவன் சங்கரைப் பார்த்ததும், 'அட. ராசு, ராசப்பா... நீ உயிரோடத்தான் இருக்கியா?' என்று வியந்து போகிறான்.

சங்கர், தான் ராசப்பா இல்லையென்று அவனுக்குப் புரிய வைக்க முயன்று, கிழவனிடம் அந்தப் பழைய கதையைக் கேட்டுக் கொண்டிருக்கும் போது தான் புவனா காரில் அங்கு வருகிறாள். பட்டணத்தில் படித்த அவளையும் அப்போதுதான் கிழவன் முதன் முதலாகப் பார்க்கிறான். வியந்துபோய், அவளேதான் அந்த பழைய புவனா என்று கூறுகிறான். அத்துடன்,

நீங்க இந்த ஜென்மத்துலயாவது காதலில் வெற்றி பெற்று இணைய வேண்டுமென்று கூறி வாழ்த்துகிறான்.

சங்கர் தன் கனவு பொய்யல்ல என்பதை உணர்ந்து, புவனாவுடன் காரில் திரும்புகிறான்.

ஆண்டாளம்மாவை அவர்கள் சந்தித்தபோதும் இதே கதை நிகழ்கிறது. அந்தக் கிழவியும் முதலில், 'நீ அந்த தொம்பக் கூத்தாடி ராசப்பன்தானே?' என்று கேட்டு மிரளுகிறாள். ஆவியோ, பேயோ என்றுகூட எண்ணுகிறாள்.

புவனா சகலமும் புரிய வைத்ததும் கிழவி சமா தானப்படுத்துகிறாள். ஜென்மங்கள் தோறும் சேர

முடியாமல் பிரிந்துபோன அந்தக் காதல் பறவைகள் இந்த ஜென்மத்தில் இணைகின்றன.

இதுல இன்னும் என்ன சொல்லணும். எங்கெல்லாம் டூயட் வைக்கணும்னு நீ பார்த்துக்க. கொமரு சொன்னத நான் உங்ககிட்ட ஒழுங்கா சொன்னனான்னு தெரியலை. நல்ல டைட்டில் யோசிச்சு சொல்லு. பப்ளிசிட்டி கொடுத்துடறேன். அடுத்த வாரம் பூஜை போட்டுரலாம். சி.எம்.மை. கூப்பிடுவோம், குத்துவிளக்கு ஏத்தி, படப்பிடிப்பை ஆரம்பிச்சு வைக்க. இனிமே எல்லாம் உன் கையிலதான்!"

கதிரேசன் மூச்சு விடாமல் பேசினார்.

தமிழ்க்கண்ணன் கொஞ்சம் திணறியே போனான்.

"சார், கொஞ்சம் டயம் குடுங்க. முதல்ல ஃபுல்லா ஸ்கிரிப்ட் ரெடி பண்ணுவோம். அப்புறம், பூஜைக்குப் போகலாம். ஏன்னா, அண்ணன் படம் பாருங்க... நல்லா செய்யணும்ல..."

"இத பாரு தமிழ்! திறமைசாலி கைய வச்சா எல்லாம் தானா நல்லா அமைஞ்சுடும். சில ஓவியர்கள் மையை உதறினாலே அருமையான சித்தரங்களா அமையும்னு சொல்வாங்க. அதுமாதிரி நீயும் கெட்டிக்கார டைரக்டர்னு பேர் எடுத்துட்டே. வீண் தயக்கங்களை உதறு. நீ சிகரங்களைத் தொடுற நாள் சீக்கிரமே வரும்!"

"ரொம்ப தேங்க்ஸ் சார். நீங்க பெரிய தயாரிப்பாளர். உங்க பேனர்ல அண்ணன் படம் பண்ண நான் குடுத்து வச்சிருக்கணும்!"

"பெரிய பேச்சு வேணாம். நீ எப்ப டைட்டில் சொல்லப்போறே? அதைச் சொல்லு தமிழ்!"

"ரெண்டு நாள்ல சொல்லிடறேன் சார்."

"ரெண்டு நாளா? நான் நாளை ஊட்டிக்குப் போறேன். கொமரு குணம் உனக்குத் தெரியாது. புடிச்சா ஒரே புடிதான். எள்ளுன்னா எண்ணெயா நிக்கணும். வேலைகளை உடனே ஆரம்பிக்கலேன்னா, மூஞ்சிய தூக்கி வச்சிக்கும். நீ இன்னிக்கே டைட்டில் சொல்லு. அப்புறமா போன்ல வேணா சொல்லு. நான் விளம்பர டிசைனோட தான் நாளைக்கு ஊட்டி புறப்படறேன். வைரமுத்துவை பிடிக்கணும். ஏ.ஆர். ரகுமானைப் புடிக்கணும். எனக்கு ஏகப்பட்ட வேலை இருக்கு. அவங் கிட்டே பேசினாதானே விளம்பரத்துல பேர் சேர்த்து டிஸைன் ரெடி பண்ண முடியும்..."

கதிரேசன் பேசிக்கொண்டே லெதர் பேக் திறந்து ரூபாய் நோட்டுக் கட்டுகள் சிலவற்றை எடுத்து வைத்தார்.

"சார், இதுக்கு என்ன சார் இப்ப அவசரம்... நான் அண்ணன் வந்தப்புறம் 'அங்க வந்து அட்வான்ஸ்' வாங்கிக்க மாட்டேனா..?"

"அங்க நீ வந்தா என்ன, இங்க நான் வந்தா என்ன? இந்த சம்பிரதாயமெல்லாம் கொமருக்குப் பிடிக்காது. அப்புறம் இதைக் கொமரு சொல்லித்தான் நான் தர்ரேன். ஐம்பதுதான் வச்சிருக்கேன். இது அட்வான்ஸ். இதை மறுக்காம உள்ர எடுத்துவை. உன் சம்பள விஷயம் பிறகு நாம மூணு பேரும் உட்கார்ந்து பேசலாம். நீ எதிர்பார்க் கறதுல அதிகமாதான் கொமரு நினைக்கும், பேசும், அது மட்டும் ஷ்யூர். அப்பநான் வரட்டா..."

கதிர் எழுந்து விட்டான்.

# 9

ஆதித்தகுமார் அந்த பிரமாண்டமான ஓட்டலின் பிரத்யேக அறையில், ஆடம்பரமான மெத்தையில் உறக்க மின்றி புரண்டு கொண்டிருந்தான்.

அங்கு எந்த வசதிக்கும் குறைச்சலில்லை. அதன் ஒருநாள் வாடகையே ஆயிரக்கணக்கில். அதன் உள்ளே நுழைந்த பிறகு ஓட்டல் அறை என்ற உணர்வே எழாது. அத்தனை லக்சுரிஸாக இருக்கும். பாஷ் டைப். வெளியே ஊட்டி முழுக்க மூடுபனி. குளிர் உதறும். அறையின் உள்ளே கதகதப்பான உஷ்ணம் பரவியிருக்கும். ஃபோம் மெத்தை பரவிய கட்டில்கள் பழங்கால அரண் மனைகளின் சப்ரகூட மஞ்சங்களை மிஞ்சும் ஜோடனை களுடன் கிடக்கும். கலர் டி.வி. உண்டு. ஸ்டார், சன், ஜெயின் என டிஷ் ஆண்டனா உதவியில் எந்நேரமும் உலக உருண்டையையே துழாவித் துளைக்கலாம். லட்சாதிபதிகள்தான் அங்கே தங்க முடியும். நடிகர்கள் தங்கலாம்-தயாரிப்பாளர்கள்தானே பில் செட்டில் செய்யப் போகிறார்கள்!

அப்படிப்பட்ட அந்த ஓட்டல் அறையில் என்ன குறை என்று ஆதித்தகுமார் தூக்கமின்றி புரளுகிறான்?

மிஸ். ரந்திகா ரூபேஷ் குப்தா-அடுத்த அறை எண்ணை விரல் முனையால் ஒற்றினால் போதும்; அவள் எடுத்துக்கூட என்னவென்று கேட்காமல், நேராகவே எழுந்தோடி வந்து நிற்பாள்-'கூப்பிட்டீர்களா சார்' என்று கேட்டு.

சொல்லப் போனால் அடுத்த அறை ஏற்பாடே ஒரு கண்துடைப்புக்குதான். அவன் அறையில் தங்கி இரவைக் கழித்தாலும் எந்த ஆட்சேபமும் எழப்போவ தில்லை. அவளும் அப்படி வரத்தான் செய்தாள்.

"படப்பிடிப்பு அலுப்பும் அசதியும் உனக்குதான் இருக்கும். நாம் பேசி நேரம் வீணாக்க வேண்டாம். நீ போய் முதல்ல உன் அறையில் கொஞ்ச நேரம் ஒய்வெடு..." என்று கூறி, அவன்தான் அவளை அண்ட விடாமல் தடுத்திருந்தான்.

அவன் ஏன் அப்படிச் சொன்னான்? அவனுக்கு என்ன ஆயிற்று? இந்த ஷெட்யூல் முழுக்கவே ஒரு மாதிரி இருக்கிறானே...

இன்னி தேதிக்கு ரந்திகா ரூபேஷ் மேல் சக ஹீரோ நடிகர்களுக்கே என்ன ஒரு கிரேஸ் என்பது ஊரறிந்த விஷயம். 'அந்த பம்பாய்க்காரிய போடுப்பா நடிக்க வரேன்' என்று இதர ஹீரோக்கள் ஜொள்ளர்களாய் லொள்ளு பண்ணுவதாகப் பத்திரிகைகளே கிசுகிசுக் கின்றன.

ரந்திகா அத்தனை அழகு. அவள் மேனி வண்ணம் சிவப்பா-வெளுப்பா-மஞ்சளா என்ற ஆராய்ச்சி, இண்டஸ்ட்ரியில் இன்னும் ஓய்ந்தபாடில்லை. செவ் வெண்ணெய் மூலம் செய்த சிலை என்றும்-வெண் பளிங்குப் பதுமை என்றும்-பொன்மஞ்சள் விக்கிரகம் என்றும் கவித்துவ உளறல்கள் கணக்கிலடங்கா.

அவனவன் பித்தம் தலைக்கேறிப் பெருமூச்சு விட்டுக் கிடக்க, இவன் ஏன் ஒதுக்கி வைத்து, உறக்கம் இழந்து தவிக்கிறான்?

ரந்திகா ரூபேஷ் குப்தா... சாரி. தமிழ்ப்பட உலகில் அவள் ரூபிகா என்று அழைக்கப்படுவதுதானே. உங்களுக்குத் தெரியும்? அடுத்த அறையில்-ஆதித்த குமாரின் அழைப்பு இதோ வரும் அதோ வரும் என எதிர்பார்த்து ஓய்ந்து, உறங்கியும் போனாள்.

இவன் மட்டும் உறங்காமல் புரளுகிறான். காரணம் இதுதான்...

தமிழ்க்கண்ணன் சொல்லிவிட்டுப் போன மறுஜென்மக் கதை அவனைப் பாடாய்ப்படுத்துகிறது. சொல்லப் போனால், அவனுக்கு இந்தப் பூர்வஜென்மம்-மறு ஜென்ம சமாசாரங்களில் துளியும் நம்பிக்கை கிடையாது அதுவரை.

அந்தக் கதை கேட்ட நாளிலிருந்து இரவுகளில் புத்தி விழித்துக் கொள்கிறது. ஏதேதோ கேள்விகள் புதிர்கள் ஏதேதோ காட்சிகள் அவன் மனத்துள் அணிவகுத்து ஓடுகின்றன. சொப்பன அவஸ்தையாக இருக்கிறது. தமிழ் சொல்லிவிட்டுப் போன அந்தப் பூங்குறிச்சி, கிராமம் அவன் கண்ணுக்குள் நிற்கிறது. அதே ஆறு, அதே மலை, அதே கோயில்... அதற்குச் செல்லும் படிகள்!

எப்படி இது சாத்தியம்! அவன் அப்படி ஓர் ஊருக்கு அதுவரை சென்றதில்லை...

**ம**றுநாள் கதிரேசன் வந்ததும் ஆதித்தகுமார் கேட்ட முதல் கேள்வி-

"ஏம்பா கதிரு, இந்தப் பூங்குறிச்சிங்கற கிராமம் எங்கே இருக்கு?" என்பதுதான்.

"பூங்குறிச்சியா? நீ எந்தப் பூங்குறிச்சிய கேட்கற-அங்க என்ன விசேஷம்... இரு... இரு. நீ சொன்ன பேரை நானும் கேட்ட மாதிரி இருக்கே..."

கொஞ்சம் யோசித்தபின், "அட, நம்ம தமிழ் சொன்ன கதையில வருது அந்த ஊர். ஆமா, அதுக்கு என்ன இப்ப திடீர்னு கேக்கறே?" என்றான்.

"இல்ல கதிரேசா... அப்படி ஓர் ஊர் உண்மைல இருக்குதா... இல்லே கற்பனையான்னு எனக்கு இப்ப தெரிஞ்சாகணும்."

"தெரியலேப்பா. நீ ஏன் அதுக்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கறே. கதைய கதையா பாரு. அ... ஆனா, தமிழ் சொல்லிச்சு-அந்தக் கதையை அது சின்னப்ப எங்கியோ கேட்டுச்சாம். நடந்த கதைனு யாரோ சொன்னாங்களாம். செகண்ட் ஹாஃப்ல கொஞ்சம் மாத்தணும்னு நீ சொன்ன விஷயங்கள சொன் னேன்ல்ல... அப்பதான் தமிழ் இப்படி சொல்லிச்சு."

"ஓ... அப்ப கதையை மாத்தக் கூடாதாமா?"

"அப்படி இல்லே கொமரு... தமிழ் ரொம்ப நல்ல பையன். புத்திசாலி. உன்மேல ரொம்ப மதிப்பு வச்சிருக்கு. அண்ணன் என்ன சொல்கிறாரோ அப்படி செஞ்சுடு வம்னு உடனே ஒத்துக்கிடுச்சு. இத பாரு விளம்பர டிசைன்..."

ஆதித்தகுமார் அதை வாங்கிப் பார்த்தான்.

டெய்லி பேப்பர்ல முழுப்பக்கம் வரப்போற விளம்பர டிசைன். அதில் பிரம்மாண்ட சைசில் சி.எம். குத்துவிளக்கு ஏற்றும் படம் ஒட்டப்பட்டிருந்தது.

'மலையோரம் வீசும் காற்று' என்று பெரிதாக-காற்று வீசும் பாணியில் எழுதப்பட்டிருந்தது.

அதன் கீழே அதிரடி ஹீரோ-ஆக்ஷன் புயல் ஆதித்தகுமார், ஏ.ஆர். ரகுமான், வைரமுத்து படங்கள் இருந்தன. படப்பிடிப்பு தளம், பூஜை-தேதி விவரங்கள்.

"தமிழ் போட்டோ அவசியம் ஒட்டிரணும்," என்றான் ஆதித்தகுமார்.

"சரி, ஒட்டிரலாம். பேப்பர்ல கொடுத்துடலாம்ல..."

"குடுத்துடு. புரொடக்ஷன் சைடு உன்னுது. கோ அஹெட். அப்புறம் இந்தப் பூங்குறிச்சி பத்தி தமிழ் கிட்ட விசாரி. நிஜமா அப்படி ஓர் ஊர் இருந்துச்சுனா அதை நான் பார்க்கணும்."

"நீ என்னப்பா சின்ன புள்ளயாட்டம்... இரு, இரு. ஒண்ணு மறந்துட்டேன். தமிழ் உங்ககிட்ட ஒரு வீடியோ கேஸட் கொடுக்கச் சொல்லிச்சு. ஐ திங்க் இது அந்த ஊருதான்னு நினைக்கிறேன். ஏன்னா, 'படப்பிடிப்பு இங்க வச்சுக்கலாம் சார், அந்தக் கதை சம்பந்தப்பட்ட ஊரு இது, ரொம்ப நல்ல லொகேஷன்'னு சொல்லிச்சு. இந்தா..."

கதிரேசன் கொடுத்த கேஸட்டை வாங்கி, டெக்கில் செருகினான் ஆதித்தகுமார். அடுத்த நொடியில் கலர் டி.வியில். பசேலென பூங்குறிச்சி காட்சியளித்தது. ஆறு ஓடிற்று. தோப்பு மரங்கள் தலையசைத்தன. பறவைகள் பறந்தன. நீல ஆகாயத்தை மண்ணோடு பொருத்தும் வரம்புகள் போல நீண்ட மலைகள் புலப்பட்டன. அதோ அந்தக் குன்று அதன்மீது அம்மன் கோயில்...

அவன் இதயம் ஏன் அத்தனை படபடப்பு காட்டு கிறது? சிகரெட் ஒன்று இரண்டு மூன்று என அவன் விரல் முனைகள் வழியே உதிர்ந்து கொண்டேயிருந்தன. மூட்டம் போட்டது போல் அந்த அறை முழுக்க புகை.

"கொமரு, எத்தினி தபா சொல்றது... இந்தச் சனியனை விட மாட்டேன்ற. ரொம்ப ஓவரா ஸ்மோக் பண்றப்பா நீ..."

"சாரி கதிர்... முடியலேப்பா. மனசு சரியில்லே..."

"மனசா... என்ன ஆச்சு! பழையபடி நீ அந்த மூதேவியை நினைச்சுக்கிடிருப்ப. உன்னோட பர்சனல் மேட்டர்ல எப்பவுமே நான் எல்லை மீறி தலையிட்ட தில்லை. நடிகன்னா நாலு பொண்ணுகளோட பழகாம இருக்க முடியாது. நீ முன்னேற ஆரம்பிச்சப்ப உன்னை கொஞ்சம் சுதந்திரமா விடறது நல்லதுன்னு நினைச்சி. கொஞ்சம் அதிகமாவே ஒதுங்கி நின்னுட்டமோன்னு நான் பலசமயம் கவலைப்பட்டதுண்டு. ஸ்ரீதாராவோட நெருங்கி பழகினே. ரெண்டு வருஷத்துல உன்னோட ஜோடி சேர்ந்து நடிச்ச அவளைத் திடீர் திருமணம் பண் ணினே. ஒண்ணரை வருஷம் உன்னோட வாழ்ந்தா. 'ஸ்ரீ தாரா நடிப்புக்கு முழுக்கு'ன்னு பேப்பர்லல்லாம் எழுதினாங்க. அவளும் பேட்டி குடுத்தா.

உனக்கு ரெண்டு மூணு படம் ஓடலே. உன் மார்க் கெட் அவுட்டுன்னே அவ முடிவு செஞ்சுட்டா. தெலுங்குப் படத்துல போய் நடிச்சா. 'ஸ்ரீதாரா மீண்டும் சினிமா பிரவேசம்'னு பேப்பர்ல வந்துச்சு. அடுத்த மூணு மாசத்துல அவ உன்னை டைவர்ஸ் பண்ணிட்டு, ஒரு தெலுங்கு நடிகனோட செட்டில் ஆயிட்டா. இன்னுமா அவ நினைப்பு-?"

" நீ தப்பா் நெனச்சுட்ட கதிரு. அது ஒரு கெட்ட கனவு. அதை சுத்தமா நான் மறந்தாச்சுப்பா-"

"பின்ன என்ன கவலை? நீ ஒரு கல்யாணம் பண்ணி கிட்டா என்ன? அத்தை வேறு உன்கிட்ட பேசி அலுத்துப் போய் என்னைப் பிடிச்சு அப்பப்ப உலுக் கறாங்க."

"ஐயோ கதிரேசா... புரியாம பேசறப்பா நீ. சொந்தக் காரங்க கூட்டம் ஒண்ணு, அம்மாவ அப்பப்ப பிரெய்ன் வாஷ் பண்ணிகிட்டே இருக்கு... தெரியும் எனக்கு. அத நாம அப்புறம் பேசுவம், இப்ப என் கவலை பூரா இந்தப் பூங்குறிச்சி பத்திதான்..."

"பூங்குறிச்சி பத்தி கவலைப்பட என்ன இருக்கு?"

"எப்படிச் சொல்றதுன்னு தெரியலே. கதை கேட்ட அன்னிலேந்து இந்த ஊர் என் கனவுல வந்துகிட்டிருக்கு. சொன்னா நம்ப மாட்டே. நான்தான் அந்தப் புல்லாங் குழல் இசைக் கலைஞன்னு மனசுக்குள்ள ஒரு குரல் சொல்லுது..."

"சர்தான், பூர்வ ஜென்மக் கதை உன்னை இந்தப் பாடுபடுத்துதா? நீ ரொம்ப அதுல இன்வால்வ் ஆயிட் டேனு நினைக்கிறேன். நடிக்கறப்ப கேரெக்ட்ரோட ஒன்றிப் போற மாதிரிதான் இதுவும்..."

"இல்ல கதிரேசா... உனக்கு எப்படிப் புரிய வைக் கிறதுனு எனக்குத் தெரியலே. ஏதோ ஒரு சக்தி என்னை அந்த ஊரை நோக்கி இழுக்குது. யாரோ என்னை விடாம அங்க 'வா, வா'னு கூப்பிடற குரல் காதுல விழுது. இதுக்கு என்ன சொல்றே?"

“இது பத்தி நான் ஒண்ணும் சொல்ல விரும்பலே. தியேட்டர்ல பக்திப்படம் பார்க்கறப்ப சில பெண்கள் சாமி வந்து ஆடறாங்க. அது அவங்க உள்மன எழுச்சி. அடங்கிக் கிடக்கற உணர்வுகள் இப்படி சில நேரம் தாறு மாறா வெளியில வரும். அது மாதிரிதான் உன்னோட உணர்வும். உன்னை காலாகாலத்துக்கும் நேசிக்கிற ஒரு பெண் துணை உனக்கு ரொம்ப அவசியம். அதுக்கு நீ நல்ல பொண்ணா பாத்துக் கல்யாணம் பண்ணிரணும். அப்படி இல்லேன்னா இது மாதிரி டிப்ரஷன்-மன அழுத்தம் பல மோசமான விளைவுகளை உண்டாக்கும்.”

“இல்லை கதிரேசா... அந்த ஊரை நாம உடனே பார்க்கணும். ஷூட்டிங்குக்காக லொக்கேஷன் பார்க்கப் போறதில்லையா... அதுமாதிரி நினைச்சுக்கயேன். இப்ப அது எங்க இருக்குனு தெரியணும்...”

“ஓ.கே. டன். நாம அந்த ஊருக்குப் போறம். கதை சொல்றப்பவே அந்த ஊர் சேலம் பக்கம்னு தமிழ் சொன்ன ஞாபகம் இருக்கு. நீ இன்னிய ஷெட்யூல் ஷூட் டிங்க முடிச்சுரு. உடனே நா,ம சேலம் புறப்பட்டுரலாம். ஓகே?” என்றான் கதிரேசன்.

“ஓகே...” என்று ஷூட்டிங் புறப்படத் தயாரானான் ஆதித்தகுமார்.

# 10

பூங்குறிச்சி மிகவும் அழகான ஊராகவே இருந்தது. சின்னதும் பெரியதுமாக ஏராள மலைகள். ஒரு பக்கம் காவிரி இருகரையும் தொட்டுத் ததும்பியபடி ஓடியது. அங்கிருந்து மிக அருகில்தான் மேட்டூர் அணை.

சேலம் வந்து இரவு தங்கி மறுநாள் காலை காரில் எடப்பாடி வழியாக பூலாம்பட்டி வந்து சேர்ந்திருந்தார் கள் ஆதித்தகுமாரும் கதிரேசனும். முன் ஏற்பாடுகளுக் காக சேலம் நகர விநியோகஸ்தர் இரண்டு ஆட்களை முன்னதாகவே அங்கு காரில் அனுப்பி வைத்திருந்தார். அவர்களில் ஒருவன் பரிசல் பிடித்து வைத்துக் காத்திருந்தான்.

ஆதித்தகுமார் அடையாளம் தெரியாதபடி எளிய உடைகள் அணிந்து வந்திருந்தான். அப்படியும் அந்த அதிகாலை வேளையில் பத்து இருபதுபேர் கூடி விட்டனர். 'டோய்-ஆதித்தகுமார் மாதிரி இருக்குடோய்' என்று ஒருவன் கூவ, செய்தி நொடியில் அந்தப் பகுதி முழுவதும் பரவ ஆரம்பித்திருந்தது.

"ஐயா, நீங்க ஈரோடு வழியா வந்திருக்கலாமுங்க. அங்கன நெருஞ்சிப்பேட்டை வந்து அப்படியே பூங் குறிச்சி போயிருக்கலாமுங்க. ஆத்தக் கடக்க வேண்டிய அவசியமில்லீங்க'' என்றான் சேலத்திலிருந்து வந்திருந்தவன்.

"தெரியும்பா. சீனு சார் சொன்னாரு. அவரையும் முக்கியமா பார்க்க வேண்டியிருந்துச்சு. அதான் சேலம் வந்தோம். உன்கூட வந்தவன் எங்கே?" என்றான் கதிரேசன்.

"முதலாளி நேத்தே போன்ல சொல்லி, கார் ஏற்பாடு பண்ணிட்டாரு. கார் வந்துருச்சான்னு பார்க்கத்தான் இவனை அக்கரைக்கு அனுப்பியிருக்கேன்..."

ஆதித்தகுமார் எதுவுமே பேசவில்லை. ஆறும் கரை நின்ற மலைகளின் எழிலும் அந்த மனோரம்யமான சூழலும் அவன் இதயத்தை ஆட்கொண்டிருந்தன. அவன் அதனோடு ஒன்றிப் போயிருந்தான்.

"கொமரு, இந்தப் பக்கம் எல்லாமே ஷூட்டிங் ஸ்பாட்ஸ்தான். பாக்யராஜ் 'பவுனு பவுனுதான்' படம் பூராவும் இங்கதான் எடுத்தாரு. தமிழ் லொக்கேஷன் தான் செலக்ட் பண்ணியிருக்கு. வந்த பத்துப் பதினைஞ்சு நாள் இங்க கேம்ப் போட்டுருவம்..." என்றான் கதிரேசன்.

அக்கரையில் செம்பவழ வண்ண மாருதி நின்றிருந்தது. பரிசலிலிருந்து இறங்கிய ஆதித்தகுமாரை ஓடிவந்து கைகொடுத்து, கரையேற்றினான் ஓர் இளைஞன். உண்மையில் பார்ப்பதற்கு அவனே ஒரு சினிமா நடிகன் போன்றிருந்தான் நல்ல நாகரிக உடை, வசதிச் செழிப்பு, வசீகர நிறம்.... அவனோடு ஒப்பிட்டால் ஆதித்தகுமார் நிறம் ஒன்றுமே இல்லை. அவன் கறுப்பு வகையறா.

"செல்வம் சார், நீங்களே வந்துட்டீங்களா?" என்ற சேலத்து ஆள், செல்வத்தை அவர்களுக்கு அறிமுகம் செய்தான்.

"ஐயா, தம்பி செல்வத்தோட சித்தப்பாதான் எங்க முதலாளி. பெரிய வீட்டுப் பிள்ளை."

செல்வம், ஆதித்தகுமாருக்கும் கதிரேசனுக்கும் வணக்கம் கூறினான்.

கதிரேசன், "தம்பி, நீங்க சீனு சாரோட அண்ணன் மகனா?" என்று கேட்டான்.

"இல்லீங்க. அவங்க மிஸஸ் எங்க சித்தி. அம்மாவோட சொந்தத் தங்கை."

மாருதியில் பயணித்தார்கள். செல்வமே காரோட்டினான். அக்கரையிலும் ஆட்கள் கூடத் துவங்கியிருந்ததால், அவர்கள் உடனே கிளம்பிவிட்டார்கள்.

பூங்குறிச்சி அதிக தூரமில்லை. சாலைதான் சற்று உள்வாங்கி வளைந்து நெளிந்து ஒரு மைல் கிடந்தது. அடுத்த சில விநாடிகளிலேயே மலையும் கோயிலும் கண்ணில் தென்படலாயிற்று. எதிரே தெரிந்த வேறொரு பெரிய மலையைக் காட்டி, "இதுல தாங்க ஐயா, ரொம்ப நாள் சந்தன வீரப்பன் இருந்தான். மலைமேல் சந்தன மரம்லாம் அதிகம்."

மாருதி மறுபடி திரும்பி காவிரியின் கரைதொட்டு செல்லலாயிற்று. அடிவாரத்தில் காரை நிறுத்தி, படிகளில் ஏற ஆரம்பித்தனர்.

ஆதித்தகுமார் யாரோடும் ஒட்டாதவன் போல் காணப்பட்டான். சில இடங்களில் தயங்கி நின்று, திரும்பித் திரும்பி எதையோ தேடின அவன் கண்கள்.

"தோப்பு எதுவும் கண்ணுல படலியே கதிரு" என்று அவன் மெல்ல கேள்வி எழுப்பியதும் செல்வம் பதில் சொன்னான்.

"இருந்துச்சு சார். முன்னால பெரிய தோப்பு இருந்துச்சு. தொம்பந்தோப்புன்னு சொல்லுவாங்க. களவாணிப் பயலுங்க ஆளாளுக்கு மரங்களை வெட்டி தின்னுபுட்டானுங்க."

அவர்கள் நிதானமாகப் படி ஏறினார்கள். ஆதித்தகுமார் அங்குள்ள ஒவ்வோர் இடத்தையும் கண்களால் துழாவினான். தொம்பந்தோப்பு என்ற பெயர் அவன் சிந்தையைக் கிளறியது.

மேலே அம்பாள் சந்நிதியில் தீபாராதனை நடந்தது. சின்னச் சிலை. சிறுமி உயரத்தில் அம்மன். அற்புதமான திரு உரு. களை சொட்டும் முகம். காலங்களைத் தாண்டி நிற்கும் கனிவான குறுநகை தவழும் வதனம். அபய வரத ஹஸ்த முத்திரை.

புவனம் காத்து நிற்கும் புவனேஸ்வரி முன் நின்று தொழும்போது ஆதித்தகுமாரின் மனம் விவரிக்க இயலாத பரவசத்திலாழ்ந்தது.

ஆராதனைத் தட்டுடன் குருக்கள் வந்தார். கற்பூரச் சுடரைக் கண்களில் ஒற்றிக் கொண்டு, தட்டில் நூறு ரூபாய் நோட்டு ஒன்றைப் போட்டான் ஆதித்தகுமார். அவர் கண்களில் மலர்ச்சி.

"அம்பாள் ரொம்ப சக்தி உள்ளவள். பாருங்கோ, எவ்வளவு பெரிய நடிகர், உங்களையே இழுத்துண்டு வந்துட்டாளே..." என்றார்.

ஆதித்தகுமார் லேசாகச் சிரித்துவிட்டு, அங்கிருந்து நகர்ந்து சுற்றுப் பிராகார வலம் துவங்கினான். குருக்களும் பின்தொடர்ந்தார். ஏதோ பேசவேண்டும் என்பதற்காக அவரிடம், "இந்த கோயில்ல ஒரு படப்பிடிப்பு வச்சுக்

கலாம்னு இருக்கோம் சாமி. அனுமதிப்பாங்கல்லே?" என்றான் கதிர்.

"பேஷா... தோ சின்ன பண்ணை உங்களோட வராரே. அவர்கிட்ட கேளுங்கோ. கோவிலே அவா ளோடதுதானே" என்றார் குருக்கள்.

ஆதித்தகுமார் இதில் தனக்கு சம்பந்தமில்லாதவன் போல் சற்று விலகி முன்னால் நடந்தான். அதோ, அந்த மண்டபம். அதைக் கண்டவுடன் அவன் உள்ளம் துள்ளியது. பாய்ந்து அதன் மீது தாவி ஏறினான்.

ஒரு சின்னக் குழந்தை போல அந்த மண்டபத்தில் அவன் துள்ளித் திரிவது செல்வத்துக்கே வியப்பு தந்தது.

'அந்த மண்டபத்தில் ஆதித்தகுமார் அப்படி என்ன தேடுகிறான்? பூர்வ ஜென்மத்தையா?'

"தொம்பமண்டபம்னு சொல்லுவா இதை. கூத்தாடி மண்டபம்னும் பேரு" என்று ஆதித்தகுமார் அருகில் சென்ற குருக்கள் கூறினார்.

"தொம்ப மண்டபம்னா..."

"அது ஒண்ணுமில்லே. கீழ் ஆற்றங்கரைல தொம்பந் தோப்புன்னு ஒண்ணு இருந்துச்சு. அதுல நரிக்குறவன், கழைக்கூத்தாடி மாதிரி நாடோடிக் கூட்டம் கூடாரம் போட்டுத் தங்கியிருக்கும். அதுல ஒரு தொம்பப்பையன் ரொம்ப நன்னா புல்லாங்குழல் வாசிப்பானாம். அவன் இந்த மண்டபத்துல வந்து சுவாமியை நினைச்சுப் புல்லாங்குழல் ஊதிண்டே உசிரை விட்டுப்பிட்டான்னு பெரியவா சொல்லுவா. ஆனா, இதைக் கூத்தாடி மண்டபம்னு சொல்றதுதான் சரி. ஏன்னா, கொஞ்ச

வருஷம் முன்னால வரைக்கும் இதுல திருநாள் சமயங் களில் கூத்து, கச்சேரியெல்லாம் நடக்கும். அந்தக் காலத்துல சதிர் ஆடற பொம்மனாட்டிகள் இதுல வந்து சதிராடுவா. அதனால, இது கூத்து மண்டபம்னு ஆயிடுத்து..."

அவர் விளக்கம் காலப்போக்கில் திரிந்துபோன ஒன்று என்பது ஆதித்தகுமாருக்கு நன்கு புரிந்தது. அத்துடன் அந்தத் தொம்ப இசைக்கலைஞன் சம்பவம் கற்பனையல்ல; உண்மை என்பதும் புரிந்தது.

"மணி ஒன்பதுக்கு மேலே ஆயிடுச்சு கொமரு. அப் புறம், வெயில் ஏறிடுச்சுன்னா சிரமம். நாம கிளம்பலாம்" என்று கூறினான் கதிரேசன்.

ஆதித்தகுமார் அரை மனசோடு படிகளில் இறங்கத் துவங்கினான். அப்போது-

"அந்தத் தொம்பக்கூத்தாடி கதை உண்மை தான்னு தோணுதுல்ல கதிரு. அவன் இங்கெல்லாம் உலவியிருக் கான்..." என்றான்.

"ஜமீன்காரங்கள கேட்டாதான் உண்மை தெரியும்..."

"நாம இப்ப ஜமீனுக்குப் போகப்போறமா...?"

"கண்டிப்பா சார். நல்லா இருக்கே நீங்க கேக்கறது! சித்தப்பா சொல்லலியா உங்ககிட்டே? இவ்ளோ தூரம் வந்து டிபன்கூட எங்க வீட்ல சாப்பிடாமப் போனா எப்படி? அப்புறப் படப்பிடிப்புன்னு வர்றப்ப, உங்களுக்கு எல்லா ஏற்பாடும் நாங்கதானே செய்யப் போறம். அதோட, இதுக்குல்லாம் பர்மிஷன் கேக்க வேணாமா நீங்க அப்பாகிட்ட...?"

கதிரேசன் குறுக்கிட்டு, "சரிதான். அப்ப எதிர்ப்பு வரவும் சான்ஸ் இருக்கு கொமரு. 'சீவலப்பேரி பாண்டி, பண்றப்ப, இது மாதிரியெல்லாம் எதிர்ப்புக் கிளம்பிச் சுன்னு பேப்பர்ல பார்த்தோம்ல. செல்வத்தை விட்டு ராதப்பா. பிடி, அவங்க வீட்ல டிபன் என்ன, சாப்பாடே வேணும்னாலும் சாப்பிட்டுருவம்" என்றான்.

செல்வம் கலகலவென்று சிரித்தான்.

"தமாஷா சொன்னேன் சார். எங்க மூலம் எந்த எதிர்ப்பும் வராது. நீங்க எங்க வீட்டுக்கு அவசியம் வரணும். அங்க உங்களுக்கு ஆச்சரியம் காத்திருக்கு."

"பிரம்மதுர்க்கம் ஜமீன் பண்ணை இதுதான். இதன் உள்ளேதான் அந்தப் பழையகால பங்களா இருக் கிறது. ஆனா, இப்ப அதுல யாரும் குடியில்லே" என்று செல்வம் ஓரிடத்தைக் காட்டினான்.

பசேலென வாழைத்தோட்டமும், வயல் வெளி களும், தென்னை மரங்களும் தெரிந்தன. தொலைவில் பேய்ப் படங்களில் வருவதுபோல் பழையகால ஸ்காண்டி நேவியன் டைப் ஜமீன் மாளிகை காட்சியளித்தது.

"ஏன் அதுல யாரும் இப்ப குடியிருக்கல? பாழடைஞ்சி கிடக்கோ?"

"பாழடையல. நிறைய டிராஜிடி நடந்த இடம் அது. அகால சாவு. தற்கொலைன்னு ஏகப்பட்ட இன்ஸி டெண்ட். ராசியில்லேன்னு விட்டுட்டாங்க-பெரியவங்க காலத்திலேயே. குடிதான் இல்லையே தவிர, அது புழக் கத்துல இல்லாம போயிடலே. கோடவுனா பயன்படுது. நெல்லுமூட்டைங்க அங்கதான் கிடக்கும். விவசாய தட்டு முட்டு சாமான்கள் அங்கதான் கிடக்கு. கோழிங்க வளர்க்

கிறோம். பண்ணை ஆளுங்க சமைச்சு சாப்பிடறது அங்க தான்."

சிறிய ஊர் இடப்பக்கம் ஒதுங்கி நிற்க, வலப்புறம் திரும்பி ஒரு தனிப் பாதையில் ஓடிய மாருதி, ஒரு காம்பவுண்டுக்குள் நின்றது.

"சார், நம்ம வீடு வந்தாச்சு. இறங்குங்க" என்றான் செல்வம்.

வீடா அது! அதுவும் பங்களாதான். ஆங்கிலேயர் காலத்துக் கட்டடம்.

வேங்கடசாமி- செல்வத்தின் தந்தை வெளியே வந்து வீட்டு முகப்பில் நின்றிருந்தார். ஆதித்தகுமார் காரிலிருந்து இறங்கியதும் அவர் வந்து கழுத்தில் ஜரிகை மாலையிட்டு, கைகுவித்து வணங்கி வரவேற்றார்.

"என்னங்க இது? இதெல்லாம் எதுக்கு?"

"ஆதித்தகுமார் எங்க வீட்டுக்கு வர்றதுன்னா சும்மாவா? ஊருக்குள்ளார உங்க ரசிகனுங்க ஏராளம். மன்றமே வச்சிருக்கானுவ. தெரிஞ்சா போஸ்டர் ஒட்டி, பேனர் கட்டில்ல உங்களை பேண்டு வாத்தியங்களோட நின்னு வரவேற்பானுவ. நாங்க சின்ன மாலைதானே போட்டோம்." என்று கூறிச் சிரித்து, கலகலப்பாக அவனைத் தோள் தழுவி, உள்ளே அழைத்துச் சென்றார்.

பெரிய கான்ஃபரன்ஸ் ஹால் போன்ற கூடத்தில் உணவு மேஜை முன் அமர்ந்தான் ஆதித்தகுமார். அருகில் கதிரேசன், எதிரே வேங்கடசாமி. அவரருகில் செல்வம் அமர, "பெரிய நாயகி, டிபன் கொண்டாம்மா!" என்று குரல் கொடுத்ததும், ஒரு பெண்மணி வெள்ளித் தட்டு

தட்டில் சுடச் சுட மல்லிகைப் பூ மாதிரி இட்லி கொண்டு வந்து வைத்தார்.

"இவங்கதான் என் மிஸஸ்" என்று அறிமுகம் செய்தார் வேங்கடசாமி.

ஆதித்தகுமார் கைகுவித்து வணக்கம் சொன்னான்.

அம்சமாக, வணங்கத்தக்க கம்பீர அழகுடன் இருந் தார் பெரியநாயகி. நாற்பதுகளைக் கடந்த வயது. அது தெரியாத செழுமை. கட்டமைப்பான திரேக வாகு. சிவந்த நிறம். அம்மா வேஷ நடிகைகள் யாரிடமும் காண முடியாத ஒரு தெய்விகப் பொலிவு. அதிக ஆராய்ச்சி கூடாதென்று ஆதித்தகுமார் விழிகளைத் தாழ்த்திக் கொண்டான்.

சாப்பிட ஆரம்பித்ததும், "உங்களுக்கு ஒரே சன்னா?" என்று ஏதோ பேச வேண்டுமே என்று கேட் டான் ஆதித்தகுமார்.

"பையன் இவன் ஒருவன்தான். பொண்ணு ஒண்ணு இருக்கு."

"எங்கே? காலேஜ் போயிருக்காங்களா?"

"அது ஒழுங்கா படிச்சா இப்ப காலேஜ் முடிச்சிருக் கணும். ஆனா, புத்திக் கெட்டுப் போச்சு. மாடி ரூம்ல போட்டு அடைச்சு வச்சிருக்கேன்."

"என்ன சொல்றீங்க? நீங்க ஊர்ல பெரிய மனிதர். நீங்க எதுக்கு பெத்த பொண்ணை ரூம்ல போட்டு அடைச்சு வச்சிருக்கணும்?"

"அதான் புத்தி சரியில்லேங்கறாங்கல்லே... சித்த சுவாதீனம் இல்லாத பொண்ணு போலிருக்கு. மெட்ராஸ்

வந்து வைத்தியம் பார்க்கலாங்களே...'' என்றான் கதிரேசன்.

''இல்ல தம்பி. என்பொண்ணு பைத்தியமில்லே. நல்லாதான் இருக்கா. ஆனா, சினிமா பைத்தியம்னு வேணா சொல்லலாம்.''

''என்னங்க இது? சினிமா பார்க்கறவங்கல்லாம் பைத்தியம்னா சொல்றீங்க? ஏழை பாழைன்னாலும் காசை ஊதாரித்தனமா செலவழிக்கறதா கோபப்படலாம். நீங்க வசதியானவங்க. தியேட்டர்ல வேணாம்னா டெக் வாங்கி வச்சு, வீடியோவுல பார்க்கச் சொல்லலாமில்லே. அதுக்குப் போயி, பொண்ணை ரூம்ல அடைக்கறது எதுக்கு?''

பேச்சை மாற்ற நினைத்த செல்வம், "என்ன சார் நீங்களே வீடியோவுல சினிமா பார்க்கறதை ஆதரிக் கிறீங்க? அப்புறம் சித்தப்பா வருத்தப்படப் போறாங்க. அவரோட திரைப்பட விநியோகத் தொழிலுக்கு முதல் எதிரியே இந்த வீடியோக்கள்தானே...'' என்று கூறிச் சிரித்தான்.

ஆதித்தகுமாரும் சிரித்தான். ஆனால் வேங்கடசாமி முகம் இறுகிக் கிடந்தது.

''செல்வம் உங்க அப்பாவுக்கு சினிமா-சினிமாக் காரங்கன்னா பிடிக்காது போலிருக்கு. அவரோட கொள் கைக்கு விரோதமா நீங்க என்னை இங்க கூட்டியாந்துட் டீங்க. ஆம் ஐ கரெக்ட்?''

''அதெல்லாம் ஒண்ணுமில்லே சார். நீங்க சாப்பிடுங்க. பூங்குறிச்சி மலைக் கோயிலுக்கு நீங்க வரப் போறீங்கன்னு நேத்து சித்தப்பா போன்ல சொன்னதே

அப்பாக்கிட்டதான். அவருதான் உங்களை வரவேற்க என்னை அனுப்பி வச்சாரு. வாசல்ல மாலை போட்டு வரவேற்றதும் அவருதானே?"

"நீங்க என்ன சொன்னாலும் சரி. நான் இந்த வீட்டுக்கு வந்தது, இங்க சாப்பிடறது.. அவ்வளவு சரியில் லேன்னு தோணுது. உள்ர ஒரு வயசுப் பொண்ணைப் பூட்டி வைக்கறது கொடுமை செல்வம். என்ன மன்னிச் சிருங்க. நான் புறப்படறேன்." எழுந்தே விட்டான் ஆதித்த குமார்.

வேங்கடசாமியும் எழுந்தார். "உட்காருப்பா. உங் கிட்ட கொஞ்சம் பேசணும். முதல்ல நீ சாப்பிடு!" என்ற அவர் குரல் தழுதழுத்தது. உட்கார்ந்தான்.

அவசரத்தில் மரியாதை குறைந்து போனாலும், அதில் ஒருவித மன நெருக்கம் புலப்பட்டது.

"தம்பி! நீ பெரிய நடிகன். நாட்டுல உன் மதிப்பு என்னன்னு எனக்கு நல்லா தெரியும். உன்னை நான் அவமதிக்க நினைப்பனா? என் பொண்ணு வெறும் சினிமா பைத்தியமில்லேப்பா. அது ஒரு சினிமா நடிக னை லவ் பண்ணுது. அவனை நெனைச்சு உருகுது. தபால் போட்டுச்சு. அவனும் வித் லவ்னு கையெழுத்து போட்டு போட்டோ அனுப்பிச்சான். அதை வச்சுக்கிட்டு பைத் தியமாட்டம், 'நா இவனதான் கட்டிக்கப் போறேன்னு உளறுது. படிப்பை பாதில விட்டுட்டு, ரெண்டு மூணு வாட்டி சேலத்துலேருந்து மெட்ராசுக்கே ரயில் ஏறிடுச்சு. புடிச்சு இழுத்தாறதுக்குள்ள போதும் போதும்னு ஆயிப் போச்சு. எவ்வளவு நிலபுலம்... பண பலம், செல்வாக்கு, பரம்பரைப் பெருமைகள் இருந்து என்னப்பா பிரயோ சனம்? எம் பொண்ணு நடவடிக்கையால நா இங்க தலை குனிஞ்சு கிடக்க வேண்டியதா போச்சு.

பெரிய வீட்டு விஷயம்கறதால எவனும் மூஞ்சிக்கு நேரா எதுவும் பேசப் பயப்படுவான். ஆனா, தலைக்குப் பின்னால? எப்படியோ ஓர்இடத்துல புடிச்சுக் குடுத்துட லாம்னு பார்த்தேன். முடியலேப்பா. 'கலியாணம்னா அன்னிக்கு எம் பொணம்தான் பாப்பீங்க. என் தற்கொலைய தடுக்க யாராலும் முடியாது. பல்ப கழட்டி கை வைப்பேன். கை நரம்பை அறுத்துகிட்டு ரத்தம் ஒழுக படுக்கையிலே பொணமாயிடுவேன்' னெல்லாம் பேசறா."

"ரூம்ல போட்டு பூட்டி வச்சா மட்டும் சரியாப் போயிருமா?"

"எப்பவும் அப்படி இல்லே. வெளியே விடாமப் பார்த்துக்கறோம். இன்னிக்குத்தான் அடைச்சு வச்சிருக்கு."

"ஏன்? சினிமாக்காரன் வரான்னு பயந்துட்டீங் களா? நான் உங்க பொண்ணு புத்தியைக் கெடுத்துட மாட்டேன். கூப்பிடுங்க. நா அதுக்கு இதமாப் பேசிப் புரிய வைக்கிறேன். சினிமா ஒரு மாயை. சினிமா நடிக னோட காதல் ஒரு போலி. அதை சினிமாவுல பார்க்கிற தோட நிறுத்திக்கணும். அது வாழ்க்கைக்கு ஒத்து வராதுன்னு எடுத்துச் சொல்றேன். ஆமா, அதுக்கு போட்டோ அனுப்பின நடிகன் யாரு?"

"நீங்கதான்..." என்றான் செல்வம்.

"என்னது? நானா...?" ஒரு கணம் ஸ்தம்பித்துப் போனான் ஆதித்தகுமார்.

"எனக்கு இதுல ஒரு உள் நோக்கமும் கிடையாது செல்வம். என்னை நம்புங்க. 'வித் லவ்'னா அன்புடன்கிற நெனப்புலதான். அப்படி எல்லா போட்டோவுலயும்

போட்டிருப்போம். தினம் நூறு பேருக்காவது போட்டோ அனுப்பறோம். இதுல, ஆண்-பெண் பேதமில்லே. போட்டோ கேக்கற ரசிகர்களுக்கு அனுப்புவோம். அவ்வளவுதான். இதோ, இந்தக் கதிர்வேலு தான் அதெல் லாம் பார்த்துக்கறது. வேணா, கேட்டுப் பாருங்க."

வேங்கடசாமி குறுக்கிட்டு, "தெரியுங்க தம்பி, உங்களை நான் குறையே சொல்லலே. இதுல உங்க தப்பு ஒண்ணுமே இல்ல. பெரிய நாயகி, போ! போய் அவளை இங்க கூட்டியா..."

அந்தப் பெண்மணி மாடி ஏறினார்.

"உங்க பொண்ணு என்னை நேர்ல பார்க்க ஆசைப் பட்டிருக்கும். அதை நீங்க தடுக்க அதுக்கு ஒரு வேகம் வந்து மெட்ராஸ் புறப்பட்டிருக்கும். காதல்னு நீங்க தப்பா நினைச்சிருப்பீங்க. சேலம் சீனு மூலமா நீங்களே உங்க பொண்ணோட எங்க வீட்டுக்கு வந்திருக்கலாம். சீனு, கதிரேசனுக்கு ரொம்ப தோஸ்த். என்னப் பார்க்கிறதும் அப்படி ஒண்ணும் கஷ்டம் இல்லை. இப்ப பாருங்க, எனக்கே தெரியாம நான் உங்க வீட்ல ஒரு பெரிய குழப் பத்துக்குக் காரணமா இருந்திருக்கேன்..."

"தம்பி... நீங்க சொல்றது சரிதான். சீனு என் சகலை. வசதி குடும்பப் பெருமைன்னு பார்த்தா, அவங்களைவிட நாங்க ரொம்ப உயரம். அங்க போய் எது கேக்கற நிலையும் எனக்கில்லே. அதோட, தம்பி... சினிமாவுக்கு நாலு பாஸ் வேணும்னா அவன் தருவான். ஒரு நடிகனை மாப்பிள்ளையா கொண்டான்னா அவனால முடியுமா? இதெல்லாம் எவ்வளவு பெரிய அசிங்கம்னு விவரிக்க முடியாது. ஏதோ இப்ப எதிர்பாராத விதமா நீங்க திடு திப்புன்னு எங்க வீடு வர்ற மாதிரி சந்தர்ப்பம் அமைஞ்

சிருச்சு. இல்லேன்னா, இதெல்லாம் நெனைச்சுப் பார்க்கற விஷயமா, சொல்லுங்க!"

வேங்கடசாமி பேச்சில் நியாயம் இருந்தது.

அந்தக் கூடத்தின் ஒரு ஓரம் இருந்த மாடிப் படிகளில் பெரியநாயகி இறங்கி வருவது தெரிந்தது. ஆதித்த குமார் அங்கே பார்த்தான். கூட இறங்கி வந்த அந்தப் பெண், 'அட... இந்தப் பெண்ணா புத்தி சரியில்லாதவள்! இதுவா என்மீது கொண்ட ஆசையால் சினிமா பைத்தியம் என்ற பெயரெடுத்திருக்கிறது!'

ஆதித்தகுமார் வியந்து போனான். அவள் அத்தனை அழகு. பிரம்மா அருமையான கவிதை எழுதும் மூடில் அவளை சிருஷ்டித்திருந்தான். ஜெயப்ரதா பத்து வருடத்துக்கு முந்தைய தோற்றத்தில் எதிரே நடந்து வருவது போலிருந்தது.

'அரைக் கிறுக்கு சாயலில் ஒன்று தலை கலைந்து, ஈ என இளித்து வரப் போகிறது' என்று நினைத்திருந்த ஆதித்தகுமார், அசந்து போய் உட்கார்ந்திருந்தான்.

சந்தன வண்ணமேனி... அதன் எழில் கூட்டும் இள நீல நைலக்ஸ், அதில் பொன் பொதித்தது போன்ற சம்கி வேலைப்பாடுகள்... முதுகில் கீழ்வரை அலை புரளும் கூந்தல். பளிச்சென்ற, எளிய அலங்காரங்கள்... சின்ன அசைவுகளிலும் நளினம் சிந்த, சிரித்த முகத்தோடு வந்து வணக்கம் கூறி நின்றாள். நடிகனைப் பார்த்த பரபரப்பு, பதற்றம் எதுவுமில்லை.

"உட்காரும்மா புவனா" என அப்பா சொன்னதும் அவனருகே அமர்ந்தாள்.

"நீங்களா என்னைப் பார்க்கணும்னா அழுது அடம் பண்ணினீங்க? உங்களையா ரூமுக்குள்ள போட்டு அடைச்சு வச்சிருந்தாங்க?"

புவனா கலகலவென சிரித்தாள். ஒலி சிதறவில்லை. ஒளி சிதறியது.

"நீங்க ரொம்ப கற்பனை பண்ணிருப்பீங்க. கொடுமை மாதிரி. அப்படி ஒண்ணுமில்லே. அம்மா, அப்பா, அண்ணன் ரொம்ப நல்லவங்க. ஆனா, கண்டிப்பு-ஓர் அதட்டு அது போதும் எனக்கு..."

"மெட்ராஸ் ஓடியாரப் பார்த்தீங்களாமே? இவ்ளோ நல்லப் பொண்ணு, தெளிவா பேசறீங்க, சிந்திக்கறீங்க... அது மாதிரி எப்படி?"

"ஓடியார்றதுன்னு இல்லே... கோவத்துல அந்த வேர்டை எல்லாரும் யூஸ் பண்ணிட்டாங்க. மெட்ராஸ் வர நெனைச்சேன். இவங்க அனுமதிக்கலே. சொல்லாம கிளம்பிட்டேன். அங்க என் ஃபிரண்ட் ஒருத்தி காலேஜ்ல படிச்சுகிட்டிருந்தா. அவ இருக்கிற தைரியத்துலதான் அப்படிக் கிளம்பிட்டேன். இதெல்லாம் ரெண்டு மூணு வருஷம் முன்னால நடந்து போன சம்பவம்."

"ஓ..." என்ற ஆதித்தகுமார். 'இப்போது தெளிவு வந்தாச்சு என்கிறாளோ!' என நினைத்தான்.

"என் படங்கள் நிறைய பார்ப்பீங்க போலிருக்கு!"

"இல்ல. அதிகம் பார்த்ததில்லே. உங்க படம்னு இல்லே... பொதுவா சினிமா இண்ட்ரஸ்ட் அதிகமில்லே. ஃபேமிலியோட எப்பவோ ஒண்ணு ரெண்டு போவோம். வீட்ல டி.வி. இருக்கு. அதில வர்ற படங்கள் பார்ப்போம்."

"என்னம்மா நீ... டீசண்ட் ஃபேமிலி, கண்டிப்பு, கட்டுப்பாடு எல்லாம் இருக்கு. உனக்கும் சினிமா மோகம்னு சொல்ல முடியலே. பின்ன என்னதான் இங்க பிரசினை? கட்டிக்கிட்டா என்னைத்தான் கட்டிப் பேன்னு நீ அடம் பண்ணினேன்னுகூட இவங்க சொன் னாங்களே?"

புவனா சற்றுக் கூச்சத்துடன் இப்போது தெளிந்தாள்.

"அது என்னன்னு சொல்றேன்..." புவனா தெளிவான குரலில், நிதானமாக, சுருக்கமாக அந்த பிரம்ம துர்க்கம் ஜமீன் கதையை, பூங்குறிச்சி மலைக் கோயிலில் மடிந்த புல்லாங்குழல் இசைக் கலைஞன் வரலாற்றைச் சொன்னாள்.

"தெரியுமா இந்தக் கதை?"

"அவங்க அடுத்த ஜென்மத்திலும் சேர முடியாம போயிருச்சு," என்று அந்த சிற்பி கதையை ஆரம்பித்தாள்.

"அதுவும் தெரியும் புவன்ா. இதை நாங்க கொஞ்சம் மாத்தி, ஒரு ரீஇன்கார்னேஷன் சப்ஜெக்ட் ஃபிலிமா எடுக்க யோசிக்கறோம். அதுக்கு லொக்கேஷன் பார்க்கத் தான் இப்ப இங்க வந்ததே!"

"ஓ மை காட்... என்ன சொல்றதுன்னே தெரியலே. இதை மிராகிள்னு சொல்லணும். இல்லன்னா இந்தக் கதைய சினிமா எடுக்கணும்னு உங்களுக்குத் தோணுமா?"

இப்போது அவளிடம் ஒரு பரபரப்பு- கண்களில் ஆர்வமின்னல் உதயமானது.

"ஏன்? இந்தக் கதைக்கு என்ன?"

"இது யாரோட கதைன்னு தெரியுமா உங்களுக்கு? அந்த இசைக் கலைஞன் சிற்பிலாம் யாருன்னு நெனைக் கறீங்க? அப்ப புல்லாங்குழல் - அப்புறம் உளி. இப்ப சினிமா காமிரா அவ்வளவுதான் வித்தியாசம். இது வியப் பாக இல்லை...? அதே சம்பவங்கள். அதே இடம். அதே கோயில்... அதே ஆண், அதே பெண், அதே மாதிரி எதிர் பாராத சந்திப்புகள். ஆச்சரியமா இல்லே! இதை என்னன்னு சொல்றது? கதையோட முடிவு இந்த முறை யாவது மாறுமா ஆதித்தகுமார் சார். இல்ல அதுவும் அதே மாதிரி முடிவுதானா? உங்க படத்துலயாவது அவங்க ஒண்ணு சேர்றாங்களா, இல்ல ஜனங்க இரக் கத்தை சம்பாதிக்க அந்தக் காதலர்களை சாக அடிச் சுடறீங்களா?"

கூர்மையான கேள்விகள்... சுற்றிலும் யார் இருப் பதையும் லட்சியம் செய்யாத உணர்வுடன் அவள் குரல் உச்ச ஸ்தாயிக்குச் சென்றது. பேசிக் கொண்டே அவள் மேஜை மீதிருந்த அவனது இடது கை மீது தன் வலது கை பதித்து ஓர் அழுத்து அழுத்தினாள். அது, அவனையே பிடித்து உலுக்குவது போலிருந்தது.

"என்ன இது புவனா? பி ரிலாக்ஸ்டு... விடு அவர் கையை!" கண்டித்தான் செல்வம்.

"பார்த்தீர்களா தம்பி. நாங்க இருக்கிறப்பவே எப்படி கத்தறா? இப்ப தெரியுமா அவ புத்தி!" தழு தழுத்தது, வேங்கடசாமி குரல், கோபமும் துளிர்த்தது.

"வெரி சாரி" என்றாள் புவனா.

"இப்ப என்ன ஆயிடுச்சுன்னு எல்லாரும் பதறு றீங்க? புவனா, நீ சொல்ல வர்றத புரியற மாதிரி சொல்லு. ப்ளீஸ்..."

"அதை நான் சொல்லிர்றேன் தம்பி. இனிமே ஒளிக்க ஒண்ணுமில்லே. அந்தத் தொம்பப்பயக் கதை எப்பவோ நடந்துச்சுன்னு எங்க ஜமீன்ல ஒரு பேச்சு உண்டு. அவனை அந்தப் பொண்ணு ஒரு ஆயில் பெயிண்ட வரைஞ்சு வச்சிருந்திருக்கு. ரெண்டு மூணு வருஷம் முந்தி உன் படத்து போஸ்டர சுவருங்கள்ல பார்த்த இதுக்கு ஒரே ஷாக். அவனோட படமும் உன் னோட சாயலும் அப்படியே அச்சு அசலா ஒண்ணா இருந்துருக்கு. அதிலேருந்து தான் இது ஒரு பிரச்சினை யான பொண்ணா ஆயிடுச்சு. எப்படியோ ஆளுகளை விட்டு அந்த பெயிண் டிங்கை ஜமீன் மாளிகையிலேருந்து இங்க எடுத்தாந்து வச்சுகிடுச்சு. உன் படம் வர்ற புஸ்தகம், பேப்பர் ஒண்ணு விடாம வாங்கி, கத்தரிச்சு உன் போட்டோ பூரா ஒட்டி ஆல்பம் தயாரிச்சு வச்சிருக்கு. உன்ன பத்தின சகல விவரமும் அதுக்கு அத்துப்படி!

ஒருநாள் இவ அம்மா, அண்ணனோட சேலத்துல உன் படம் பார்க்கப் போயிருக்கா. வில்லன் உன்னை சவுக்கால அடிக்கற சீன்ல திடீர்னு எழுந்து 'நோ... அவரை சாக அடிச்சுடாதீங்க!"ன்னு கத்தி ஆர்ப்பாட்டம் பண்ணிட்டு மயங்கி விழுந்திருக்கா. அப்புறம்தான் இவ மனசுல இருக்கற பயங்கள், கற்பனைகள் எங்களுக்குப் புரிய ஆரம்பிச்சுது. என்ன சொல்லியும் சமாதானம் ஆகலை. திருந்தலே. உன் பேச்சு வந்தா வீடே அமளி, துமளி தான்"

மவுனமாகத் தலை கவிழ்ந்து அமர்ந்திருந்தாள் புவனா. "சார் அந்தப் படத்தை நாங்க பார்க்கலாமா?"

"ஓ... அதுக்கென்ன? தாராளமா பாருங்க. ஆனா, இதோட பைத்தியக்காரத்தனத்தை நீங்க நம்பணும்னு

அவசியமில்லை. செல்வம், மேலே அழைச்சிட்டு போப்பா. புவனா, நீயும் போ"

"இல்லீங்க. அவங்க வேணாம். நீங்க மட்டும் வாங்க."

வற்புறுத்தவே, அவர் எழுந்து நடந்தார். கதிரேசனையும் அழைத்துப் போனான் ஆதித்தகுமார்.

மாடி அறையில் அந்த ஓவியம் இருந்தது. பார்த் தான். பிரமித்தான். மேஜை மீது அவன் படங்கள் ஒட்டிய ஆல்பம் கிடப்பது கண்ணில்பட்டது.

அவன் திடீரென்று வேங்கடசாமியின் கால்களைக் குனிந்து தொட்டான். பதறிப் போன அவர், "அடடே என்னப்பா நீ... என்ன இதெல்லாம்? எழுந்தரு!" என்று அவன் தோள் தொட்டுத் தூக்கினார்.

"பைத்தியக்காரப் பொண்ணுப்பா அது. இந்த ரூமுக் குள்ளார நான் இதுவரை வந்ததில்லே. இன்னிக்குத் தான் உன் வற்புறுத்தலாலே வந்தேன். எல்லாரும் சொன்னாங்க. இந்தப் படம் உன்னை மாதிரியேதான் இருக்குன்னு. அது நிஜங்கிறதை நானே இன்னிக்குத் தான் பார்க்கறேன்."

"ஐயா, அது கிடக்கட்டும் விடுங்க. நான் உங்களைக் கூப்பிட்டது அதுக்கில்லே. பூர்வ ஜென்ம பந்தமோ, இல்லையோ. உங்க பொண்ணு என்னை இவ்வளவு தீவிரமா நேசிச்சிருக்கு. நானும் மனைவி இல்லாம - மறு கல்யாண யோசனையோடதான் இருந்தேன்.

அம்மா வற்புறுத்தலை மீற முடியலே. நான் நல்ல வனோ, கெட்டவனோ எனக்குத் தெரியாது. நடிகன்னா நாலு விதமாகவும் பேசுவாங்க, எழுதுவாங்க. ஆனா, நிச்சயமா சொல்றேன். உங்க பொண்ணை நான் கண்

ணுக்குள்ள வச்சு காப்பத்துவேன். உங்க பணம் சல்லிக் காசு வேணாம். உங்க பொண்ணை மட்டும் எனக்குக் கட்டி வச்சிருங்க. கதிரு, என்னப்பா நிக்கறே? ஐயா கிட்டே பேசேம்பா...''

ஆதித்தகுமர் தழுதழுத்த குரலில் பேசினான்.

அடுத்த நாள் பத்திரிகைகளின் தலைப்புச் செய்தியாக 'பிரபல நடிகர் ஆதித்தகுமார் திருமணம்-கிராமத்துப் பெண்ணை மணக்கிறார். தமிழக முதல்வர் தலைமையில் திருமணம் நடைபெற இருக்கிறது' என்று இடம் பெற்றது.

புவனாவின் பூர்வ ஜென்மக் கதை பற்றி சில பத்திரிகைகள் பக்கம் பக்கமாக எழுதித் தள்ளின.

தமிழ்க் கண்ணன் பெயரும் தாராளமாகவே அடி பட்டது. 'கதை நிஜமானது' என்று அவனும் பேட்டிகள் கொடுத்தான்.

**'மலையோரம் வீசும் காற்று'** படப்பிடிப்பு என்ன ஆயிற்று என்றுதானே கேட்கிறீர்கள்?

கல்யாணம் அடுத்தமாதம் பத்தாம் தேதி சார். அதன் பிறகு படப்பிடிப்பு ஆரம்பமாகிவிடும். உண்மைக் கதை-அதுவும் பூர்வ ஜென்ம கதை கிடைத்திருக்கிறதே... விட்டு விடுவார்களா என்ன? உங்க ஆதரவு உண்டுல்லே!

■ ■ ■

கங்கை